Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 18.00

දිනමුරසු වාරමලර් ஜூலை 21 - 27, 2005

# வாரமலர்
# தினமுரசு

THINAMU... WEEKLY முரசு 623



## அநாதரவாகும் சுனாமி நிவாரணம்

## தேசியத் தலைவரின் நீங்காத நினைவுகள்

## சந்தியாவுடன் ஒரு சந்திப்பு

## அரசியல் பின்வாங்கலும் ஆயுத முன்னெடுப்பும்

## வீதியில் விரியும் விபரீதங்கள்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## புதிய மனிதராக வாழ்வோம்


அஞ்ஞான இருளை அகற்ற மெய்ஞ் ஞான அறிவைப்பெற வேண்டும். விஞ்ஞான உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மிக வேகமாக நாகரீகம் பண்பாடற்ற பாதி ஆடவரை வளர்த்துள்ளது. ஆசாரமற்ற அவரவர் மதக் கோட்பாடற்ற குறுகிய சிந்தனையில் நாம் குழியில் விழுந்து எழ முடியாமல் தடுமாறுகின்ற தழம்பலில் உள்ளோம்.

இந்த இருண்ட நிலையிலேயே எமது எதிர்காலமும் செல்லுமாயின் நாம் கலை, கலாசார, பண்பாடு, மத அனுஷ்டானமற்ற மந்தைகளாகவே வாழ்ந்து மடிவோம்.

புனிதமும், புத்தூக்கமும் கொண்டு ஆன்மீக வழியில் அன்பை ஆழமாக நேசிக்கும் மத அனுஷ்டானங்களை மனதில் பதித்து, ஆறறிவு ஜீவனுக்குரிய மனிதத்தை நேசித்து, எல்லாம் வல்ல இறையருளை எண்ணி - இவ்வுலக வாழ்வியலில் எல்லோரையும் இந்நாட்டு மன்னர்களாக எண்ணி - ஜாதி பேதங்களை மறந்து, தன்னலத்தினைத் துறந்து பொது நலப்பணியினை மேற்கொண்டு புதிய மனிதராக வாழ முயல்வோமாக!

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர்- 06.

# ஆன்மீகம்



## மனுஷ குமாரத்திகளும் தேவ குமாரத்திகளும்

கர்த்தருடைய பெரிய நாள் சமீபித்திருக்கிறது; அது கிட்டிச் சேர்ந்து மிகவும் தீ விரித்து வருகிறது; கர்த்தருடைய நாளென்கிற சத்தத்துக்குப் பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங் கசந்து அலறுவான். (செப்பனியா 1:14) கர்த்தராகிய இயேசு வரப்போகிறார். அதற்கான அடையாளங்களை நாங்கள் இப்போது காண்கிறோம். நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷ குமாரன் காலத்திலும் நடக்கும். (மத்தேயு 24:37) இன்றைய நாட்களிலும் அதே காரியங்கள்தான் நிகழ்கின்றன. மனுஷ குமாரத்திகள் சௌந்தரியமுள்ளவர்களாயிருந்தார்கள் என்று வேதம் கூறுகிறது. (ஆதியாகமம் 6:12.) சௌந்தரியம் என்பது அழகை மெருகூட்டுதல் என்பதாகும். 'பெண்கள் மற்றவர் தன்னைப் பார்க்க வேண்டும் என்றே அலங்கரித்தல்' இதுவும் உலக முடிவின் ஒரு அடையாளம்தான். நம்முடைய பெயர் கிறிஸ்தவப் பெயராக இருப்பதால் பரலோகம் செல்லலாம் எனக் கனவு காணுதல் தவறு. சௌந்தரியம் வஞ்சனையுள்ளது. அழகும் வீண். கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரியே புகழப்படுவாள். (நீதி 31:30) சகோதர, சகோதரிகளே! நாம் தேவனுடைய குமாரரும், குமாரத்திகளுமாயிருக்கிறோம் என்பதை நினைவில் கொள்வோம். எமது இருதயத்தின் அலங்காரத்தை தேவன் பார்க்கட்டும். ஆமேன்.

-போல் ஜோன், தெல்தெனிய.


## பானங்கள் அருந்தும் ஒழுங்குகள்

01. உட்கார்ந்து கொள்ள வேண்டும்.
02. வலது கையினால் பருக வேண்டும்.
03. பருகுமுன் தண்ணீரையோ அல்லது வேறு பானங்களையோ பார்த்துக்கொள்ள வேண்டும்.
04. 'பிஸ்மில்லாஹ்' கூறி அருந்த வேண்டும்.
05. ஒரே மூச்சில் குடிக்காமல் எடுத்தெடுத்து மூன்று முடக்குக்குக் குறைவில்லாமல் குடிக்க வேண்டும்.
06. தண்ணீருக்குள் மூச்சுவிடக் கூடாது.
07. தாகத்தைத் தீர்த்துவைத்த எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் 'அல்ஹம்துலில்லாஹ்' என்று கூற வேண்டும்.

"நீங்கள் நின்றுகொண்டு ஏதாவது பானங்கள் அருந்தினால் அதை வாந்தி எடுத்துவிடுங்கள்" என்று ஒரு ஹதீதின் கருத்துண்டு. எனவே எந்தப் பானங்கள் அருந்தினாலும் உட்கார்ந்து கொண்டுதான் அருந்த வேண்டும்.

-முஹம்மது ஹஸனி, கல்முனை - 07.

## கவிதைப் போட்டி இல.620




பரிசுக்குரிய கவிதை

### புரியவில்லையே!

உண்மையை
எழுதியதற்குக் கிடைத்த
பரிசா அல்லது
பொய்யை எழுதாததற்குக்
கிடைத்த பரிசா?
புரியவில்லையே!

- எஸ்.பி.பி.கணேஷ்,
கொழும்பு - 02.

## கவிதைப் போட்டி இல.623



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 27.07.2005

கவிதைப் போட்டி இல.623
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### என்ன செய்யப் போகிறீர்?

விடுதலைப்
போராளிகளுக்கு
விலங்கிட்டு விட்டீர்.
விடுதலையின் பேரில்
பயங்கரவாதம்
புரிவோரை
என்ன செய்யப்
போகிறீர்....?

- சங்கம ஹிஷாம்,
திருகோணமலை.

### காலம் எப்போது மாறும்?

நியாயத்தின்
கைகளுக்கு
விலங்கு!
அநியாயத்தின்
கழுத்துக்கு மாலை
இந்தக் காலம்
எப்போது
மாறும்!

- இர்ஷானா-மீராமுகைதீன்,
ஏறாவூர் - 03.

### பூட்டு

சர்வாதிகார நாட்டில்
உன் கைக்கு விலங்கு;
என் வாய்க்குப் பூட்டு.

- யூ. செல்லத்தம்பி,
கல்முனை - 03.

### நீதியும் விலங்கும்!

நாங்கள் எங்கும்
வருவோம் விலகுங்கள்!
நீங்கள் இங்கு
வந்தால் விலங்குதான்...!

- திருமலை முல்லை,
திருமலை.

### யார் போட்டது?

தேசியம் என்றும்
இனம் என்றும்
தமிழினத்தின் - உயிர்
குடிக்கும்
இவருக்கு - யார்
போ...ட்....ட....து!

- ச. ஜெயகரன்,
மட்டக்களப்பு.

### விலங்கு

நண்பனே!
விலங்கிடப்பட்டது
உன் கைகள்
மட்டுமல்ல....
நமது நாட்டின்
ஜனநாயகமும் தான்.

- உ.லெ.நபீர்,
மருதமுனை.



### ஏன் கைவிலங்கு?

சம உரிமை கேட்டாயா?
சுயமாக நினைத்து நீ
முரணான கருத்துரைத்தாயா?
வரி கட்ட மறுத்தாயா?
பிள்ளைத் தானத்துக்குப்
பின்னடித்தாயா?
உளவறியச் சென்றாயா?
உனக்கேன் இக் கைவிலங்கு?

- சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### காலம் மாறிப் போச்சு!

மாட்டிக்கிட்டு
முழிக்கிறான்
நிரபராதி!
வெளியில் இருந்து
வேடிக்கை பார்க்கிறான்
குற்றவாளி!

- கமால்தீன்-அல்-ஆஸாத்,
ஏறாவூர் - 03.



### மனித விலங்கு

விலங்குகளுக்கில்லா
விலங்கு,
மனிதனுக்கு மட்டும்
மனிதனால்
படைக்கப்பட்டதே - இவ்
விலங்கு!

- நா.ஜெயபாலன்,
பிபிலை.

### காலம் வரும்!

உனக்கு - விரோதிகள்
இட்ட விலங்கு - ஒரு
நாள்
உடைந்து தெறிக்கும்
உண்மை துலங்கும்!

- காமீம் செய்னுலாப்தீன்,
கிண்ணியா - 05.

# உங்கள் பக்கம்

## லெமலியர் தமிழ் வித்தியாலய குறைகள் தீருமா?

மத்திய மாகாணத்தின், நுவரெலியா மாவட்ட ஹட்டன் வலயக் கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கும். நு/லெமலியர் தமிழ் வித்தியாலயம் அத்திவாரமிட்ட நாள் முதல் இன்று வரை கவனிப்பாரற்ற நிலையிலேயேயுள்ளது. இருபதடி நீளம், பதினைந்தடி அகலம் (20x15) கொண்ட அறையிலேயே ஏறத்தாழ நூறு (100) பிள்ளைகள் கல்வி பயில வேண்டிய நிலை. தரம் ஒன்று முதல் ஐந்து வரையிலான வகுப்புகளைக் கொண்டு இயங்கும் இப்பாடசாலையில் தளபாட, கட்டிட, ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதோடு, சுகாதார வசதி இன்மையும் நிலவுகின்றது. குடிநீர், மலசலகூட வசதி, விளையாட்டு மைதான வசதிகளும் இல்லை. பாடசாலையில் கட்டிட வசதி இன்மையால் வாகனத் தரிப்பிடத்திலேயே தரம் மூன்று பிள்ளைகள் கல்வி பயில வேண்டிய நிலையுள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் பயிலும் இப்பாடசாலையின் தரத்தை உயர்த்தி, எதிர்கால மலையக இளைஞர், யுவதிகளின் வாழ்க்கை சிறக்க, அவர்களின் கல்வி வளர வழிவகுப்பதோடு, எங்கள் எதிர்கால சந்ததியினரின் அவல நிலையைப் பொறுப்பெடுத்து இவ்வசதிகளைச் செய்து கொடுத்து அவர்கள் சிரமமின்றி கல்வி பயில வழி அமைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்அதைச் சமர்ப்பிக்கின்றோம். எதிர்கால சந்ததியினரின் கல்விக்கான அடிப்படை வசதிகளை குறிப்பாகக் கட்டிட வசதி, தளபாட வசதி, ஆசிரியர் பற்றாக்குறைகளை விரைவில் நிவர்த்தி செய்து தருமாறு அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழையமாணவர் சார்பாக வேண்டிக்கொள்ளுகின்றோம். எமது வேண்டுகோள் முரசினூடாக பிரசுரமாகி உரியவர்களின் காதில் போய் எட்ட முரசு வழிவகுக்கும் என்று நம்புகின்றோம்.

-பழைய மாணவன்
அ.கங்காதரன், தலவாக்கலை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வாசகர் சாலை

### அன்பின் முரசே!

வியாழன் தோறும் நீ சுமந்து
வரும் ஆக்கங்கள் சூடு
சுவை, சுவாரசியம்
குறையாமல் உள்ளது.
அரசியல் தொடர்கள், சினிமாச்
செய்திகள், லேடீஸ் ஸ்பெஷல்
என்பன சூப்பராய் உள்ளன
மேலும் அதை விடச் சிறப்பாக
எதிர்வரும் வாரங்களில்
வெளியாக வேண்டுமென்ற
எமது ஆசையை நிறைவேற்று
முரசே!

- மூர்த்தி, திருகோணமலை.

### முத்தான தினமுரசுக்கு!

நீ சுமந்து வரும் ஆக்கங்கள்
கவிதைகள், சிறுகதைகள்,
தொடர் கதைகள் என்பன
சிறப்பாக உள்ளன.
பாராட்டுக்கள் ஆனால்
- அரசியல் விடயங்களில்
மலையக மக்களுக்கு ஏன்
இந்த ஓர வஞ்சனை?
மலையகத்தின் அரசியல்
விடயங்களைப் பற்றியும்
உன்னில் அறிய ஆவலாக
உள்ளோம். எமது ஆசை
நிறைவேறுமா முரசே!

மலையக வாசகி, தமயந்தி.

### முரசுக்கு வணக்கங்கள்!

இவ்வார முரசில் இடம்பெற்றிருந்த
அழகு ஆபத்து என்ற வெள்ளை நாகப்
பாம்பைப் பற்றிய விளக்கம் எமக்கு
பயனுள்ளதாக இருந்தது. மேலும்
இவ்வார முரசில் வெளியான புதிய
பகுதியான சினிமா நட்சத்திரங்கள்
முகவரியும் பல வாசகர்களை
குஷிப்படுத்தியுள்ளது. மேலும்
இவ்வாறான புதுமையான
ஆக்கங்களை சுமந்து வர
வாழ்த்துகிறோம்.

கண்டி வாசகி, அபிநயா.

### முரசுக்கு நன்றி!

பக்கச் சார்பின்றி நடுநிலையுடன்
செய்திகளைச் சுடச் சுட தரும்
உமது தைரியம் யாருக்கு வரும்
எத்துணைப் பத்திரிகைகள்
வெளிவந்தாலும் உனது வீரம்
அவர்களுக்கு வருமா பத்து?
ஆண்டுகளுக்கு மேலாகப்
போட்டியில் என்றும் முன்னணியில்
இருக்கும் உனக்கு வாசகர்களாகிய
எமது பாராட்டுக்கள். உனது
வாசகன் என்ற வகையில் எமக்கு
பெருமை தேடித் தந்தாய். நன்றி
முரசே!

இப்படிக்கு
அன்பு வாசகன், வாகீசன்,

# போர் மூளாது அச்சம் தேவையில்லை

## அரசு உறுதி; இந்தியாவும் நிலைமையை அவதானிக்கிறது

நான்காவது ஈழ யுத்தம் எந்த நேரத்திலும் ஆரம்பிக்கக் கூடிய சூழ்நிலை நிலவுவதாக நாடு பரந்த ரீதியிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கிலும் நிலவுகின்ற அச்சம் அர்த்தமற்றது என்று அரசாங்க சமாதானச் செலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். யாழ்ப்பாண ஓட்டோ சாரதிகளுக்குப் புலிகள் ஒருநாள் ஆயுதப் பயிற்சியளித்தமை குறித்தும், வன்னிக்கு இடம் பெயருமாறு யாழ்.குடா நாட்டிலுள்ள பல பகுதியைச் சேர்ந்த மக்களை புலிகள் கேட்டுக்கொள்வதாகவும் சுட்டிக்காட்டிக் கேட்டபோது அந்த அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார். யுத்தம் உடனடியாக ஏற்படக்கூடிய சாத்தியம் ஏதுமில்லையென்ற போதிலும் எந்த நிலைமையையும் சமாளிக்கக் கூடியதாக ஆயுதப் படையினரும் அரசாங்கமும் உஷார் நிலையிலிருப்பதாகவும் அவர் கூறினார்.

யுத்தப் பீதியை ஏற்படுத்தும் முயற்சிகளில் வடக்கு, கிழக்கிலுள்ள தீய சக்திகள் மட்டுமல்ல, தெற்கிலுள்ள யுத்த வெறி கொண்ட அரசியல்வாதிகளும் மற்றும் சமூக, சமய முக்கியஸ்தர்களும் ஈடுபட்டுள்ளனர் என்பது உண்மைதான். உத்தேச வடக்கு, கிழக்குப் பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சிலரைக் கலவரமடையச் செய்துள்ளது. இத்தீர்ப்பில் சில ஷரத்துக்களே அரசியலமைப்புக்கு முரணானவை என்றும் பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படக் கூடியதென்றும், ஜனாதிபதிக்கு அதற்கான அதிகாரமுண்டென்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. உயர் நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளிவந்ததும் மீண்டும் புலிகளுடன் பொதுக் கட்டமைப்புத் தொடர்பாகக் காத்திரமான பேச்சுவார்த்தை நடத்தப்படுமென்றும் அவர் சொன்னார். தற்போது கூட புலிகளின் சமாதானச் செயலகத்துடன் நாம் தொடர்பு கொண்டுள்ளோம் என்றும் அவர் சொன்னார். அமெரிக்கா சென்றிருந்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் விஜயம் செய்த சில இந்திய அதிகாரிகளுக்கும், அமெரிக்க அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடல்களின் போது இலங்கையின் நிலைவரம் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

இலங்கையில் எழுந்துள்ள புதிய சூழ்நிலை தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு என்னவென்று இலங்கைப் பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவரைக் கேட்டபோது, இந்தியா நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருகிறது என்று பதிலளித்தார்.

## வடக்கிலேயே அதிக பொருளாதார வளர்ச்சி

"யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் நாட்டில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை மிகத் துரிதமான பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. இதற்காகப் புலிகளோடு இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்ட ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்கவைப் பாராட்ட வேண்டும்" என்று. அரசியலமைப்பு விவகார அமைச்சர் டியூ குணசேகரா கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார். யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒரு வருடம் கழிந்த பின்னர், வடக்கில் மூன்று சதவீதமாகவிருந்த பொருளாதார வளர்ச்சி இப்போது 12.6 சதவீதமாக வளர்ச்சி கண்டுள்ளது. முழு நாட்டையும் பொறுத்தவரை மிக அதிகமான பொருளாதார வளர்ச்சி வடக்கிலேயே ஏற்பட்டுள்ளது. முன்னர் கிழக்கில் நான்கு சதவீதமாகவிருந்த பொருளாதார வளர்ச்சி, இப்போது பத்து சதவீதமாக வளர்ச்சி கண்டுள்ளது. தேசிய பொருளாதார வளர்ச்சி ஐந்து சதவீதமாக உயர்ந்துள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் கொலைகளும் குறைந்துவிட்டன என்றும் அமைச்சர் கூறினார்.

## ஒன்பது சிறுவர்கள் விடுவிக்கப்பட்டனர்

தமது படையணிகளில் இணைந்து கொள்ள வந்த ஒன்பது சிறுவர்களைக் கடந்த 16ஆம் திகதி பெற்றோர்களிடம் கையளித்ததாகப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது. கிளிநொச்சியில் இக் கையளிப்பு இடம்பெற்றுள்ளதாகவும் அறிவித்துள்ளனர். ஊர்காவற்றுறையில் இரு வாரங்களுக்கு முன்னர் பதினாறு சிறுவர்களைப் புலிகள் கடத்திச் சென்றுள்ளனர். இவர்களில் ஐந்து சிறுவர்கள் புலிகளின் பிடியிலிருந்து தப்பியோடி விட்டனர். யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலய மாணவிகள் மூவரைப் புலிகள் கெற்பலிக் கடலுக்கூடாகப் பயிற்சிக்கென அழைத்துச் சென்றனர். இவர்களில் ஒருவர் அவர்களின் பிடியிலிருந்து தப்பி கொழும்பு வந்து சேர்ந்துள்ளார். இவ்வருடத்தின் முதல் நான்கு மாதங்களிலும் 137 சிறுவர், சிறுமிகளைப் புலிகள் கடத்திச் சென்றுள்ளனரென்றும் இவர்களில் 37 பேரைப் புலிகள் விடுவித்துள்ளனரென்றும் ஐ.நா. அவசர சிறுவர் நிதியம் (யுனிசெப்) அறிவித்துள்ளது.

## போர்ப் பயிற்சி

முல்லைத்தீவிற்கு தென்மேற்காகவும் மாங்குளத்திற்கு கிழக்குப் புறமாகவும் அமைந்துள்ள கொல்லர் புளியங்குளம் எனும் இடத்தில் புலிகளினால் புதிதாக தமது படையணிகளில் இணைக்கப்பட்டவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இங்கு பயிற்சி பெறுபவர்களில் அநேகமானோர் (ஆண், பெண்) இளம்பராயத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. புலிகளினால் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இப்பிரதேசத்திற்குள் வெளியார் உட்செல்ல புலிகள் தடை விதித்துள்ளதுடன் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

## ஐரோப்பியத் தயாரிப்பு

மன்னாரில் கடற்படையினரால் கைப்பற் றப்பட்ட பதினாறு குண்டுகளும் ஐரோப்பியத் தயாரிப்புகளென இவற்றைப் பரிசீலித்த இராணுவ குண்டு ஆய்வு நிபுணர்கள் தெரிவித்தனர். ஒரு குண்டுக்குள் ஐயாயிரம் சைக்கிள் போல்ஸுகள் காணப்பட்டதாகவும் இது வெடிக்க வைக்கப்பட்டால் 800 சதுர கிலோ மீற்றர் பரப்புவரை பாதிப்பு ஏற்படலாமென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட ஏழு பேர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். முக்கிய புலி உறுப்பினரொருவர் தேடப்பட்டு வருகிறார்.

## புளொட் அலுவலகத்தை தாக்க முயற்சி

கொழும்பு, பம்பலப்பிட்டி, குமி வீதியிலுள்ள புளொட் அலுவலகத்தைத் தாக்க வந்தவர்களென்ற சந்தேகத்தின் பேரில் காரைநகரைச் சேர்ந்த எஸ்.செந்தில்நாதன் என்ற இளைஞரைப் பொலிஸார் 18ஆம் திகதி இரவு கைது செய்துள்ளனர். புளொட் காரியாலயத்துக்கு அருகே இரவு ஏழரை மணியளவில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய ஏழு இளைஞர்கள் பொலிஸ் ஜீப் வண்டியொன்று வருவதைக் கண்டதும் ஓடத் தொடங்கினர். கைது செய்யப்பட்டவரைப் பொலிஸார் கலைத்துப் பிடித்தனர்.

## அகண்டநாம ஜெப யாக பூஜை

நாட்டில் நிரந்தர சமாதானம் வேண்டியும், அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படவேண்டியும் இராஜகிரிய, ஸ்ரீமகா வீரபத்திர காளியம்மன் தேவஸ்தானத்தில் இரவு பகல் தொடர்ச்சியாக 72 மணித்தியாலங்களுக்கு அகண்டநாம ஜெப யாகப் பூஜை நடைபெற்றுள்ளது. கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சும் மேற்படி பத்திரகாளியம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபையினரும் இணைந்து இந்த யாகப் பூஜையை ஏற்பாடு செய்திருந்தனர். கடந்த 18ஆம் திகதி காலை 6.30 மணிக்கு இந்த யாகப் பூஜை ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.

### அகண்டநாம ஜெப யாக பூஜை

அகண்ඩනාම ජෙබ යාග පූජාව

AGANDANAMA JEBA YAHA POOJA

18.07.2005 - 21.07.2005

ஸ்ரீ மஹா வீரபத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் – இராஜகிரிய | ශ්‍රී මහාවීර භද්‍රකාලි අම්මන් දේවස්ථානය - රාජගිරිය | SRI MAHA VEERA BATHRA KALI AMMAN DEVASTHANAM - RAJAGIRIYA



கொழும்பு இராஜகிரிய ஸ்ரீமகா வீரபத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தில் தொடர்ச்சியாக 72 மணித்தியாலம் இரவு பகலாக நடைபெற்ற அகண்டநாம யாக பூஜையின் போது பிடிக்கப்பட்ட படம்.

## கொலை முயற்சியிலிருந்து உயிர் தப்பினார்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், யாழ்ப்பாண ஈ.பி.டி.பி. பிரதம அமைப்பாளருமாகிய நடராஜா மதனராஜா, புலிகளின் புலனாய்வுப் பிரிவினரால் சூட்சுமமாகத் திட்டமிடப்பட்ட கொலை முயற்சியில் இருந்து உயிர்தப்பினார். கடந்த வெள்ளிக்கிழமையன்று அகில இலங்கை இந்து மாமன்றம், யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரியுடன் இணைந்து அதன் பொன் விழாவைக் கொண்டாடியது. இவ்விழாவிற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதியாக நடராஜா மதனராஜாவிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

புலிகளின் கொலைப் பட்டியலில் யாழ்.மாவட்டத்தில் அவர் முன்னிலை பெற்றிருப்பதனால் அரசு, அவருக்குப் பாதுகாப்பு வழங்கி வருகின்றது. இந்நிலையில் நிகழ்வு ஆரம்பமானதும் மதனராஜாவிற்குப் பாதுகாப்பாக வந்த படையினரையும் பொலிஸாரையும் இவ்வாறான நிகழ்வில் சுற்றாடலில் ஆயுதங்களோடு சமுகமளிக்க வேண்டாம் என வேண்டுகோள் விடுத்தபின், மாணவர்களின் பேரில் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்திக் கொலை செய்ய யாழ்.புலனாய்வுப் புலிகள் திட்டமிட்டிருந்தனர்.

மேலும் அவர் நிச்சயமாக இந்நிகழ்வில் பங்குபற்றுவார் என்பதை அறிந்த புலிகள், ஏலவே இரும்புக் கம்பிகள், கொட்டான்கள் என்பவற்றைச் சேகரித்து ஒரு பகுதியில் மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதால், சமயோசிதமாகச் செயற்பட்ட பொலிஸார் மதனராஜாவை, விழாவிலிருந்து பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

சில வருடங்களுக்கு முன்னர் களுத்துறைச் சிறைச்சாலையில் இதுபோன்ற தாக்குதலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தாக்குதலுக்குப் பின் மயிரிழையில் உயிர் தப்பியதும் குறிப்பிடத்தக்கது.

## கல்விக் கருத்தரங்கு

தென்கிழக்கு கல்வி அபிவிருத்தி செயலகத்தின் ஏற்பாட்டில் சமாதானத்திற்கும் கல்வி அபிவிருத்திக்குமான (OPED) அமைப்பின் பிரதான அனுசரணையுடனும் தினமுரசின் இணை அனுசரணையுடனும் இவ்வருடம் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களின் நன்மை கருதி, 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சையினை நடத்தியுள்ளது. இப்பரீட்சையில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 1000 மாணவர்கள் தோற்றியுள்ளனர். இரண்டு கட்டங்களாக நடைபெற்ற இப்பரீட்சையின் முதலாம் கட்டம் கடந்த 11ஆம் திகதியும், இரண்டாம் கட்டம் கடந்த 15ஆம் திகதியும் நடைபெற்றது. இவ்வமைப்பானது தென்கிழக்குப் பிராந்தியத்தில் கல்வி சம்பந்தமான கருத்தரங்குகளையும் பரீட்சைகளையும் முற்றிலும் இலவசமாக நடத்தி வருகிறது.

# வடக்கு, கிழக்கில் தேர்தல் மோசடிகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## -தேர்தல் ஆணையாளருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடிதம்

இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடாத்தப்படுகின்ற தேர்தல்கள், பொதுத் தேர்தலாயினும் அல்லது ஜனாதிபதி தேர்தலாயினும் சுதந்திரமானதும் நியாயமானதுமாக நடாத்தப்பட வேண்டும். இதற்கு ஆவன செய்யுமாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தேர்தல் ஆணையாளருக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார். 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடாத்தப்பட்ட பொதுத் தேர்தல் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவினரினதும் பொதுநலவாய அமைப்பினரினதும் இறுதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களை அவர் இக்கடிதத்தில் மேற்கோள் காட்டி எழுதியுள்ளார்.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் மேற்படி அறிக்கைகளிலிருந்து மேற்கோள் காட்டியுள்ள விடயங்கள் பின்வருமாறு:

2004ஆம் வருட பொதுத் தேர்தல் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் ஜனநாயக ரீதியில் நடாத்தப்பட்டதென ஒரு முடிவுக்கு வருவது நியாயமானதாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தேர்தல் முடிவுகள், அரசாங்கத்தை அமைப்பது யார் என்பதை நிர்ணயிக்கும் ஓர் பிரதான காரணியாக அமையுமாயின் அவ்வரசாங்கத்தின் சட்டபூர்வ அங்கீகாரம் ஒரு கேள்விக் குறியாக அமைந்திருக்கும். தேர்தல் நடைபெற்ற காலங்களில் இலங்கையில் அப்பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுடன் அவை ஜனநாயகத்துக்கு முரணானவையும் ஆகும்.

"வடக்கையும் குறிப்பிட்ட அளவுக்கு கிழக்கு மாகாணத்தையும் தவிர ஏனைய பிரதேசங்களில் வாக்காளர்களது விருப்புகளைச் சுதந்திரமாக வழங்குவதற்கான சூழ்நிலை நிலவியதாக நாங்கள் கருதுகின்றோம்."

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாக்காளர்களது சுதந்திரமான விருப்புகளை வழங்குவதற்கு இயலுமான வகையில் 'கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

வாக்குச் சீட்டுகளைப் பெறுகின்ற அனைவரும், வீட்டில் வைத்தோ அல்லது தபால் நிலையத்தில் வைத்தோ தங்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வாக்காளர் அட்டையும் கிடைக்கப்பெற்றதை உறுதி செய்து கையெழுத்திடவேண்டும். அந்த உறுதிப்பாட்டில் வாக்காளர் உயிருடன் இருப்பதாகவும் வெளிநாடுகளுக்குச் செல்லவில்லை என்றும் உறுதி செய்யப்பட வேண்டும். உரிய வாக்காளரின் அடையாள 'அட்டையின் இலக்கமும் படிவத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். தேர்தலுக்கு இரு வாரங்களுக்குள் இவை கிடைக்கப்பெற்றதனை உறுதிப்படுத்தும் படிவமும், விநியோகிக்கப்படாத வாக்குச் சீட்டுக்களும் மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும். அவர் இவற்றை தேர்தலில் பங்குகொள்ளும் அரசியல் கட்சிகள் பார்வையிடுவதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பதற்ற நிலை நிலவும் வரையில், அப்பகுதிகளில் உள்ள வாக்களிக்கும் நிலையங்களில் பணியில் ஈடுபடுத்தப்படுகின்ற அனைத்து பணியாளர்களும் அப்பகுதிக்கு வெளியே ஏனைய பகுதிகளைச் சார்ந்த நபர்களாக இருக்க வேண்டும்.

எல்.ரி.ரி.ஈ.யினரால் நிர்வகிக்கப்படுகின்ற பகுதிகளில் உள்ள வாக்காளர்களுக்காக ஏற்படுத்தப்படுகின்ற அரச பகுதிகளிலான வாக்களிப்பு நிலையங்கள் இரு பகுதியினரதும் கட்டுப்பாட்டிலில்லாத சூனியப் பிரதேசத்தில் இருந்து குறைந்தது. 500 மீற்றர் தூரத்தில் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் (CMVE) மற்றும் பெபரல் (PAFFREL) போன்ற தேசிய கண்காணிப்புக் குழுக்களின் மூலம் மாவட்டங்களில் ஈடுபடுத்தப்படுகின்ற தேர்தல் கண்காணிப்பாளர்களது பெயர்கள் உரிய மாவட்டங்களில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளாலும் சுயேச்சை குழுக்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக இருத்தல் வேண்டும்.

அரசியல் கட்சிகளின் வாக்களிப்பு நிலைய பிரதிநிதிகள் ஒரு வாக்களிக்கும் நிலையத்திற்குள் மாத்திரமே அவர்களது கடமைகளை நிறைவேற்றுவதால், வாக்காளர் நிலையத்திலிருந்து 500 மீற்றர் எல்லைக்குள்ளும் அதற்கு அப்பாலும் எதேச்சையாக விசாரணைகளை மேற்கொள்வதற்குத் தேவையேற்பட்டால், பொலிஸாரை அழைத்துக் கொள்வதற்குரிய ஏற்பாடுகள் வேண்டும் என்பதுடன், வாக்களிக்கும் நிலையங்களுக்கு அருகில் நடமாடும் நபர்களின் அடையாள அத்தாட்சிகளை உறுதிப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## வரவுகளற்ற செலவுகளை வரவேற்பது ஆரோக்கியமற்றது

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

யுத்த வடுக்களையும், சுனாமியால் ஏற்பட்ட வடுக்களையும் தாங்கிக்கொண்டு வாழ்வின் கிழிஞ்சல்களுக்குள் வாழும் மக்களை நோக்கி மீண்டுமொரு போர் நெருங்கிக் கொண்டிருப்பது விருப்பத்திற்குரியதல்ல.

அமெரிக்காவுக்கு செப்டெம்பர் பதினொன்று போலவும், லண்டனுக்கு ஜுலை ஏழு போலவும், தென்கிழக்காசிய நாடுகளுக்கு டிசம்பர் இருபத்தியாறு போலவும் ஏற்பட்ட அழிவுகளைப் போன்று இலங்கையில் இனியொரு போரும் இருக்கப் போவது சர்வ நிச்சயம். அப்போது இதை ஒரு மிலேச்சத்தனமான செயல் என்றோ, படுமோசமான பயங்கரவாதச் செயல் என்றோ நீலிக்கண்ணீர் வடித்துக் கண்டிப்பதில் துளியளவும் அர்த்தமில்லை.

பயங்கரவாதத்தின் குருதி வடியும் கோரப் பற்களின் வேட்டையாடலுக்கு முன்னால் மனித நேயத்தையோ, மாறுதல்களையோ எதிர்பார்க்க முடியாது.

இலங்கையைச் சூழ்ந்துள்ள போர் மேகத்தைக் கலைத்துப் பயங்கரவாதத்தின் பற்களைப் பிடுங்குவதே பலிபீடத்திலிருந்து உயிர்களைப் பாதுகாக்க உதவும்.

இலங்கை மக்கள் மீது விரும்பியோ, விரும்பாமலோ கொடூரமான யுத்தம் திணிக்கப்படப்போகிறது. இதைத் தடுத்து நிறுத்த அல்லது அடியோடு அறுத்து எறிய திராணியற்று நிற்கும் சர்வதேச சக்திகள், வெறுமனே வெட்டிக் கதை அளந்து கொண்டிருக்கின்றன.

இந்தியாவுக்குத் தலையிடியைக் கொடுக்குமாகவிருந்தால், பயங்கரவாதத்தையும் தட்டிக் கொடுக்க சில சக்திகள் காய் நகர்த்துகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை இயலாமையின் போர்வைக்குள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் முழி பிதுங்கி நிற்கிறது. இவற்றுக்கிடையே இலங்கை அரசோ, யுத்த ஆரவாரத்துக்கும் அரசியல் குழி பறிப்புகளுக்குமிடையே திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறது.

புலிகளைப் பொறுத்தவரை மக்கள், மண், விடுதலை, உரிமை என்பதெல்லாமே வெறும் பிரசாரக் கோஷங்கள் தான் என்பதைக் கடந்த மூன்றரை ஆண்டில் தெரிந்து கொண்டாயிற்று. அடுத்து யுத்தம்தான் - அதைத் தவிர வேறு மார்க்கம் இவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

அழிவிற்குள் இழுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கும் இலங்கையில் யுத்தம் வெடித்து மனிதம் காவு கொடுக்கப்படுவதற்கு முன்னரே அதைத் தடுத்து நிறுத்திவிட வேண்டும். அதை விடுத்து அரசும், புலிகளும் தத்தமது பக்க நியாயங்களைப் பரப்புரை செய்வதிலேயே கூடுதல் கவனம் செலுத்துவதாக உணர முடிகிறது.

தேசத்தின் பெயரால், மக்களின் பெயரால் தவிர்க்கப்பட வேண்டிய யுத்தம் தொடங்கப்படுமானால் உரிமையை வழங்கவோ, உரிமையைப் பெறவோ எவரும் எஞ்சியிருக்கப் போவதில்லை. வன்முறை மூலம் பெறப்படும் சமூக உரிமையைப் பாதுகாக்க வன்முறையே அவசியமாகிறது என்பதை, வன்முறையை வழிமுறையாகப் பின்பற்றுவோர் புரிந்துகொண்டால், அது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மையாகும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# அநாதரவாகும் சுனாமி நிவாரணம்

தமிழ் பேசும் மக்களின் தாயக பூமியான வடக்கு - கிழக்கு என்றுமே இந்த நாட்டின் கந்தக பூமியாகத்தான் திகழ்ந்து கொண்டிருக்கிறது. வடக்கு, கிழக்கு விவகாரத்தால் தெற்கு எரிமலையாகக் குமுறுவது வாடிக்கையாகி விட்டது. இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் மட்டுமல்ல, சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு நிவாரணம் வழங்கும் விவகாரமும்கூட எரிவதும் புகைவதுமாக இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டே வருகிறது.

சுனாமி கடல் அலைகள் கரையோரப் பகுதிகளை எழுந்து தாக்கிக் கிட்டத்தட்ட ஏழு மாதங்கள் நிறைவடையப் போகின்றன. நாடு பூராவும் சுமார் நாற்பத்திரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கடல் அன்னையின் பலி பீடத்தில் காணிக்கைப் பொருட்களாகி விட்டார்கள். ஏழரை இலட்சம் மக்கள் அகதிகளாக அவலப்படுகிறார்களென்று உத்தியோகபூர்வத் தகவல்கள் கூறுகின்றன. இந்தத் தொகை ஒன்பது இலட்சத்தை எட்டலாமென்று ஊர்ஜிதமற்ற தகவல்கள் கூறுகின்றன. இறந்தவர்களிலும், பாதிக்கப்பட்டவர்களிலும் சரி அரைவாசிக்கு மேற்பட்டோர் வடக்கு, கிழக்கில் வாழ்ந்த, வாழும் தமிழ், முஸ்லிம் மக்களாவர்.

பாதிக்கப்பட்ட ஏனைய பகுதிகளில் மீள் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுவிட்டன. அல்லது ஆரம்பிப்பதற்கான அஸ்திவாரங்கள் இடப்பட்டுவிட்டன. ஆனால், வடக்கும், கிழக்கும் மட்டும் தொடர்ந்தும் முடங்கியே கிடக்கிறது. அரச சமாதான செயலகமும் புலிகளின் சமாதான செயலகமும் கிட்டத்தட்ட ஆறு மாதங்களாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தி, தடைகளை எல்லாம் தாண்டி சுனாமி நிவாரண சபைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. வடக்கிலும், கிழக்கிலும் அரச கட்டுப்பாட்டிலில்லாத புலிகளின் பகுதியும் இருப்பதால், சுனாமிப் பொதுக்கட்டமைப்பில் புலிகளையும் உள்வாங்க வேண்டும். இதன் மூலம் சமாதான மேசைக்குப் புலிகளைக் கூட்டிவர முடியுமென்று நோர்வே கருதியது. அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய யூனியன், ஜப்பான் எல்லாம் இந்த யோசனைகளைக் கை தட்டி வரவேற்றன. உடனடியாகவே பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்று அதீத ஆர்வத்தால் சில நாடுகள் எழுந்து நின்று விசிலடித்தும் கொண்டன. ஆனால், பொதுக் கட்டமைப்பு குழம்பிய குட்டைக்குள் இன்னமும் சிக்கியே இருக்கிறது. கடும்போக்குச் சிங்கள தேசியவாதிகளும் இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்த மானதென்று சொல்லிக் கொள்வோரும் உயர்நீதிமன்றம் வரை சென்றிருக்கிறார்கள். இறைமையின் பெயரால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கின் இறுதித் தீர்ப்பு வருவதற்கு இன்னமும் ஒன்றரை மாதத்திற்கு மேலாவது செல்லும். பிராந்தியக் கமிட்டிகளின் தலைமை அலுவலகம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளமை, நிதிக் கையாள்கை உட்பட நான்கு விடயங்களுக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு விதித்துள்ளது. பிராந்தியக் கமிட்டிகள் நிதியைக் கையாளுதல், பிராந்தியக் கமிட்டிகளால் திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படுதல் ஆகியவை தொடர்பாகவும் தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ளது. எனவே தீர்ப்பு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருக்கும் செப்டெம்பர் 12ஆம் திகதிவரை சுனாமிக்குப் பின்னரான செயற்பாட்டு முகாமைத்துவ சபை இயங்கப் போவதில்லையென்பது சர்வ நிச்சயம். சுனாமி நிவாரண சபை அரசியலமைப்புக்கு முரணானதல்ல என்றும் இச் சபையை அமைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமுண்டென்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

இன்னமும் ஆயுத மிரட்டல்களிலும் யுத்த முஸ்தீபுகளிலும் ஈடுபட்டுவரும் புலிகளின் கைகளுக்குள் நிதி போய்ச் சேர்வதால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் பற்றி நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டி வந்ததையும், ஜனநாயகமும் பன்முகத்தன்மையும் சுனாமிச் சபைகளில் பேணப்பட வேண்டுமென்று நாம் வலியுறுத்தி வந்ததையும் நீதிமன்றத் தீர்ப்பு திட்டவட்டமாகப் பிரதிபலிக்கிறது.

இலங்கையின் இறைமை, ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடென்பன எப்போதோ தகர்க்கப்பட்டு விட்டனவென்பதை இன்று இறைமைக்காகக் கத்துபவர்களால் ஏனோ புரிந்து கொள்ள முடியவில்லை. இவற்றைப் பாதுகாப்பதற்காக நடத்தப்பட்ட யுத்தங்கள் தோற்றுப் போய்விட்ட பின்னர்தான் சமாதானப் பேச்சுக்குப் புலிகளைக் கூட்டிவரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. புலிகளைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களின் கஷ்டங்கள் குறித்துக் கொஞ்சமேனும் கவலை கிடையாது. தமது கஜானாவுக்குள் காசும், பாசறைக்குள் ஆயுதங்களும் வந்து சேர்ந்தால் சரி. கடந்த நாற்பது மாத கால யுத்த நிறுத்த காலத்தில் 250க்கு மேற்பட்ட தமிழ் மக்களைக் கொன்றுள்ளனர். கடந்த 16ஆம் திகதி ஏறாவூரில் சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவ சிப்பாயோடு நாற்பது மாத காலத்துக்குள் படைத்தரப்பினர் நாற்பத்தெட்டுப் பேரைக் கொன்றுள்ளனரென்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவைகளெல்லாம் யுத்த நிறுத்த மீறல்கள் இல்லையா? புலிகளைக் கண்டித்தால் அவர்கள் சமாதான மேசைக்கு வரமாட்டார்களென்ற பயம் சர்வதேச சமூகத்துக்கு.

புலிகளைப் பொறுத்த வரையில் வடக்கு, கிழக்கில் சமாதான சூழல் நிலவுவதை அவர்கள் என்றுமே விரும்புவதில்லை. யுத்த பீதிக்குள் தமிழ் மக்களையும் யுத்த மனோபாவத்துடன் தமது போராளிகளையும் வைத்திருக்க வேண்டுமென்பதே அவர்களின் திட்டவட்டமான நிலைப்பாடாகும். யுத்தமொன்றுக்கு உடனடியாகவே போகமுடியாத சூழ்நிலை புலிகளுக்கு இருக்கின்றபோதிலும், யுத்த மிரட்டல்களைத் தொடர்ந்தும் விடுத்துக் கொண்டே யுத்த முஸ்தீபுகளில் ஈடுபடுவதாகக் காட்டிக் கொள்ள வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கிறது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவே அரசும் புலிகளும் இணைந்து சுனாமிப் பொதுக்கட்டமைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. இந்த ஆறு மாவட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கமிட்டிகளின் அலுவலகம் கிளிநொச்சியில் அமைக்கப்பட வேண்டுமென்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. அரச கட்டுப்பாட்டிலில்லாத கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஏனைய மாவட்டப் பிரதிநிதிகள் இலகுவில் செல்ல முடியாது. இது குறித்து உயர் நீதிமன்றத்தில் மனுதாரர்கள் தெரிவித்திருந்த வாதமும் அச்சமும் நியாயமானது. பிரதிவாதிகள் இதற்கு எதிராக எந்த வாதத்தையும் உயர்நீதிமன்றத்தில் முன்வைக்க வில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயுதமில்லாமல் செல்பவர்களைக் கூட கைது செய்யும் புலிகள் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைத் தமது பகுதிக்குள் அனுமதிக்கப் போவதில்லை. ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் அல்லது முஸ்லிம் அரசியல் கட்சி ஒன்றின் பிரதிநிதி கிளிநொச்சிக்குள் செல்ல முடியுமா?

**இலங்கையின் இறைமை, ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடென்பன எப்போதோ தகர்க்கப்பட்டு விட்டனவென்பதை இன்று இறைமைக்காகக் கத்துபவர்களால் ஏனோ புரிந்துகொள்ள முடியவில்லை. இவற்றைப் பாதுகாப்பதற்காக நடத்தப்பட்ட யுத்தங்கள் தோற்றுப் போய்விட்ட பின்னர்தான் சமாதானப் பேச்சுக்குப் புலிகளைக் கூட்டிவரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. புலிகளைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களின் கஷ்டங்கள் குறித்துக் கொஞ்சமேனும் கவலை கிடையாது. தமது கஜானாவுக்குள் காசும், பாசறைக்குள் ஆயுதங்களும் வந்து சேர்ந்தால் சரி.**

செல்லத்தான் புலிகள் அனுமதிப்பார்களா? அனுமதித்தாலும் ஏராளமான கெடுபிடிகள் அழுத்தங்கள் இருக்கும். எனவே கிளிநொச்சியில் பிராந்தியக் கமிட்டிகளின் அலுவலகம் அமைக்கப்படக் கூடாதென்பது நியாயமானதே.

சுனாமிப் பொதுக்கட்டமைப்புப் பற்றித் தாம் அலட்டிக் கொள்ளப்போவதில்லை என்றும், 'யுத்தத்துக்குப் போகமாட்டோம், தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டால் விட மாட்டோம்' என்றும் சு.ப.தமிழ்ச்செல்வன் திரைப்படத்தில் வரும் கட்டபொம்மன் பாணியில் 'டயலொக்' பேசியிருக்கிறார். அதாவது, அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலி உறுப்பினர்கள் நடமாடுவதற்கு படையினர் போதிய பாதுகாப்புத் தராவிட்டால் தமது புலி இயக்க உறுப்பினர்களின் ஆயுதப் பாதுகாப்புடன் நடமாடுவோமென்று வீரவசனம் பேசிய தமிழ்ச்செல்வன், இப்போது வாலைச் சுருட்டிக் கொண்டு பல்லிழந்த கிழட்டுப் புலி போலப் படுத்துவிட்டார். உயர்நீதிமன்றத் தீர்ப்பையடுத்து சுனாமி நிவாரணப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குச் சில மாற்றங்கள் செய்ய ஜனாதிபதியும் அரசும் தயாராகி வருகின்றன. உண்மையிலேயே சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களின் நலன்களில் அக்கறையிருந்தால் ஏன் நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடித்து புலிகள் ஓர் இணக்கத்திற்கு வரமுடியாது?

இதற்கிடையில் உலக நாடுகளினதும் சர்வதேச அமைப்புகளினதும் நிதியுதவிகள் சுனாமிக்குப் பின்னரான செயற்பாட்டு முகாமைத்துவ சபைக்கு வழங்கப்படப் போவதில்லையென்பதும் புலிகளின் வயிற்றில் புளியைக் கரைத்து வார்த்திருக்கும். சுனாமி நிதியைக் கையாளும் குழுவுக்குத் தலைமை தாங்கும் புலிகளின் கைகளுக்கு நிதி போய்ச் சேர்வதை அனுமதிக்க முடியாதென்று அமெரிக்கா முதலில் அறிவித்தது. சுனாமிச் சபைக்கு நிதி வழங்குவது சட்ட விரோதமானதென்பதால் நிதி வழங்க மாட்டோமென்று அமெரிக்கா அறிவித்ததில் தவறிருக்க முடியாது. ஏனெனில் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட சர்வதேசப் பயங்கரவாதப் பட்டியலில் புலிகள் இயக்கமும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. 'பயங்கரவாத அமைப்புகள் நிதி சேகரிக்கும் வழிமுறைகளைத் தடைசெய்யும், ஒப்பந்தம் ஐக்கிய நாடுகள் சபையிலும் இலங்கைப் பாராளுமன்றத்திலும் அபரிமிதமான ஆதரவோடு நிறைவேற்றப்பட்டிருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் அமெரிக்கா எடுத்திருக்கும் முடிவு மிகச் சரியானதே. சுனாமியால் பாதிக்கப்பட்ட தனது கடற்புலித் தளத்தை மீளக் கட்டியெழுப்ப புலிகள் கிடைக்கும் நிதியைப் பாவிக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

திறைசேரிக்கு உதவி நிதி வழங்கப்படுமென்று முதலில் தெரிவித்த அமெரிக்கா, பின்னர் அதனையும் வாபஸ் பெற்றுக் கொண்டது. உள்ளூர் தொண்டர் நிறுவனங்கள் மற்றும் சர்வதேசத் தொண்டர் நிறுவனங்களூடாக உதவிகள் வழங்கப்படுமென்று அமெரிக்கா அறிவித்துள்ளது. இங்கும் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. உள்ளூர் அல்லது சர்வதேசத் தொண்டர் நிறுவனங்களிடமிருந்து பணம் கறக்கும் வழிவகைகளைப் பற்றிப் புலிகளுக்கா சொல்லிக் கொடுக்க வேண்டும்? கிளிநொச்சியிலோ, யாழ்ப்பாணத்திலோ, மட்டக்களப்பிலோ அரச அதிகாரிகளின் தலைமையின் கீழ் நடைபெறும் கூட்டங்களில் புலிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வது அமெரிக்காவுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

பிரிட்டனும் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்துள்ள நாடு. பிரிட்டனும் நேரடியாக நிதியுதவி வழங்குவதிலிருந்து பின்வாங்கியுள்ளது. இதே நிலைப்பாட்டினைத்தான் மற்றொரு உதவி வழங்கும் நாடான ஜப்பானும் எடுத்திருக்கிறது. இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டுக்கு இணைத் தலைமை வகித்த நாடுகள் அமெரிக்கா, நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய யூனியன் ஆகிய அனைத்தும் பின்வாங்கக்கூடிய சூழ்நிலையே நிலவுகிறது. இந்த நிலையில் கண்டியில் நடைபெற்ற அபிவிருத்தி அரங்குக் கூட்டத்தில் வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்ட 2200 கோடி ரூபாவும் 'அம்போ' ஆகிவிடுமா என்ற கேள்விக்குறியும் நிலவுகிறது. ஏனெனில் உதவி வழங்கும் உலக நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் தாம் வழங்கும் உறுதிமொழிகளை என்றுமே பாதுகாப்பதில்லை என்பது வரலாறாகி விட்டது.

இருபது வருடங்களுக்கு மேலாக உள்நாட்டு யுத்தத்தால் சீரழிந்த சூடானுக்கு ஒரு தீர்வு முன்வைக் கப்பட்ட பின்னர் ஏதோ கொட்டிக் கொடுக்கப் போவதாக உலக நாடுகள் உறுதியளித்திருந்தன. அந்த நாட்டின் கிளர்ச்சித் தலைவர் இப்போது அங்கு உப ஜனாதிபதியாகவும் பதவியேற்றுள்ளார். ஆனால், அள்ளித் தருவோமென்று துள்ளிக் குதித்து உறுதியளித்த நாடுகளெல்லாம் சொல்லிக் கொள்ளாமலே பின்வாங்கி விட்டன.

யுத்தத்தால் பாதிக்கப்படும் எந்த நாடுமே தனது இறைமையைப் பூரணமாகப் பாதுகாக்க முடியாமல் பரிதவிக்கும். அரைவாசி, முக்கால்வாசி இறைமைகளோடுதான் அவை இருக்கும். இவற்றின் மீது குதிரைச் சவாரி விடுவது உலக நாடுகளுக்கும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவைக்கும் இலகுவான காரியம். 'மட்டுப்படுத்தப்பட்ட இறைமை'யைக் கொண்டிருக்கும் இலங்கை போன்ற நாடுகளில் சுனாமி நம்பிக்கை நிதியமொன்றினை மேற்பார்வை செய்யக்கூடிய வாய்ப்பு இப்போது உலக வங்கிக்கே அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்காகப் பரிதாபப்படுவதாகக் கூறிக்கொண்டு நிபந்தனைகளை விதிக்காமல் இருந்தால் சரி. ■

நரன்

---

# ஊரிலிருந்து....



காதில பூ கேள்விப்பட்டிருப்பியள். பூக்கடைக்குள்ள காது கேள்விப்பட்டிருக்கிறியளோ? ஒரு நாள் ரெயினிங்குக்கு ஓட்டோக்காரரை இழுக்க புலி பொறுப்பானவை விட்ட கதை தெரியுமே. காலக்கெடு விதிச்சதில அரசாங்கம் ஆடிப்போட்டுது.


இனி இரணைமடு, படுவான் கரை விமான சேவைக்கு எந்தத் தடையும் இல்லை. பைலட்மார்தான் பற்றாக்குறை எண்டிச்சினமாம். இதையும் ஒண்டுரெண்டு பேர் நம்பிவிட்டினம். பட்டுவேட்டியை நினைச்சு கட்டியிருந்த.......எண்டமாதிரி பிளேனை நினைச்சு ஓடிக்கொண்டிருந்த ஓட்டோவும்........

# அரசியல் பின்வாங்கலும் ஆயுத முன்னெடுப்பும்

அலசுவது
**- மதியூகி -**

"சமாதானப் பேச்சுவார்த்தை மூலமாக சிங்கள அரசு, தமிழர்களுக்கு ஒருபோதும் கௌரவமான தீர்வினைத் தரப்போவதில்லை. போராடித்தான் பெற வேண்டும். ஆகவே, அடுத்த கட்டமாகப் போர் ஒன்றுக்கான சூழலே அதிகரித்து வருகிறது. தமிழ் மக்கள் மீது போர் திணிக்கப்பட்டால் அதை எதிர்கொள்ளத் தமிழ் மக்கள் தயாராக வேண்டும். வீட்டுக்கு ஒருவர் அல்லது அனைவரும் ஆயுதப் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல எமது ஏக தலைமைக்கு வலுச்சேர்க்க வேண்டும். சமாதானத்துக்கான சூழ்நிலைகளை விடவும், மீண்டுமொரு போருக்கான சூழலே அதிகரித்து வருகிறது."

இவ்வாறு புலிகள் மீண்டுமொரு போருக்கான தயாரிப்புகளைச் செய்து வருகின்றனர். அரசாங்கத்தைப் பொறுத்தவரை மீண்டுமொரு போருக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருப்பதாகக் கருதமுடியவில்லை. காரணம் கிழக்கு மாகாணத்தில் புலிகள் ஏற்படுத்தி வரும் பதற்றமான சம்பவங்களும் அதன் தாக்கங்களும் தான். படையினரைப் பொறுத்தவரை இன்னொரு தாக்குதலை வலிய இழுத்துச்



சண்டையிடுவதை விடவும் ஒரு சண்டையை எதிர்கொள்ள நேர்ந்தால் அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளையே அதிகமாகச் செய்து வருகின்றனர்.

புலிகளின் திருமலை மாவட்ட கடற்படைத் தளபதி டிக்கான் உட்பட நான்கு பேர் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டதானது புலிகளுக்கு அச்சத்தையும் ஆத்திரத்தையும் தோற்றுவித்தது. ஆனால், உடனடியாகவே டிக்கானின் படுகொலையை புலிகளால் உரிமை கோர முடியாமலிருந்தது. காரணம் டிக்கான் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருவதற்கான எந்தவித அனுமதியையும் பெற்றிருக்கவில்லை. தவிரவும் பாதுகாப்பற்ற பகுதியில் தங்கியிருந்தமை என்பது புலிகளின் தலைமையை விட வேறு எவருக்கும் தெரியாது. ஆனாலும் அவர்கள் கொல்லப்பட்ட பின்னர்..... அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சம்பவம் நடந்ததால் அரசாங்கமே பொறுப்பு என்றும் படையினரே மேற்படி இனந்தெரியாதவர்கள் என்றும் புலிகள், கொலை நடந்த மறுநாள் கொந்தளித்து எழுந்தனர். இதற்கு முன்னமே இக் கொலையை திருமலையில் இயங்கும் சில அநாமதேய அமைப்புகள் கண்டித்தன.

இதனைத் தொடர்ந்து புலிகள் ஏற்கனவே அரசிடம் விடுத்திருந்த காலக் கெடுவுக்கு அரசாங்கம் வழங்கிய மாற்று யோசனைகளை முற்றாக நிராகரித்தனர். இதைத் தொடர்ந்து திருகோணமலையில் படையினர் மீது கைக்குண்டு வீச்சுக்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும் நடந்தன. இச்சம்பவங்களில் பதினெட்டுக்கும் அதிகமான படையினர் காயமடைந்தனர். நான்கு வயது சிறுமி உட்பட மூன்று பொதுமக்களும் காயமடைந்தனர். அடுத்த நாள் இரவு கும்புறுப்பிட்டி கடற்படை முகாமைத் தாக்க முற்பட்டபோது, படையினர் எதிர்த் தாக்குதலை நடத்தியதில் ஒரு புலி உறுப்பினர் கொல்லப்பட்டும் இன்னொருவர் காயப்பட்டதோடு தொடர்ந்த வன்முறைகள் முடிவுக்கு வந்தன. ஆக, டிக்கான் படுகொலை செய்யப்பட்டதற்கான பதிலடியாகவும் படையினரை வலிய போருக்கு இழுப்பதற்காகவும் நடத்தப்பட்ட இவ் வன்முறைகள் புலிகளுக்கு எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை.

இந்த ஏமாற்றத்தின் அடுத்த கட்டமாக கடந்த பதின்மூன்றாம் திகதி கிழக்கு மாகாணத்திலிருந்த தமது அரசியல் பணிமனைகளை இரவோடு இரவாக மூடியதோடு உறுப்பினர்களையும் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் அழைத்தனர். இதுகுறித்து பிரபல வானொலி ஒன்றுக்கு பேட்டியளித்த இளந்திரையன், எதிரிகளுக்கு இலக்குகளாக இருக்காமல் இருப்பதற்கான பின்வாங்கல் இதுவென்றும் கொள்கை அளவில் வேறு எந்த உள் நோக்கமும் இல்லை என்றும் தெரிவித்தார். அவரின் கூற்றுப்படி பார்த்தால் புலிகளின் அரசியல் பணியாளர்களின் பின்வாங்கலானது புலிகள் யுத்தமொன்றுக்குத் தயாராகிறார்கள் என்பதை அரசுக்கு சமிக்ஞையாகக் காட்டுவது போல் அமைந்தால் அரசு தமது காலக்கெடு அல்லது தமது கோரிக்கைகள் குறித்து சாதகமான பதிலை எடுக்கும் என்பதும் இதேவேளை புலிகளின் காலக்கெடுவை அரசு நிராகரித்தும் புலிகள் எவ்விதப் பிரதிபலனையும் காட்டாமல் இருக்கிறார்களே என்ற குறைவான மதிப்பீடுகளைச் சரி செய்வதுமேயாகும்.

தொடரும் நீடித்த ஒப்பந்தக் காலத்தில் புலிகள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டாலும் பாரிய பின்னடைவையும் கண்டுள்ளனர். மூத்த திறமையான தளபதி கருணாவின் பிரிவுடன், கௌசல்யன், டிக்கான், நியூட்டன் மற்றும் ஏனைய பல முக்கியஸ்தர்களையும் இழந்துள்ளனர். தவிரவும் பல உறுப்பினர்கள் இயக்கத்தைவிட்டு ஓடிவிட்டனர். சிலர் அதிருப்திக்குள்ளாகி வருகின்றனர் என்பனவற்றை ஒரு தொடர்கதையாக நீடிக்க விரும்பாத புலிகளுக்கு விரும்பியோ விரும்பாமலோ மீண்டுமொரு போருக்குச் செல்ல வேண்டிய கட்டாயத் தேவை இப்போது அதிகரித்து வருகிறது. இதன் வெளிப்பாடே புலிகளின் பொட்டு அம்மானின் அண்மைய உரையின் சாராம்சங்கள் எனலாம். அதுபோக, கடந்த பதினேழாந் திகதி தமிழ்ச்செல்வன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நடத்திய பேச்சுக்களும் அமைந்திருந்தன. புலிகளின் மீண்டுமொரு போர் என்ற முடிவை மறுக்க முடியாத நிர்ப்பந்தத்தின் காரணமாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் போர் முழக்கமிட ஆரம்பித்துவிட்டனர். இதில் பரிதாபம் - ஆயுதங்கள் எதுவும் இல்லாமல் அரைக்கிலோ மீற்றர் கூட மூச்சுப் பிடிச்சு ஓட வலுவில்லாத கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் முழி பிதுங்க போருக்கு அறைகூவல் விடுப்பதுதான்.

புலிகளைப் பொறுத்தவரை போர் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவே தமது முகாம்களில் பிரசாரம் செய்து வருகின்றனர். ஆகவே அதற்கான தயாரிப்புகளும், ஆரம்பிக்கப்பட்டு விட்டன. மன்னாருக்குள் குண்டுகளையும், தாக்குதல் கருவிகளையும் கொண்டு வந்து புலிகள் பிடிபட்டது, வாழைச்சேனை மீராவோடையில் குண்டுகளுடன் வந்த புலிகள் அவற்றைப் போட்டு விட்டு ஓடியது, கொழும்பை நோக்கி அதிகமான தாக்குதல் உறுப்பினர்களை அனுப்பிக்கொண்டிருப்பது சில உதாரணங்கள். இவ்வாறான போர் தயாரிப்புகளையும், பிரசாரங்களையும் புரியும் புலிகள், இவை எதுவும் நடைபெறாதது போல் அரசாங்கம் போருக்கு தயாராகி வருகிறது, அரசாங்கம் தம்மீது மீண்டுமொரு போரைத் திணிக்கிறது என்று கூறுவதில் எந்தளவு உண்மை இருக்க முடியும். (யுத்தத்தைத் தவிர) இந்த விடயத்தில் புலிகளுக்குப் பிரதானமாக இரண்டு தேவைகள் உள்ளன. ஒன்று - தென் இலங்கையில் சந்திரிகா அம்மையாரின் ஆட்சியை அகற்றுவதும் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வருவதும் மற்றையது இந்தியாவின் அதிகரிக்கும் இலங்கை மீதான தலையீட்டை தடுத்து நிறுத்துவது.

இதில் புலிகள் எதிர்பார்ப்பது போல் ஆட்சி மாற்றம் அமையுமாக இருந்தால் தமது போக்குக்கு இழுபடக்கூடிய அல்லது தமது நடவடிக்கைகளுக்கு (மாற்றுக்கருத்துக் கொண்டோர் மீதான கொலை, வரி அறவிடல், ஆட்கடத்தல்) தடைவிதிக்காது அல்லது கண்டு கொள்ளாத போக்கை கடைப் பிடிக்கக்கூடிய நிலை உருவாகலாம். அதேவேளை ஜனாதிபதி சந்திரிகா அளவுக்கு இந்தியாவோடு நெருக்கம் கொண்டிராத சக்தி ஒன்றின் அவசியமுமாகும் அப்போதுதான் இந்தியா ஓரங்கட்டப்படும் அல்லது அதிகரித்த தலையீடு குறையும். தவிரவும் இந்தியாவுக்கு எதிர்ச் சக்திகளான அமெரிக்கா மற்றும் ஏனைய சக்திகளின் கைபொம்மையாக ஒரு அரசு தென்னிலங்கையில் ஏற்படும். இந்த மாற்றமானது உடனடியாகப் புலிகளுக்குத் தாக்கத்தைத் தரப்போவதில்லை என்பதே புலிகளின் நோக்கம் எனலாம்.

பயணக் காலக்கெடு, பொதுக்கட்டமைப்பு மீதான நீதிமன்றத்தின் நியாயமான தடைகள், தமது உறுப்பினர்கள் மீதான தாக்குதல்கள் என்பவற்றை எடுத்துச் செல்லவும் புலிகள் வழிபார்த்து நிற்பதையும் உணர முடிகிறது. தம்மைத் தனியரசாக மதித்து சர்வதேச உதவிகள் நேரடியாகத் தரப்பட வேண்டும் என்று கேட்பதோடு, போராட்டக் குணத்தைக் கைவிட்டு அப்பாவியாக வந்து அரசினால் ஏமாற்றப்பட்ட தாம் மீண்டுமொரு போருக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்ற நியாயத்தையும் சர்வதேசத்திடம் புலிகள் முன்வைக்கக்கூடும்.

இலங்கையின் வரலாற்றிலும், சர்வதேச சமூகத்தின் பதிவிலும் ஆழப் பதிந்து விட்டுள்ள புலிகள் குறித்த அதிருப்திகளையும், உண்மையான சமாதான விரும்பிகளாக புலிகளால் கடந்த மூன்றரை வருடங்களில் நிரூபிக்க முடியாமல் போயிருப்பதையும், இதே காலத்தில் புலிகளால் கொல்லப்பட்ட மாற்றுக் கருத்துக் கொண்டவர்களின் எண்ணிக்கையும், கடத்தப்பட்ட சிறுவர்கள், வசூலிக்கப்பட்ட வரிகள் என்பவற்றையும் எந்த நியாயக் கணக்கில் வரவு வைத்து எந்த அநியாயக் கணக்கில் செலவு வைப்பது என்பதை உண்மையாக சமாதான விரும்பிகளும், சர்வதேச சமூகமும்தான் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும். ◎




"சமாதான முயற்சிகள் சீர்குலைக்கப்பட்ட நிலையில் மிகவும் மோசமான, நெருக்கடியான காலகட்டமொன்றுக்குள் தள்ளப்பட்டுள்ளோம். எனவே, மாற்று வழியைத் தேடுவதைத் தவிர வேறு வழியில்லை."

*- புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.*

"எதிரிகள் போருக்கான சூழலை உருவாக்குவதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார்கள். எமது போராளிகள் மீதும் பொறுப்பாளர்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்ற யுத்தம் எந்த நிலையிலும் வெடிக்கக் கூடிய வாய்ப்புக்கள் உருவாகி வருகின்றன. அந்த வகையிலே போராளிகளாகிய நாம் இன்று செய்ய வேண்டியது எம்மைப் பலப்படுத்தி நாங்கள் எங்கள் பலத்தை நிரூபிக்கக்கூடிய நிலையில் இருக்க வேண்டும். எம்மைப் பலப்படுத்துவதன் மூலம் எமது இயக்கத்தைப் பலப்படுத்தி எமது தேசத்தையும் பலப்படுத்துகின்றோம். எமது பலமே எமக்கு விடுதலையைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையுடன் பலத்தைப் பெருக்கிக் கொள்வதில் காலத்தைப் பயனுள்ளதாக்குவோம்."

*- பொட்டம்மான்.*



"சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலமாக தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படலாம் என்பதில் நாங்கள் எல்லோரும் நம்பிக்கை இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

அவ்விதமான ஒரு நிலையை நாங்கள் விரும்பவில்லை தான். ஆனால் அந்த நிலைமைக்கு நாங்கள் எல்லோரும் தள்ளப்பட்டிருக்கின்றோம்."

*- தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன்.*

---

# அதிரடி அய்யாத்துரை



**முன்னமெல்லாம்** வன்னிக்குக் கூப்பிட்டால் அரக்கப் பரக்க ஓடுறவை, இப்ப ஆற அமர யோசிச்சுப் போட்டுத்தான் போகினமாம் எங்கட கூத்தமைப்புக்காரர். முன்னம் வரவேற்ற வன்னி இப்பவெல்லாம் வர வேர்க்குதாம். ஏன் எண்டு தெரியுமோ? சண்டை ஒண்டுக்குப் பெடியள் ரெடி பண்ணினம் எண்டதுதானாம். அதுக்கிடையில எலக்ஷன் ஒண்டைப் பத்தின கனவும் ஒருபக்கம் தூக்கத்தைக் கெடுக்குதாம். உந்த ஓவர் ரென்சனில வன்னிக்கு வர வேர்க்குதாம். பதவி படுத்தும்பாடு எண்டொரு படம் சூட்டிங் நடந்து கொண்டிருக்கு. அது போலத்தான் இவைக்கும் பதவி படுத்துற பாடுதான் கொஞ்சம் ஓவராப் போட்டுது. என்னதான் வேர்த்தாலும் - உதறினாலும் ஓப்பினாச் சொல்லப் பயப்புடுகினமாம். நெருக்கமானவையிட்ட மட்டும் பாரம் இறக்கினமாம். சு.பா.வுக்கே சுளிச்சுப் போட்டு நிக்கிற உந்தச் சுப்பன்கள் பெரிய எம்டன்கள் கண்டியளோ. ஏனெண்டால் டிப்ளோமெட்டிக் பாஸ்போட்டை அண்டர் வெயருக்குள்ளேயே சிப்ட் பண்ணிப் போட்டுத்தான் அறிக்கை மழை பொழியினமாம்.

**ஏற்பாட்டாளரா** வந்து மத்தியஸ்தரா மாறிப் போனவை ஆப்பிழுத்த குரங்காட்டம் நிக்கினம் - போர் நிறுத்தத்துக்கு ரெண்டெழுத்தாரின்ர ஆப்பு - பொதுக் கட்டமைப்புக்கு நீதிமன்ற ஆப்பு. இப்புடி இறுகிப் போன நிலைமையில உவையின்ர ராஜ தந்திரம் எடுபடாதெண்டதை வடிவாப் புரிஞ்சுகொண்டிருக்கினம் போலை. அடுத்தது யுத்தம்தான் எண்டதில ரெண்டெழுத்தார் உடும்புப் பிடியா நிக்கினம் எண்டதாலை நிண்டு முழிக்கினம். இதே ஸ்ரைலை ஆளுந்தரப்பு எடுத்திருந்தா, அட்வைஸ் பண்ண ரீ சேட்டுக்கு மேலாலை ஒரு கோட்டைப் போட்டுக் கொண்டு ஓடி வந்திருப்பினம். வரமுடியாதளவுக்கு ஆப்படிச்சது ரெண்டெழுத்தாரெண்டதாலை தான் தங்களின்ர நாட்டுக் குளிரிலையும் வேர்த்துப் போயிருக்கினமாம்.

எவன் செத்தாலென்ன எவன் வாழ்ந்தாலென்ன எண்டு ரெண்டெழுத்தாருக்கு பாஞ்சு குடுத்திச்சினம். இப்ப வால் மாட்டிக் கொண்டிட்டுதோ எண்டு முழி பிதுங்கிப் போய் நிக்கினம். எல்லாம் நோபல் பரிசு மேல இருந்த ஒரு நப்பாசைதான்.

**போர்** நடக்குதோ இல்லையோ எண்டதைக் கண்காணிக்க வந்தவைக்கு நிழல் யுத்தமொண்டு நடக்குதெண்டதை கண்டு பிடிக்கவே மூண்டு வருஷம் புடிச்சுது. உந்த லெட்சணத்தில உவையின்ர கண்காணிப்பு பரிசுகெட்டுப் போய்க் கிடக்கேக்க, இப்ப ஒரு புது வேலையைப் பொறுப்பெடுத்திருக்கினம். அதுதானுங்கோ ரெண்டெழுத்தாருக்குப் பயண ஒழுங்கை ஒழுங்கு பண்ணுறது சம்பந்தமாக மாறி மாறி பேச்சு நடத்தினம்..

ஆளுந் தரப்பு தன்ர நிலைப்பாட்டை பச்சை மரத்தில ஆணி அடிச்சாப்போல தெரிவிச்சாப் பிறகும் ரெண்டெழுத்தாரின்ர ரெண்டாவது கடிதத்தோடை புறப்பட்டிருக்கினம். சரி, ஒரு சச்சரவைத் தீர்க்கத்தான் எண்டாலும், உந்தச் சமாதானக் காலத்திலை கொல்லப்பட்டவை தொடர்பாக இவைக்குக் கொடுக்கப்பட்ட கொம்பிளைண்டுகளை உப்பிடித் தூக்கிக்கொண்டு திரியயில்லையே ஏன்? உதுதான் எங்கையோ உதைக்குது. அதுசரி, கண்காணிக்க வந்தவை எப்பவிருந்து ஏற்பாட்டாளராகவும் - போஸ்ட் மேனாகவும் புதுசா அப்பாயின்மெண்ட் பண்ணப்பட்டிச்சினம் எண்டதுதான் தெரியல்லையுங்கோ.

**கோயில்களிலை** கோரஸ் பாடிற வில்லுப்பாட்டுக் கேட்டிருப்பியள். அதே ஸ்ரைலிலேயே ஒருவர் சிரிச்சுக் கொண்டே சொல்லுறதுக்கெல்லாம் ஓமோம் ஓமோம்... அப்படியே ஆகட்டும், அற்புதமான யோசனையெண்டு ஒத்துப்பாட்டுப் பாடுறவையைக் கேள்விப்பட்டிருக்கிறியளோ... மாட்டியள். சொல்லுறன் கேளுங்கோ. கடைசியா சு.பா. கூப்பிடுறாரெண்டு கூத்தமைப்புக்காரர் கூட்டத்துக்குப் போனவையளெல்லோ. அந்தக் கூட்டத்திலை போர் நிறுத்தம் மூன்று வருஷமா தொடர்ந்ததாலை நிலைமை ரொம்ப பலவீனப்பட்டுப் போட்டுது. உந்தச் சிங்கள அரசாங்கம் தமிழருக்குத் தாகம் தீர்க்காது. மாற்றுவழிதான் ஒரே வழியெண்டு புல்லரிக்குமாப்போல பொங்கி வழியவும், உந்தக் கூத்தமைப்புக்காரர், ஒவ்வொரு சொல்லுக்குமிடையே கோரஸா ஒத்துப் பாடிச்சினமாம். அதொண்டும் விசுவாசத்திலை இல்லையாம். இன்னொரு எலக்ஷன் வந்தால், அதிலை ஒருக்கா உட்கார வேணும் எண்டதுக்காகத் தானாம். என்ன செய்ய, தெரிவு செய்யிற சக்தியா மக்களில்லையெண்டதெனாவெட்டுத் தானாக்கும்.

**ரெண்டெழுத்தாரின்ர** நீதி நிர்வாகத் துறைக்கு உதவியா இருக்கிற அரசனான அண்ணா எண்டவர், அந்தத் துறைக்குள்ள தனி ராஜ்ஜியமே நடத்திறாராம். அவையின்ர கோர்ட்ஸில ஒருவருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வரவேணுமெண்டால், அண்ணாவை அபேஸ் பண்ணினா, அவர் அவையின்ர நீதிபதியை நீராட்டி, நீவி விட்டுத் தீர்ப்பு எப்பிடி இருக்க வேணுமெண்டதை முன்கூட்டியே தீர்மானிச்சிடுவாராம். பாத்தியளோ.... சாக்கடைக்குள்ளேயே சலம் கழிச்ச மாதிரி சட்டவிரோதமான ஒன்றுக்குள்ளேயே இன்னொரு சட்டவிரோதம் நடக்குது. உதைத்தான் முதற் கோணல் முற்றுங் கோணல் எண்டு சொல்லுவினம் போலை. ம். தலைவன் எவ்வழியோ குடிகளும் அவ்வழியெண்டாலும் பொருத்தமாகத்தான் படுகுது..... அரசனான அண்ணா போகிற வேகத்தைப் பார்த்தால் பெக்ஸ் மெசினில பேப்பரை விட்டு கரன்சி அச்சிட்டாலும் ஆச்சரியப்படுகிறதுக்கில்லையுங்கோ........


கன நாளைக்குப் பிறகு பாரதிதாசனின்ர கவிதையொண்டு சொல்லுறன் கேளுங்கோ.

*கொலைக்கள மாக்கி விட்டார்*
*குளிர் நாட்டைத் தம் வாழ்வின்*
*நிலைக்களம் என்றாரடி - சகியே*
*நிலைக்களம் என்றாரடி.*

*ஊர் இரண்டு படுங்கால்*
*உறவுள்ள கூத்தாடிக்குக்*
*காரியம் கைக்கூடுமாம் - சகியே*
*காரியம் கைக்கூடுமாம்.*

கூத்தாடிகள் எண்டவை யாரெண்டதைக் கூட்டிக் கழிச்சுப் பாருங்கோ... பிளீஸ்... ●

# தேசியத் தலைவரின் நீங்காத நினைவுகள்



**தம்** மீதான நம்பிக்கை அற்றவர்களாக..... துப்பாக்கிகளின் துணிவில் மட்டும்

அலையும் தூரநோக்கற்றவர்கள், ஆத்ம பலத்தோடு நிமிர்ந்தெழுந்த தலைவர்களை அழித்தொழித்தாலும் அவர்கள் கொண்ட கொள்கையினை அழிப்பதில், கொன்றொழிப்பவர்கள் தோற்றுப்போனவர்களே!.

இது எமது தாயகத் தேசத்தின் இதுவரை கால நீண்ட வரலாறு கற்றுத் தந்த உண்மைகள்!

மக்களாகிய உங்களிடம் இந்த வரலாற்று உண்மையினை நான் எடுத்துச் சொல்லுகின்ற இன்றைய நாள், ஈழத் தமிழர்களின் வரலாற்றில் கறை படிந்த நாள்!

தமிழ் பேசும் மக்களின் போராட்டம் என்பது சொந்த இனத்தின் குருதியைப் பருகும் கொடிய வரலாறு கொண்டது என்பதை மறுபடி ஒருமுறை கொடிய கரங்கள் எழுதிச் சென்ற நாள்!...

தலைநகர் கொழும்பில் சிந்திய குருதி உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் பேசும் மக்களின் முகங்களில் பட்டுத் தெறித்த ரணம் சுமந்த நாள்!

எம் தாயகத் தேசத்து மக்களுக்காகத் தழும்புகள் தாங்கிய தலைவன் ஒருவனின் தலை கொய்யப்பட்ட நாள்!

தமிழ் பேசும் மக்களின் போராட்ட வரலாறு குருதியில் சுட்டுச் சரிக்கப்பட்ட கொடிய நாள்!

ஒரு இனத்தின் தேசியத் தலைவரை பாசிஸம் விழுங்கிய படுகொலை நாள்!...

ஆம்!.... சுதந்திரம் கேட்டு எழுந்து நிமிர்ந்ததால் சுட்டுச் சரிக்கப்பட்ட தேசியத் தலைவர் எம் நேசத்திற்குரிய அண்ணர் அமிர்தலிங்கம் அவர்கள்தான்!

அண்ணர் அமிர்தலிங்கம் அவர்களை நான் தேசியத் தலைவர் என்று குறிப்பிடுவது அவர் மீதான நான் கொண்ட விருப்புக்காக அல்ல!

இறுதி நாட்களில் நான் உறுதியோடு அவரது கரம் பிடித்து நேசமுடன் கைகுலுக்கிக்கொண்ட அந்த உறவிற்காக அல்ல....

தேசியத் தலைவர் என்று அவர் தன்னைத் தானே பெயர் சூட்டிக் கொண்டவர் அல்ல!... அல்லது அவரது அணியினர் அவருக்குச் சூட்டிய வெறும் புகழாரமும் அல்ல!... தேசியத் தலைவர் என்ற அந்த உயரிய நாமம் 1977ஆம் ஆண்டு ஜனநாயகத் தேர்தலில் மக்களாகிய நீங்கள் வழங்கிய தீர்ப்பு!

1977இல் நடந்த தேர்தலில் எந்தத் தரப்பும் மக்களிடம் வாக்குக் கேட்டுச் செல்வதற்கு தடை இருக்கவில்லை!...

விரும்பியதைச் சொல்லவும், விரும்பியதைத் தேர்ந்தெடுக்கவும் அப்போது மக்களுக்கு தடையிருக்கவில்லை!...



அமிர்தலிங்கத்தின் இறுதிக் கிரியைகளின் போது.....

அப்போது நடந்தது கடந்த தேர்தலைப்போல் மோசடித் தேர்தல் அல்ல! அது ஒரு ஜனநாயகத் தேர்தல்!

அத்தகைய தேர்தல் ஒன்றில் எமது தாயகத் தேசமான வடக்குக் கிழக்கெங்கும் பதினேழு ஆசனங்களைப் பெற்று பாராளுமன்றம் சென்றிருந்த மாபெரும் தேசிய இயக்கத்தின் தலைவர்தான் அண்ணர் அமிர்தலிங்கம் அவர்கள்!

அப்போது கூட அண்ணர் அமிர்தலிங்கம் அவர்கள் தன்னைத் தேசியத் தலைவர் என்றோ அல்லது தாம் தான் தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்றோ தான் தோன்றித்தனமாக அதிகாரத்தைக் கையிலெடுக்க நினைத்ததில்லை!

தமிழ் பேசும் மக்களின் போராட்ட வரலாறெங்கும் நெருப்பில் நடந்து அளப்பரிய தியாகங்களை அவர் ஆற்றியிருந்ததால் மட்டுமே மக்களாகிய நீங்கள் அவரை உங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்தீர்கள்!

தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிரான போராட்டம்... சிங்களச் சிறீ அழிப்புப் போராட்டம் என்று காலிமுகத்திடலிலும், கச்சேரி வளவிலும் துணிச்சலுடன் நின்று போராடிய அவரது வீரம், ஆயுதங்களின் துணிச்சலால் வந்த ஒன்றல்ல! அவரது ஆத்ம பலத்தினால் விளைந்த வீரம் அது!...

ஆரம்பங்களில் அரசியல் ரீதியான முரண்பாடுகள் அவருக்கும் எங்களுக்கும் இடையில் இருந்திருக்கலாம்! அது வேறு! அதற்காக நாங்கள் அந்த முரண்பாட்டினை எங்களது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் ஊடாகவே தீர்த்துக்கொண்டவர்கள்!

முன்னர் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாங்களும்......அதன் அருகே முற்றவெளி மைதானத்தில் அவர்களும்..... பின்னர் முற்றவெளி மைதானத்தில் நாங்களும் அருகே வீரசிங்கம் மண்டபத்தில் அவர்களும் மேடை போட்டுச் சொற்போர் புரிந்த அந்தப் பொற்காலத்தை நான் எண்ணிப் பார்க்கின்றேன்!

**இதயவீணைக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியது**

பேரினவாதத்திற்கு எதிராகப் போர்க் கொடி ஏந்தி மக்கள் சேனையின் மத்தியில் அண்ணர் அமிர்தலிங்கம் அவர்கள் தலைமை தாங்கிச்சென்ற நிகழ்வுகளை நினைத்துப் பார்க்கின்றேன்!

ஊர்வலத்தில் அணி திரண்ட மக்களை நோக்கி பொலிசார் துப்பாக்கிகளை நீட்டிப் பிடிக்க, குறுக்கே பாய்ந்து 'சுடுவதென்றால் முதலில் என்னைச்சுடுங்கள்' என்று நெஞ்சை நிமிர்த்தி நின்ற அந்தத் தலைவனின் வீரத்தை எண்ணிப் பார்க்கின்றேன்!

சட்ட வல்லுனர்கள் கூடும் இலங்கை பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்களின் வாழ்வியல் உரிமைக்கான சட்ட திட்டங்களைத் தனது நறுக்கான தமிழில் எடுத்து விளக்கிய அந்த உரிமைக் குரலை எண்ணிப் பார்க்கின்றேன்!

(அடுத்த வாரமும் தொடரும்....)

**மட்டக்களப்பு மாந்திரீகம்**

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.


**DR. A.P.S. KUTTY**

50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.

☎ 067-2250349

**தமிழ் எழுத்துக்கள் பதிக்கப்பட்ட KEY BOARD விற்பனைக்குண்டு**

கல்யாணி, பாமினி, கலகம் பொன்டுடன் (Fonts) தமிழ் Key Board விற்பனைக்குண்டு. வெளிநாட்டவர்களுக்கும் அனுப்பி வைக்கலாம்.



SPG PC COMPUTER
NO. 23, MAY FIELD ROAD, COLOMBO - 13.
Tele. Phone No :- 0777588405

**விளம்பரப் பகுதி**

இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

**தபால் மூலம் தையற்கலை பெயிண்டிங்**

டிப்ளோமா ஆசிரியரினால் தபால் மூலம் தையற்கலை பெயின்டிங் வகுப்புக்கள் நடாத்தப்படுகிறது. மிகச் சுலபமான முறையில் இவ்வகுப்புக்கள் நடைபெற்று ஏராளமான மாணவர்களுக்கு மிகப் பயனுள்ளதாக அமைந்துள்ளது. முத்திரை ஒட்டிய நீண்ட கடித உறையுடன் இன்றே தொடர்பு கொள்ளவும்.

Mrs . Sithy Kamila Rafi, 765 TrincoMalee Street, Matale.

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |


சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் **D.D. Enterprises** என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு **16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் **"Manager Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06.** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- **(E-mail):- murasu@sltnet.lk**







**நிருபித்துக் கொண்டு இருக்கும் மலையாள மாந்திரீக சக்தி**

விரும்பிய காதல், விரும்பியோர் சம்மதத்துடன் நிறைவேற, பிரிந்த காதல் ஒன்று சேர, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடனும் நிறைவேற, திருமணம் தோஷம் நிவர்த்தி செய்துகொள்ள, வாஸ்த்து முறைப்படி வீட்டுக் காவல் செய்ய, ஓடிப் போனவர்கள் தேடி வர, மனப் பயம் நீங்க, தாழ்வு மனப்பான்மைக்கும், கணவன் மனைவி, ஸ்திரி புருஷர் உச்சரிக்கப்பட்ட ஆண்கள் காம வசிய லேகியம் பெற, மூல ரோகத்தில் அவதிப்படுபவர்களுக்கு 1008 உறு செய்யப்பட்ட லேகியத்தால் குணம் பெற, ஒற்றைத் தலைவலி நீங்க, தலை முடி உதிர்வதை நிறுத்தி நீண்டு வளர, முடி கறுக்க அபூர்வ நீராவி ஒளஷத தைலம் பெற, வீடு மனை வதிவிட சிக்கல் தீர, எதிரிகள் அஞ்ச, எதிரிகளை முறியடிக்க, ஸ்ரீ லக்ஷ்மி வீட்டுக்கு வாசம் செய்ய, குறிப்பிட்ட வியாபாரத்தில், குறிப்பிட்ட இலாபம் பெற, மது போதையில் இருந்து விடுபட, குழந்தை பேறு கிட்ட, ஆஸ்துமா நோய் ஆயுள் வரை இல்லாமல் இருக்க, இன்னும் உங்கள் குறை நிறைகளுக்குத் தீராத மானிட கரும தோஷங்களுக்கு 48நாள் எமது ஸ்ரீ துர்க்கை அம்மனின் மண்டலாபிசேக பூஜைக்குப் பின் வெற்றி கண்டவர்கள் எத்தனை எத்தனை பேர். அன்றன்று வந்து குவியும் சன்மானங்களும், நெய்வேத்திகளும், வந்தால் வந்திருக்கும் வாடிக்கையாளரிடமே உண்மையைக் கண்டறியலாம். குறிப்பாக நாம் மட்டுமே! இத்துறையில் வாங்கும் பணத்திற்கு Guarantee Card கொடுக்கின்றோம். நாம் மட்டுமே இத் துறைக்கு வருமான வரி செலுத்துபவர்கள்! இது எமது உண்மைச் சேவையை எடுத்துக் காட்டுகிறது. வெளி நாட்டவர்களுக்கு விசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவின் மூலம் கடல் கடந்து செயல்படக்கூடிய வகையில் தியானித்து அனுப்புவதால், கைகண்ட பலனை அடைகிறார்கள். சாதிக்க முடியாத காரியங்களை எனது மலையாள மாந்திரீக சக்தியால் நிருபித்துக் காட்டிய எனக்குக் கிடைத்த சான்றிதழ்களை தாராளமாக நேரில் பார்க்கலாம்.

**நுவரெலியாவிலும், கொழும்பிலும் மட்டுமே எமது துர்க்கா தேவி ஆலயம் உண்டு. வேறு கிளைகள் இல்லை.**

நுவரெலியா கிளை:
மலையாள மாந்திரீக உச்சாடன பீடம்.
ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்,
No.33, கண்டி வீதி,
நுவரெலியா.
T/No. 052 22508 - 23093 Fax: 235097.

"உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி"
Prof. Dr. P.K.Samy (J.D.G.A.N) J.P.
Malayala Manthirika Uchchadana Peedam,
Sri Durka Devi Aalayam, 162, Kotahena Road, Colombo - 13.
T/No. 2342463/2342464/2470615 Fax: 2344832
4613133/4613124/2431137.

## சிறுகதை கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்

## இன்னொருவர் பார்வையில்

**புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்களிடமிருந்து புலிகள் இயக்கத்துக்கு நிதி சேகரிக்கப்படுவது தொடர்பாக தனுகா என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரை கடந்த வாரம் டெயிலி மிரர் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. ஐரோப்பிய, ஸ்காண்டிநேவிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடமிருந்து கட்டாய வசூலிப்புகள் இடம்பெறுவதாக அவ்வப்போது தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அண்மையில் லண்டனிலிருந்து வன்னிக்குத் தந்திரமாக அழைக்கப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட ஜெயதேவனின் கதை இதற்கு நல்ல உதாரணமாகும். பிரிட்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் தடை செய்யப்பட்டிருக்கும் புலி இயக்கத்துக்கு நிதி சேகரிக்கப்படக் கூடாதெனத் தடை விதிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் பல்வேறு மனிதாபிமான முகவரமைப்புகளின் பெயரில் டொலர்களும், ஸ்டேங்லிங் பவுண்களும் யூரோக்களும் புலிகளின் கஜானாவுக்கு வந்து சேர்வது உண்மைதான்.**

# புலம்பெயர் நாடுகளிலிருந்து புலிகளுக்கு நிதி

ஐரோப்பாவின் கடைகள், ஆஸ்பத்திரிகள், தபாற்கந்தோர்களில் பணி புரிபவர்களும் தமது குழந்தைகளை வீதிகளில் ட்ரொலிகளெனப்படும் வண்டில்களில் வைத்துத் தள்ளிச் செல்வோரும் இலங்கையின் தலைவிதியைத் தமது கைகளில் பெருமளவுக்குக் கொண்டுள்ளனரென்பதை வெளிநாடுகளுக்கு அடிக்கடி விடுமுறையைக் கழிக்கச் செல்லும் எமது அரசியல்வாதிகள் ஏற்றுக்கொள்வர். இந்த நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் ஆயிரக்கணக்கான மைல்கள் அப்பாலுள்ள தமது நாட்டில் இடம்பெறும் மோதலில் கையெழுத்துடன் வெளியிடப்பட்ட கடிதமொன்று 1981ஆம் ஆண்டு முதல் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

தமிழ் தாயகமொன்றினைப் பெற்றுத் தருவோமென்ற உறுதிமொழியை அளித்து நிதியுதவி கோரும் இக் கடிதங்கள் ஐரோப்பா, ஸ்காண்டிநேவியா, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் பல நாடுகளிலுள்ள அகதி முகாம்களில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமது சமூகத்தவரிடமிருந்து ஏனைய தமிழ் குழுக்கள் ஆதரவைப் பெறுவதற்கு முன்னதாகவே புலி இயக்கம் தமிழ் சமூகத்தை அணுகத் தொடங்கிவிட்டது. இவ்வாறு புலிகளுக்கு வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நிதி குறைந்து வருகிறதென்று இலங்கை புலனாய்வு வட்டாரங்கள் துள்ளிக் குதித்து சில வருடங்களுக்கு முன்னர் முன்கூட்டியே தெரிவித்தமை புத்திசாலித்தனமற்ற முடிவாகும். பணம் சம்பாதிப்பவர்களில் கணிசமான சதவீதத்தினர் ஓய்வுபெறும் வயதை எட்டிவிட்டார்களென்று முட்டாள்தனமான காரணத்தை இவர்கள் கூறியிருந்தனர். இது உண்மையல்ல.

இரண்டாவதாக இருக்கக்கூடிய சிறுபான்மை வாக்குகளைப் பயன்படுத்தி தாம் வாழும் நாடுகளிலுள்ள அரசியல்வாதிகளிடையே செல்வாக்குச் செலுத்த புலம் பெயர்ந்து வாழ்பவர்களால் முடியும். தேர்தல் காலங்களில் வெளிநாடுகளிலுள்ள புலிகளின் முகவரமைப்புகளுக்கு இந்த அரசியல்வாதிகள் ஆதரவு தெரிவித்து வாக்குகள் தேட வேண்டிய நிலையுள்ளது. ஐரோப்பிய நாடொன்றில் தலைநகர மாநகரசபையில் பிரதிநிதியாகச் சில வருடங்களுக்கு முன்னர் புலிகளின் செலுத்தும் செல்வாக்கை ஆழமான வகையில் புரிந்துகொள்ள முடியும்.

பயங்கரவாதத்துக்கு நிதி வழங்கலை முடக்கும் மசோதா அண்மையில் பாராளுமன்றத்தில் பெருத்த ஆதரவுடன், 67 வாக்குகள் மேலதிகமாகப் பெற்று நிறைவேற்றப்பட்டது. கதிர்காமரின் தன்னந் தனியான இராஜதந்திர முயற்சிகள் புலிகளின் கஜானாவுக்குள் கரன்ஸி நோட்டுகள் போய்ச் சேருவதைத் துரிதமாகத் தடுக்குமென்ற நம்பிக்கையில் நாட்டிலுள்ள மூன்று முக்கிய அரசியல் கட்சிகளும் இம் மசோதாவுக்கு ஆதரவு வழங்கின. அப்படியானால் புலிகளுக்குச் சாதகமாக ஏன் இவ்வளவு ஷரத்துகள் சுனாமிக்குப் பின்னரான செயற்பாட்டு முகாமைத்துவ சபையில் முன்வைக்கப்பட்டனவென்று ஒருவர் ஆச்சரியப்பட முடியும். இவ்வாறான ஒப்பந்தங்கள் ஏற்கெனவே செய்து கொள்ளப்பட்டிருந்தால் லண்டன் இன்று பாதுகாப்பாக இருந்திருக்கும்.

வெளிநாடுகளில் புலிகள் நிதி சேகரிக்கும் விடயங்கள் மீண்டும் இப்போது முக்கிய செய்திகளாக வெளிவருகின்றன. பத்து வருடங்களுக்கு முன்னர் பிரச்சினைக்குரிய நாடொன்றில் புலிகள் நிதி சேகரிக்கும் விபரம் குறித்து விருது பெற்ற பத்திரிகையாளரான பிரட்ரிக்கா ஜான்ஸ் அம்பலப்படுத்தியிருந்தார். அவர் புலிகளின் நிதி சேகரிப்புத் தொடர்பான வங்கிக் கணக்கு இலக்கங்களையும் வெளிப்படுத்தியிருந்தார். சில வருடங்களுக்குப் பின்னர் ஆன் என்ரீசன் என்பவரும் இது தொடர்பான விபரங்களை வெளியிட்டிருந்தார்.

இலங்கையில் மோதல் வளர்ச்சி பெற்றமை மற்றும் பிரச்சினைத் தீர்விலும் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் செலுத்தும் செல்வாக்குப் பற்றி அறிந்து கொள்வதற்காக இதுகுறித்து ஆராய வேண்டிய நீண்டகாலத் தேவை உண்டென்பது உணரப்பட்டுள்ளது. புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடம் நிதியுதவி கோரிப் புலி இயக்கத் தலைவர் பிரபாகரனின் புலம்பெயர் தமிழ் சமூகத்தவர் மத்தியில் ஒரு அதிகார நிலைப்பாட்டினைப் புலிகள் எடுத்துக் கொண்டு விட்டனர். இணையத்தளம், தொலைபேசிகள், சமூக நூல் நிலையங்கள், தமிழ் தொலைக்காட்சி (புலிகள் தமது சொந்த அலைவரிசையை அண்மையில் ஆரம்பித்திருந்தனர்.) வானொலி ஒலிபரப்புகள் ஆகியவற்றின் மூலம் புலிகள் தமது

**புலிகளின் இரகசியப் பணிகளை ஆற்றும் உறுப்பினர்கள் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்களின் உதவியுடன் மறைந்து வாழ்ந்து, தமது இரகசிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். புலிகளின் ஆயுதக் கொள்வனவு மற்றும் கடல்சார் நடவடிக்கைகளின் சூத்திரதாரியென வர்ணிக்கப்படும் கே.பி. என்றழைக்கப்படும் நபர் ஐரோப்பாவுக்கு வருடத்தில் இரு தடவைகள் விஜயம் மேற்கொள்கின்றாரென்றும் அப்போது தனது நம்பிக்கைக்குரிய நண்பர்களோடு தங்கியிருக்கிறாரென்றும் சர்வதேச பொலிஸ் பிரிவான இன்டர்போல் தெரிவித்துள்ளது.**

பிரசார வேலைகளை மேற்கொள்கின்றனர். இவை தவிர அடிக்கடி நடத்தப்படும் அரசியல் கூட்டங்கள் மூலம் பிரசாரங்கள் செய்கின்றனர். அத்துடன் பிரபாகரனின் பிறந்த தினம், மாவீரர் தினம், கரும்புலிகள் தினம் ஆகியவற்றையொட்டி கலாசார மற்றும் சமூக நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. இந்த நிகழ்வுகளுக்கு அந்தந்த நாடுகளிலுள்ள முக்கிய அரசியல்வாதிகள் பிரதம விருந்தினர்களாக அழைக்கப்படுகின்றனர்.

புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து புலிகளுக்கு அனுப்பப்படும் நிதி தொடர்பாக முற்றுமுழுதான ஆய்வொன்று நடத்தப்பட வேண்டும். முதலாவதாக முக்கியமாக நிதி எங்கிருந்து வருகிறதென்பது கண்டறியப்பட வேண்டும்.

உறுப்பினரொருவர் தெரிவு செய்யப்பட்டமையையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

மூன்றாவதாக தாம் வாழும் நாடுகளிலுள்ள கொள்கை வகுப்பாளர்களுக்கு புலிகளின் தகவல்களைக் கொண்டு செல்வதன் மூலம் அவர்கள் மீது அழுத்தம் செலுத்தும் வகையில் பிரசாரங்களைப் புலம்பெயர்ந்த தமிழர்கள் மேற்கொள்கின்றனர். புலம்பெயர் நாடுகள் தத்தமது வெளிநாட்டு மற்றும் குடியேற்றக் கொள்கை தொடர்பான திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஏதுவாகத் தத்தமது நாடுகளில் வாழும் அந்தஸ்தும் மதிப்புமிக்க புலம்பெயர் தமிழர்களிடம் அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் கேட்டறிகின்றனர்.

நான்காவதாக, புலிகளின் இரகசியப் பணிகளை ஆற்றும் உறுப்பினர்கள் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்களின் உதவியுடன் மறைந்து



உள்ளூரில் நிவாரணத்துக்காக கையேந்தும் இந்த உள்ளூர் அகதிகளின் அவல நிலையைப் பயன்படுத்தி வெளிநாடுகளில் அகதி அந்தஸ்த்துப் பெறும் பொருளாதார அகதிகள் புலிகளுக்கு நிதி சேகரிக்கின்றனர்.

வாழ்ந்து, தமது இரகசிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். புலிகளின் ஆயுதக் கொள்வனவு மற்றும் கடல்சார் நடவடிக்கைகளின் சூத்திரதாரியென வர்ணிக்கப்படும் கே.பி. என்றழைக்கப்படும் நபர் ஐரோப்பாவுக்கு வருடத்தில் இரு தடவைகள் விஜயம் மேற்கொள்கின்றாரென்றும் அப்போது தனது நம்பிக்கைக்குரிய நண்பர்களோடு தங்கியிருக்கிறாரென்றும் சர்வதேச பொலிஸ் பிரிவான இன்டர்போல் தெரிவித்துள்ளது. புலிகளின் ஆயுதக் கொள்வனவுக் குழுவுக்கு எவ்வித இராணுவத் தொடர்புகளும் இல்லையென்றபோதிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள



யுத்தத்தின் கொடூரம் காரணமாக உள்ளூரில் இடம் பெயர்ந்து செல்லும் அகதிகள்

தமிழர்கள் மத்தியிலேயே மறைந்து வாழ்ந்துகொண்டு தமது சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு தமது உண்மையான அடையாளங்களையும் தமது தனித்துவமான பகுதி நேரச் செயற்பாடுகளையும் இவர்கள் மறைந்து வாழ்வதால் மேற்கத்திய நாட்டு அரசாங்கங்களாலும் சட்டத்தை அமுல்படுத்தும் சக்திகளாலும் தமிழர்களுக்கும் பதுங்கி வாழும் புலிகளுக்குமிடையில் வேறுபாடுகளைக் கண்டுகொள்ள முடிவதில்லை. இன்றும் கூட ஐரோப்பிய நாடுகளில் இதே நிலைமைதான் நிலவுகிறது.

இலங்கையின் கீர்த்தியையும் கௌரவத்தையும் கட்டியெழுப்புவதே காலத்தின் தேவையென்று வெறும் வசனங்களை வெளிநாடுகளிலுள்ள எமது தூதுவராலயங்கள் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இந்தத் தேவை இன்று மட்டுமல்ல, என்றுமே இருந்ததில்லை. இலங்கையின் முக்கிய தலைவர் ஒருவர் சமீபத்தில் லண்டனுக்கு விஜயம் செய்திருந்தார். அவர் இந்து ஆலயம் ஒன்றிற்குச் செல்லவிருப்பதாக நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அங்குள்ள இலங்கைத் தூதரக அதிகாரியோ அந்த நிகழ்ச்சியை இரத்துச் செய்துவிட்டார்.

புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழ் மக்களின் ஆதரவு கிட்டும்வரை புலிகளின் இயக்க நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டே இருக்கும். ஆனால் புலிகள் எதிர்காலத் திட்டங்களோடு செயல்படுவதால் தற்போது புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழ் வர்த்தக அமைப்புகள் மீது கண் வைத்துச் செயற்படுகின்றனர். புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழர்களிடமிருந்து நிதி வசூலிப்பதற்கு இந்த வர்த்தக அமைப்புகளை பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளனர். சில புலி ஆதரவு முக்கியஸ்தர்கள் வெளிநாடுகளிலிருந்து புலிகள் ஆயுதக் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு தளமாகச் செயற்படுகின்றனர். குறிப்பாக யுத்தத்திற்கும் மனித பாவனைக்கும் தேவையான இரட்டை நோக்குக் கொண்ட கருவிகளையும் உபகரணங்களையும் பெற்றுக் கொடுப்பதில் அவர்கள் கவனம் செலுத்துகின்றனர்.


வெளிநாடுகளிலுள்ள தமிழ் மக்களுடன் தொடர்புகளை மேற்கொள்வது சிக்கலான ஒரு காரியம்தான். ஆனால், முடியாத ஒன்றல்ல. அங்கு வாழும் மக்களின் நாடிப் பிடிப்பையும் புரிந்து கொள்வது அவசியமானது. வெளிநாடுகளிலுள்ள எமது தூதரகங்களில் பணிபுரியும் இரண்டாம் தர அதிகாரிகளால் இவற்றைச் செய்யமுடியாது.

சாரத்தைத் தூக்கிச் சண்டிக் கட்டாகக் கட்டிக் கொண்டு இரப்பர் செருப்புகளை அணிந்து கொண்டு இராணுவ வாகன அணிகள் மீது தாக்குதல் நடத்தும் புலி இயக்கக் கெரில்லாக்கள், சம்பிரதாயப்பூர்வ இராணுவச் சீருடையில் பிரபாகரனுக்கு அணிவகுப்பு மரியாதை செலுத்துகின்றனர். இதற்கெல்லாம் புலம்பெயர்ந்த நாடுகளிடமிருந்து அனுப்பப்படும் பணமே காரணம். உலகிலேயே மிகப் பயங்கரமான நவீன ஆயுதங்கள் கொண்ட பயங்கரவாதிகள் இவர்களேயாவர்.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**என்** பிறந்த நாள் தோறும், என் வீட்டிற்கு வந்து மாலையிட்டு என்னை வாழ்த்துவார். அவர் பிறந்த நாள் தோறும், நான் குடும்பத்தோடு ஏற்காடு சென்று அவர் பங்களாவில் நடக்கும் பிறந்த நாள் வைபவத்தில் தவறாது பங்குபற்றி, அவர் வாழ்த்துக்களைப் பெறுவேன். என் வாழ்வில் தொய்வு



ஏற்பட்ட போதெல்லாம், நான் கீழே விழாமல் அவர் தூக்கிப் பிடித்திருக்கிறார்.

இன்று நான் பெற்றுள்ள பேரும் புகழும், வாழ்வும் வளமும், மெல்லிசை மன்னர் திரு.எம்.எஸ் விஸ்வநாதன் எனக்கு இட்ட பிச்சை; அவர்தான் இந்த வேருக்கு நீர் வார்த்த கொண்டல்.

ஆனால், அவர் பாத்திரம் அறிந்துதான் பிச்சையிடுவார். அதாவது 'பாத் திறம்' அறிந்துதான் பிச்சையிடுவார்.

அவரோடு பணியாற்றி காலத்தில் எனக்கும் அவருக்கும் பாட்டு விஷயத்தில் எத்துணையோ மோதல்கள் நிகழ்ந்திருக்கின்றன.

ஒரு பல்லவியை ஒரு படத்திற்காக எழுதி, இதுதான் இருக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தினேன். அதை அந்தப் படத்தின் இயக்குநரான அமரர் திரு ப. நீலகண்டனும் ஆமோதித்தார்.

ஆனால், அந்தப் பல்லவியில் விஸ்வநாதன் அவர்களின் உள்ளம் உட்காரவில்லை.

'உங்கள் ரசனையும், என் ரசனையும் வித்தியாசப்படுகிறது' என்று அந்தப் பல்லவியை ஏற்க, விஸ்வநாதன் மறுத்தார்.

'அப்படியானால், நான் தொழில் செய்வதில் அர்த்தமில்லை' என்று நான் எழுந்து அறையைவிட்டு வெளியே வந்துவிட்டேன்.

சிறிது நேரம் கழித்து திரு.ப.நீலகண்டன் என்னை உள்ளே அழைத்துப் போனார்.

விஸ்வநாதன், நான் எழுதிக்கொடுத்த பல்லவியையே அரை மனத்தோடு ஏற்றுப் பாடினார்.

பாடல் ஒலிப்பதிவாயிற்று; படம் வெளிவந்து அந்தப் பாடல் பிரபலமாயிற்று.

அப்போது விஸ்வநாதன் என்னிடம் சொன்னார்.

"இது பிரபலமாகிவிட்டாலும், நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். உங்கள் பல்லவியை நான் மறுத்ததற்குக் காரணம், இதை விடச் சிறப்பான பல்லவியை உங்களால் தர முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருப்பதால் தான்..." என்று உள்ளத்தில் உள்ளதை உள்ளபடியே சொல்லி, என் நெஞ்சை நெகிழ வைத்தார். என் மீது அவர் அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார். 'எனக்குக் கிடைத்த இன்னொரு கண்ணதாசன் நீங்கள்' என்று வாயார வாழ்த்து சொல்லுவார்:

அவர் ஏற்க மறுத்த பல்லவி இதுதான்:

'பாடினாள் ஒரு பாட்டு -
பால் நிலாவினில் நேற்று;
ஓடினேன் அதைக் கேட்டு
தேடினேன் வலை போட்டு'

'ஒரு தாய் மக்கள்' என்னும் படத்தில் திரு.எம்.ஜி.ஆரும் திரு.முத்துராமனும் பாடுகின்ற பாட்டு இது. இன்றைய முதல்வர் பெருந்தகை மாண்புமிகு ஜெயலலிதா அவர்களும் அந்தப் பாடலில் இடம் பெற்றதாக நினைக்கிறேன். நினைவிலில்லை.


திரு. பி.ஆர்.பந்துலு அவர்களின் படம் ஒன்றிற்கு, நான் பாட்டெழுதும் பொழுது, நல்ல இலக்கிய நயத்தோடு இந்த டூயட் இருக்கலாம்' என்று எம்.ஜி.ஆர். என்னிடம் சொன்னார்.

அவ்வாறே நான் ஒரு பல்லவியை எழுதி விஸ்வநாத அண்ணனிடம் கொடுத்தேன்.

"அண்ணே, இந்தப் பல்லவி, சரித்திரப்படத்திற்குத்தான் நல்லா இருக்கும்; அது சமூகப் படம் வேற எழுதிக் கொடுங்க" என்று விசு அவர்கள் அந்தப் பல்லவியை என்னிடமே திருப்பித் தந்துவிட்டார் நான் வேறு எழுதி, அந்தப் பாடல் ஒலிப்பதிவாயிற்று.

(தொடரும்.......)




**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....**

ஒன்பதாண்டுகள் ஆர்னே ரஷ்யர்களுக்கு உளவாளியாக இருந்து தகவல்கள் கொடுத்துக் கொண்டிருந்தார். ஆர்னே இடதுசாரிக் கொள்கைகள் கொண்டவர். தொழிற் சங்க நடவடிக்கைகளில் முக்கிய பங்கேற்றவர். ஆனாலும் அவருடைய தேச பக்தியை எவரும் சந்தேகித்ததில்லை. அவருடைய சோஷலிஸப் பற்று தேசத்தை ரஷ்யர்களுக்குக் காட்டிக் கொடுக்கக்கூடிய அளவிற்குச் செல்லுமென எவரும் எதிர்பார்க்கவில்லை.

ஆனால், அவருடைய நடவடிக்கைகள் பற்றி உளவுத்துறையினருக்குச் சந்தேகம் ஏற்பட்டபோதும், அவர்களால் எதையும் உறுதி செய்ய முடியவில்லை. தன்னுடைய தேசத்தின் பிரதிநிதியாக ஐ.நா. சபை வரைக்கும் சென்றார்.

இந்தச் சூழ்நிலையில் நார்வேயின் பாதுகாப்புத்துறைக் கல்லூரியின் முக்கிய பொறுப்பிற்கு அவர் நியமிக்கப்பட்டார். அதையும் அவர்களால் தடுக்க முடியவில்லை. வெளிவிவகார அமைச்சகத்தின் செய்தித் துறை தலைவராகவும் 1983இல் அவர் நியமிக்கப்பட்டார்.

உளவு இலாகாவினர் அவரை 'ஷேடோ' செய்வதை மட்டும் நிறுத்தவில்லை. KGB தலைவரை அவர் வியன்னாவில் சந்தித்தது, ஈராக் உளவுத் துறையினரோடு ஏதென்ஸ் நகரில் பேசிக் கொண்டிருந்தது ஆகியவற்றை உளவுத் துறையினர் புகைப்படங்களாக எடுத்தார்கள்.

ஆர்னே கைது செய்யப்பட்டு தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டார். ரஷ்யாவிற்கும் ஈராக்கிற்கும் ரகசியத் தகவல்களை விற்று, அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தை சுவீஸ் வங்கியில் அவர் வைத்திருப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. ஆர்னே ரஷ்யாவிற்கு எப்படிக் கையாளானார் என்கிற விவரத்தை அவரே ஒப்புதல் வாக்குமூலமாக வெளியிட்டார். ஈராக் நாட்டிற்குப் பணத்துக்காக ரகசியங்களை விற்றதாகச் சொன்னார்.

ஆர்னே இப்படியெல்லாம் செய்திருப்பார் என்று அவருடைய நாட்டு மக்களே நம்ப மறுத்தார்கள். அரசியல் பழி வாங்கும் உணர்ச்சியோடு அவர் மீது பொய்யான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதாகவும் எண்ணினார்கள். ஆனால், தொடர்ந்து வெளியான தகவல்கள் ஆர்னே குற்றவாளி என்பதை சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபித்தன.

தான் முன்னர் கொடுத்த வாக்குமூலத்தை விசாரணையின் போது ஆர்னே மறுத்தார். தன்னுடைய நாட்டுக்குப் பாதகம் விளைவிக்கக் கூடிய எந்த ரகசியத்தையும் ரஷ்யர்களுக்குக் கொடுக்கவில்லை என்று உறுதியாகச் சொன்னார். ஏற்கனவே பத்திரிகைகளில் வெளியான செய்திகளை ரஷ்யர்கள் தன்னிடமிருந்து பெற்றுக் கொண்டதாகக் கூறினார். முக்கியமில்லாத தகவல்களை ரஷ்யர்களுக்குக் கொடுத்து அவர்களை ஏமாற்றி விட்டதாகச் சொன்னார். அதே சமயம் அவர்களை நம்ப வைத்து அவர்களிடமிருந்து சில முக்கியத் தகவல்களை தான் பெற்றதாகவும் சொன்னார்.

ஆர்னே சொன்னதெல்லாம் உண்மையாக இருந்தால் KGB யைப் போல ஏமாளித்தனமான உளவு ஸ்தாபனம் வேறு எதுவும் இருக்க முடியாது. ஆனால், உலகிலுள்ள உளவு ஸ்தாபனங்களிலேயே மிகவும் திறமையாகச் செயல்படுவதும் மிகச் சாதுரியமான உளவாளிகளைப் பெற்றிருப்பதும் KGB என்பது உலகறிந்த உண்மை.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)



**பா**லியல் உழைப்பினை விற்பவர்கள் குறித்த பேச்சுக்கள் இன்றும் கூடப் பரவலாகப் பேசப்படுகின்றன. அது தொடர்பில் எழுதப்படுகின்றன. ஆய்வுகளும் சமூக, விஞ்ஞான ரீதியிலான பரிசோதனைகள் சார்ந்த நூல்களும் பரவலாக விற்பனைக்கு விடப்படுகின்றன. இவ்வாறு பல்வேறு மட்டத்தில் இன்று பேசப் பட்டு வந்தாலும் கூட, இது ஒரு புதிய தொழில் அல்ல.

சமூக ரீதியிலும் சட்ட ரீதியிலும் பல நெருக்கடிகளை இத்துறை கொண்டு வருகிறது என்பது உண்மை. என்றாலும், இத் தொழிலில் ஈடுபடுகின்றவர்களோ, அத் தொழிலை நடாத்தி

# வீதியில் விரியும் விபரீதங்கள்

வருகின்றவர்களோ இதனைக் கைவிடத் தயாராக இல்லை. குறிப்பாக, இப்பொழுது 'விபசாரம்' என்ற சொல்லைக்கூட மாற்றி 'பாலியல் உழைப்பு' என்ற அளவுக்கு இத் தொழில் புதியதொரு பரிமாணத்தையே பெற்றுக் கொண்டுள்ளது. இதே நேரம் பல்வேறு நாடுகளில் ஒரு 'சமூகப் பணி'யாகவும் கொள்ளப்படுகின்றது.


இன்று, வளர்ச்சி பெற்றுள்ள நவீன தொழில் நுட்பத்துடன் இத்துறை எந்தளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை ஆராயும் போது இன்னும் சில காலத்தில் இதன் போக்கு என்னவாகும் என்பது பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல இயலாது.

சில காலத்துக்கு முன்பாக வீதியோரமாக நின்று வாடிக்கையாளர்களுக்காகத் தவம் கிடந்த இத்துறை சார்ந்த பெண்கள், இப்போது புதிய தொழில் நுட்பத்தின் புண்ணியத்தில் மிகவும் இலகுவாகத் தங்களது தொழிலை நடாத்தி வருகின்றனர்.

நடமாடும் பாலியல் உழைப்பை விற்கும் பணிகள் இப்போது மிகத் தாராளமாக நகரங்களை அண்டிய பகுதிகளில் இடம் பெறுவதற்கு முக்கிய காரணியாக இருப்பது செல்லிடத் தொலைபேசித் தொடர்புகளாகும். அன்றாடம் பத்திரிகைகளில் இப்போது கொழும்பை அண்டிய பகுதிகளில் நடமாடும் சேவைகள் பற்றிய செய்திகளைக் காணலாம். இதில் இப்போது இணையத்தளமும் புகுத்தப்பட்டுள்ளது.

கொழும்பிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் மிகவும் இரகசியமான முறையில் இந்த நடமாடும் பாலியல் தொழில் நடைபெறுகின்றது. இதில் 'இரகசியம்' என்பது, அப் பகுதியில் உள்ள நடமாடும் மக்களுக்கு மட்டுமே. வாடிக்கை யாளர்களுக்கு இது இரகசியமல்ல.

கறுப்பு நிறக் கண்ணாடிகளைக் கொண்ட வாகனங்கள் இதற்காகப் பயன்படுத்தப் படுகின்றன. இந்த வாகனத்தை வாடிக்கையாளர்கள் நெருங்க வேண்டுமானால் பல



தொலைபேசி அழைப்புகளை எடுத்து, தங்களது நம்பகத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

வண்டியை நெருங்கியதும் முன்பக்கக் கதவைத் திறந்து, அதன் உரிமையாளர் முதலில் இறங்கி வந்து வாடிக்கை யாளர்களை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர்தான் வாடிக்கையாளர்கள் அந்த வண்டிக்குள் அனுமதிக்கப் படுகின்றனர்.

இவ்வாறுதான் இந்த நடமாடும் பாலியல் தொழில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.


வாகனத்தினுள் இருக்கும் இத்தொழில்சார் பெண்களைத் தெரிவு செய்வது மட்டும்தான் வாடிக்கையாளர்களின் உரிமை. அப் பெண்ணை வாடிக்கையாளர் கூறும் இடத்துக்கு அழைத்துச் செல்வதும், பின்னர் அழைத்து வருவதும் அத் தொழில் சார்ந்தவர்களது பொறுப்பாகும்.

அதாவது, முன்னரைப் போல் பாதைகளில் அலைந்து திரிந்து, மழையில் நனைந்தோ அல்லது வெயிலில் காய்ந்தோ கிடக்கத் தேவையில்லை என்பதால், அப் பெண்கள் இத் தொழிலை மிகவும் உல்லாசமாக இருந்தே மேற்கொள் கின்றார்கள்.

நடமாடும் பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ள இன்னொரு சாரார் தொலை பேசி அழைப்புகளின் மூலம் மாத்திரம் தொடர்பு கொள்பவர்களாக இருக்கின்றனர். அதாவது தொலைபேசி மூலம் ஒரு வாடிக்கையாளருக்குத் தீன் தேவைக்கேற்ப ஒரு பெண்ணைத் தெரிவுசெய்துகொள்ள இயலும். இதில், அப் பெண்ணின் பயணச் செலவுகள் உட்பட சகல செலவுகளையும் வாடிக்கையாளரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கொழும்பைப் பொறுத்தவரையில் இவ்வாறு இத் தொழிலில் ஈடுபடும் - அதாவது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளக் கூடிய துறை பல இடங்களில் செயற்பட்டு வருகின்ற போதிலும், இன்னமும் இது உயர்மட்ட வகுப்பைச் சார்ந்தவர்களிடம் மாத்திரமே காணப்படுகின்றது. இது ஒரு சிறு வட்டத்தையும் சார்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இவை அனைத்தையுமே மிஞ்சுகின்ற வகையில் புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நடை பெறுகின்ற இவ் வியாபாரத்தில் இன்று இணையத் தளமே



முன்னணியில் திகழ்கின்றது.

இணையத் தளம் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற இத் தொழில் மிகவும் பிரபல்யம் பெற்றும் உள்ளது.

பாலியல் தொழில் சார்ந்த இணையத் தளங்கள் இன்று ஏராளம் காணப்படுகின்றன. இதில் தொழில் புரிபவர்களது விபரங்கள் மாத்திரமின்றி தொழில் நடாத்துபவர்கள் தொடர்பான விபரங்களும் அடங்கியுள்ளன. இதில், சிறுவர் பாலியல் தொழிற்துறை, ஆண்கள் சார்ந்தவை மற்றும் ஓரினச் சேர்க்கையாளர்கள் தொடர்பான பல்வேறு தகவல்கள் உள்ளடங்குகின்றன.

இந்த முறைமை மிகவும் பாதுகாப்பானதும் இரகசியங்களைப் பேணக் கூடியதுமாகும் என இத் தொழிலில் ஈடுபட்டுள்ள பிரபல நிலையமொன்றின் முகாமையாளர் கூறுகின்றார்.

இதன்போது வாடிக்கையாளர் குறிப்பிடுகின்ற இடத்துக்கு அப் பெண் வருகை தருகின்றாள்.

இன்னொரு வகையில் இணையத் தளத்தின் ஊடாகத் தொடர்பு கொள்கின்ற பெண்ணுடன் தனது பிரச்சினைகள் தொடர்பாக வாடிக்கையாளர்களுக்கு கலந்துரையாடவும் இயலும்.

இதே நேரம் இணையத் தளத்தில் அலைந்து திரியும் போது அகப்படுகின்ற பாலியல் தொழில் சார்ந்த பெண்களில் பலர் அத் தொழிலை மட்டுமே கொண்டவர்கள் அல்லர். அவர்கள் வேறு முக்கிய தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களாகவும் இருக்கின்றனர்.

இதே நேரம் மின்னஞ்சல் மூலமாகவும் இவர்களுடன் தொடர்பு கொள்ள இயலும்.

இத் தொழிலில் ஈடுபடுவது மிகுந்த இலாபத்தை ஈட்டித் தருவதாகவும், வாடிக்கையாளர்கள் தனவந்தர்களாகவே இருப்பதனால் தங்களுக்கு இதில் நாட்டம் அதிகரித்துள்ள தாகவும் இப் பெண்கள் கூறுகின்றனர்.

சாதாரணமாக இப் பெண்கள் ஒரு வாடிக்கையாளரிட மிருந்து 5,000 ரூபாயில் இருந்து பணம் பெறுகின்றனர்.

எனினும், மோசடி ரீதியில் இவ்வாறான இணையத் தளங்களை நடாத்தி வரும் நிறுவனங்களும் இல்லாமலில்லை. அநேகமாக சமூகத்தில் பிரபலம் பெற்ற நடிகைகள், விளையாட்டு வீராங்கனைகள் போன்றவர்களது நிர்வாணப் புகைப்படங்களை (போலியாகத் தயாரிக்கப் பட்டவை) கொண்ட இணையத் தளங்களும் உண்டு. இதில் அவர்கள் அறவிடும் கட்டணம் மற்றும் ஏனைய சேவைகள் குறித்தும் விபரங்கள் அடங்கியிருக்கும். எனினும், வாடிக்கையாளர்களைச் சந்திக்கும் பெண்கள் மேற்கூறிய புகைப்படங்களை ஒத்த முகபாவங்களைக் கொண்டவர் களாவர்.

இவ்வாறான நடவடிக்கைகள் மிகவும் திட்டமிட்டே மேற்கொள்ளப்படுகின்றன. வாடிக்கையாளரிடம் வரும் பெண்ணுக்கான கட்டணத்தை 'கிரடிட் காட்' மூலம் முன் கூட்டியே செலுத்திவிட வேண்டும். அதே நேரம் ஹோட்டல் அறைக்கான கட்டணத்தையும் செலுத்தி அந்த அறையின் இலக்கத்தை முன் கூட்டியே தெரிவித்து விடவும் வேண்டும்.

இந்த வகையில் இத் தொழில், இலங்கையில் முன்னேற்றம் கண்டுள்ள நிலையில், எயிட்ஸ் நோயாளர்களும் அதிகரித்துக் கொண்டு வருவதை அவதானிக்க வேண்டியுள்ளது.

-பாரூக்

# சங்கர மடத்துக் கிங்கரர்கள்

**26**

சகல சமயங்களிலுமே உட்பிரிவுகள் பல இருக்கின்றன. இந்து சமயத்தை எடுத்துக் கொண்டால் சைவம், சமணம், வைஷ்ணவம், சாக்தம் என்று பல உட்பிரிவுகள் உள்ளன. கிறிஸ்தவத்தில் றோமன் கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து, பெந்தகொஸ்தே இப்படிப் பலப்பல. இஸ்லாத்தில் சியா, சுனி என்று இன்னும் பல. பௌத்தத்தில் சாதியின் பெயரால் பல மதப் பிரிவுகள். வட அயர்லாந்து யுத்தம் கிறிஸ்த்தவ சமயத்தின் இரு பிரிவுகளை மையமாக வைத்து நடைபெறுகிறது. சியா, சுனி என்ற இஸ்லாமிய மதப்பிரிவுகளுக்கிடையிலான மோதல் பள்ளிவாசல்களிலேயே தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்துமளவுக்கு வியாபித்துள்ளது. இப்படியெல்லாம் ஒரே மதத்துக்குள்ளேயே சச்சரவுகளும் சண்டைகளும் வளர்ந்துவிட்ட நிலையில் மதசௌஜன்யம், மத சகிப்புத் தன்மை என்பதெல்லாம் வெற்று வார்த்தைகளாகிவிட்டன.

உலகம் உருண்டை வடிவமானதென்று முதன் முதலாக உலகுக்கு எடுத்துக் கூறியவர் கலிலியோ கலிலி என்ற விஞ்ஞானி. உலகம் தட்டையானதென்று நம்பிய அன்றைய மதவாதிகளுக்கு, கலிலியோவின் கூற்று ஒரு சவாலாக அமைந்தது. ஆண்டவருக்கெதிராகப் பேசுகிறான் கலிலியோவெனக் கண்டனம் தெரிவித்த மதத் தலைவர்கள், கலிலியோவைக் கழுமரத்தில் ஏற்றிக் கொன்றனர். அன்று சாகடிக்கப்பட்ட உண்மை யேசுநாதரைப் போலப் பின்னர் உயிர்த்தெழுந்து உலகெங்கும் தகர்க்க முடியாத விதியாக வியாபித்து விட்டது.

சுமார் 2500 வருடங்களுக்கு முன்னர் மத்தியதரைக் கடல் நாடுகள் ரோமானிய சக்கராதிபத்தியத்தின் கீழிருந்ததாக வரலாறு கூறுகிறது. ஜெருசலேமில் தேவகுமாரனாக யேசுபிரான் மாட்டுத் தொழுவத்தில் அவதரித்து வளர்ந்த காலம் முதல் இன்றும்கூட ஜெருசலேம் யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களின் போராட்டக் களமாகத்தான் திகழ்கின்றன.

பதினொராம் நூற்றாண்டு காலப் பகுதியில் ஜெருசலேம் இஸ்லாமியர்களின் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்தது. ஐரோப்பாவிலிருந்து படையெடுத்த கிறிஸ்தவர்கள், ஆடைகளில் சிலுவையைப் பொறித்துக் கொண்டு சிலுவை யுத்தம் நடத்த ஆரம்பித்தனர். நூற்றுக்கு மேற்பட்ட வருடங்களாக நடைபெற்ற ஐந்துக்கு மேற்பட்ட சிலுவை யுத்தங்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பலியானார்கள். மன்னனே மதமாகவும் மதமே மன்னனாகவும் கருதப்பட்ட காலம் அது. இதனால்தான் மன்னனுக் கெதிராகச் செயல்படுகிறாரென்று கருதப்பட்ட தேவமைந்தன் யேசு கிறிஸ்துநாதர் சிலுவையிலறைந்து கொல்லப்பட்டார். அப்போதெல்லாம் மாற்று மதப் பிரசாரங்களில் ஈடுபட்டவர்களை ரோமானிய மன்னர்கள் 'கொலோசியம்' என்றழைக்கப்பட்ட திறந்த வெளி மைதானத்தில் உயிரோடு சிங்கங்களுக்கு இரையாக வீசினார்களென்று வரலாறு கூறுகிறது.



சங்கராச்சாரியார் ஜெயேந்திரருடன் இளையமடாதிபதி விஜேந்திரர்

1515 - 17 ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே கத்தோலிக்க மதத்தின் சில கட்டுப்பாடுகள், கோட்பாடுகளுக்கு எதிராகப் புறப்பட்டவர்கள் (THOSE WHO PROTEST) புரட்டஸ்தாந்தியர்களானார்கள். ஜெர்மனியில் டெற் சூல் என்ற கத்தோலிக்க பாதிரியார் பணம் வாங்கிக் கொண்டு பாவமன்னிப்பு வழங்கினாரென்ற காரணத்தால் அவருக்கெதிராகப் பல பாதிரிமார்கள் கிளர்ந்தெழுந்தார்கள். 'மார்ட்டின் லூதர்' என்ற பாதிரியாரின் தலைமையின் கீழ் கிளர்ந்தெழுந்தவர்கள் புரட்டஸ்தாந்துவர்களாகினர் என்று வரலாறு கூறுகிறது.

இங்கிலாந்தில் எட்டாவது ஹென்றி மன்னன், தனது மனைவியிடமிருந்து விவாகரத்துப் பெறுவதற்காகக் கத்தோலிக்க திருச்சபையிடம் அனுமதி கோரி, அது மறுக்கப்பட்ட நிலையில் ஆத்திரமுற்று மன்னனே மதத்துக்குப் பொறுப்பெனப் பிரகடனப்படுத்திக் கொண்டான். அவனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த மேரி என்ற ராணி நூற்றுக் கணக்கானவர்களைக் கொன்று குவித்தவளென்பதால் புளடி மேரி (BLOODY MARY) என அழைக்கப்பட்டாளென்று வரலாறு கூறுகிறது.

இவையெல்லாம் தவறிப் போய்விட்ட வரலாற்றுப் பக்கங்களல்ல. தவறுகளைக் காட்டும் வரலாற்றின் பக்கங்கள். ரஷ்யாவின் ரஸ்புடீன், அமெரிக்காவின் றோல்ஸ் றோய் காரில் பவனிவந்த பாலியல் சாமியார் ரஜனீஸ், இந்தியாவில் கொலை, சில்மிஷச் சேட்டைகளுக்காக இரட்டை ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் இலங்கையைச் சேர்ந்த பிரேமானந்த சாமியார் (மாத்தளை ரவி) ஆகியவர்களெல்லாம் மத வரலாற்றின் மறுபக்கங்களாகக் காட்டப்படக் கூடியவர்கள். இத்தகைய எதிர்மறை அம்சங்கள் இருக்கின்றனவென்பதற்காக மக்கள் மதநம்பிக்கைகளை இழந்து விடவில்லை. சமயங்களின் போர்வைக்குள் சாட்சாத் சாத்தான்கள் புகுந்து கொண்டு விட்டதால் காலம் காலமாக ஏற்பட்டு வந்த - ஏற்பட்டு வரும் தடம் புரள்வுகள் இவை.

இந்தப் பின்புலத்தில்தான் 'சங்கரமடத்துக் கிங்கரர்கள்' என்ற இத் தொடரையும் வாசக


**காஞ்சிபுரத்திலிருந்து**

**அருண் கண்ணன்**


நேயர்கள் பார்க்க வேண்டும். ஜெயேந்திரருக்குக் கீழ் நீதிமன்றங்கள் ஜாமின் வழங்க மறுத்த நிலையில் கொலைக்குற்றச் சாட்டுக்குப் போதிய ஆதாரமில்லையென்று கூறி உச்சநீதிமன்றம் ஜாமின் வழங்கியமையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எந்தச் சமய நம்பிக்கைக்கும் சமயம் சார்ந்த கோட்பாடுகளுக்கும் பெரியவர்களுக்குமெதிராக எழுதப்பட்ட விடயதானமல்ல இது. சம காலத்தில் சர்ச்சையைக் கிளப்பிய ஒரு விடயம் சம்பந்தமான சம்பவக் கோவையே இது. அரசியல் சாயமோ, சமூக, சமயச் சாயங்களோ பூசாவிட்டால் சரி. அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்கிறார்களே. காலத்தின் கைகளில் சங்கரராமன் கொலையை விட்டு விடுவோம்.

(முற்றும்)

---

**தினமுரசின் அபிமான வாசகர்களே! உங்களுக்காக சனிப் பெயர்ச்சியின் பின்னரான பலாபலன்களை விரிவாக கணித்துத் தந்துள்ளார் உலக மாந்திரீக சித்தர் பேராசிரியர் டாக்டர் பீ.கே.சாமி ஐயா அவர்கள். அறிந்து அனுகூலமடையுங்கள். இதோ அவரது ஆசியும், அருளும்.**

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

**இந்தப் பகுதியில் சனிப் பெயர்ச்சியையும் குரு மாற்றத்தையும் கலந்து எழுதியுள்ளேன். பொதுவாக ராசி வாரியாக கொடுத்து இருந்தாலும் தீய பலன் உள்ளவர்கள் பயப்பட அவசியம் இல்லை. காரணம் உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ராசி நேயருக்கு இந்த சனிப் பெயர்ச்சி நன்மையாக இருந்தால், நீங்களும் தீயபலனில் இருந்து விலக வாய்ப்பு இருக்கின்றது. நல்ல திசைகளும் துணைக் கிரகங்களின் பார்வைகளும் நன்மையாக இருந்தால் தீய பலன் வருவதற்கு வாய்ப்பு இல்லை.**

**ஓம் சத் மத் யத் மத்**

## மிதுனம்



**7 1/2 சனியில் இறுதிக் கட்டம் 2இல் சனி**

சனி பகவான் 24.06.2005 முதல் ராசிமாறி உங்கள் ராசிக்கு இரண்டாமிடத்தில் சஞ்சரிக்கிறார். இது ஏழரைச் சனியின் இறுதிக் கட்டமாக இருப்ப தாலும், உங்கள் ராசிக்கு சனி பாக்கியாதிபதியாக இருப்பதாலும் பெருங்கொண்ட தீமைகளைச் செய்யமாட்டார் என நம்பலாம். அடிக்கிறபடி அடித்து கொடுக்கிறபடி கொடுக்கவும் செய்வார். அதாவது அடிக்கவும் செய்வார் அணைக்கவும் செய்வார். அதாவது தண்டனையும் கொடுத்து தகுந்த பரிகாரமும் செய்வார். சனி பகவான் நீதிமான் என்பதால் யாரையும் அனாவசியமாகத் தண்டிக்க மாட்டார். அப்படித் தண்டித்தாலும் அந்த அளவுக்குத் தண்டனை கொடுத்து விடுவார். இது உண்மைதான். எனவே இரண்டாமிடச் சனியை எண்ணி பயந்து போக வேண்டாம். தைரியத்தோடும் சுறுசுறுப்போடும் செயல்படுங்கள். காரிய சாதனை புரியலாம்.

குடும்பத்தினர்களோடும் உறவினர்களோடும் ஒரு சில மனக்கசப்புகள் ஏற்பட்டு நீங்கும். கண்ணில் வலி, எரிச்சல், நீர் வடிதல் போன்ற சில தொல்லை கள் ஏற்பட்டு நீங்கும். அலட்சியம் செய்யாமல் அவ்வப்போது மருந்து செய்து கொள்வது நல்லது.

உங்களுக்கு வரவேண்டிய பணத்தை ஒன்றுக்கு நான்கு முறை நடந்தாவது வசூல் செய்து விடலாம். முன்புபோல ஸ்டே பிரேக்குகள் இருக்காது. நீக்குப் போக்கு இருக்கும். அதுபோல் நீங்கள் கொடுக்க வேண்டிய பணத்தையும் எப்பாடுபட்டாவது புரட்டி குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பிக் கொடுத்து விடலாம். இது போதாதா? இந்த அளவு தாட்சண்யம் காட்டி னாலே போதும், சமாளித்துக் கொண்டு விடலாம்.

கொடுத்த வாக்குறுதிகளைச் சிரமத்தின் பேரிலேனும் நிறைவேற்றலாம். கொடுக்கல் வாங்கல் சுமார் நிலையில் இருக்கும். பொருளாதார நிலையில் மந்தமான சூழ்நிலை நிலவிய போதிலும், தேவைகளை ஓரளவு சமாளிக்கக் கூடிய அளவிற்குப் பண வரவு இருக்கும். ஏழரைச் சனி என்றாலே எட்டுக் காத தூரம் ஓடுபவர்களுக்கு இந்தச் செய்திகள் காதில் தேன் பாய்ந்தது போல அமையும் என்பது உறுதி. ஜன்மச் சனி என்ற கிலியில் மாட்டிக் கொண்ட நீங்கள் இப்போது கொஞ்சம் ஆசுவாசப் பட்டுக் கொண்டிருப்பீர்கள் அல்லவா?

மனைவியின் உடல் நலனில் கவனம் தேவை. திடீரென்று சுகவீனம் ஏற்பட்டு மருந்துச் சிகிச்சை செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம். பிள்ளைகள் தொழில் ரீதியாகச் சில இடர்பாடுகளைச் சந்திக்க நேரும். தாயார் வழி இலாப வரவுகள் அதிகரிக்கும்.

தகப்பனார் வழி ஆதரவு உண்டாகும். அவரது செய்தொழில் வியாபாரங்களில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். சகோதரர்கள் தொழில், வியாபாரம் அல் லது வாகனம் சம்பந்தப்பட்ட வகையில் சிறு நஷ்டத்தை அடைய நேரிடும். இவையெல்லாம் தவிர்க்க முடியாதவைகள்தான் என்றாலும் முன்னெச் சரிக்கையோடும் நிதானமாகவும் செயல்பட்டால் ஒரு சில இழப்புகளோடு தப்பலாம்.

இனி அவருடைய பார்வைகளால் ஏற்படும் பலன்களைப் பற்றிப் பார்ப்போம்.

சனி பகவான் மூன்றாம் பார்வையாக உங்கள் ராசிக்கு நாலாமிடத்தைப் பார்க்கிறார். இதனால் வாகனயோகம் பயன் தரும்படியாக இருக்காது. மாடு, கன்றுகள் நஷ்டத்தைத் தரும். எனவே புதிய வாகனங்கள், கன்று, காலிகள் வாங்குவதை ஒத்திப் போடுவது நல்லது. இருப்பவற்றையும் கவனமாகப் பராமரிக்க வேண்டும். அலைச்சலும் காரியதாமதமும் உண்டாகும். உடல் ஆரோக்கியம் பாதிப்படையும். தாயாரது ஆதரவு குறையும். அவருடன் கருத்து வேறுபாடு ஏற்படவும் இடமுண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தாமல் தேர்வுகளில் மதிப்பெண் குறைந்து போகவும் வாய்ப்புண்டு. எனவே, பிள்ளைகளின் பராமரிப்பில் கவனம் செலுத்துவது அவசியம்.

சனி பகவான் பத்தாம் பார்வையாக உங்கள் ராசிக்குப் பதினோராமிடத்தைப் பார்க்கிறார். இதனால் இலாப வரவுகள் குறைந்து போகும். திட்டமிட்ட காரியங்களில் தடை, தாமதங்கள் உருவாகும். தொழில், வியாபாரம், உத்தியோகம் முதலியவற்றில் சிலபல பிரச்சினைகள் தோன்றும். கதவடைப்பு, வேலை நிறுத்தங்களுக்கு அதிக வாய்ப்பு உண்டு. அப்படி ஏற்பட்டால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் அழைத்துப் பேசுங்கள். விட்டுக் கொடுத்துப் போங்கள். கௌரவம் பார்க்க வேண்டாம். விவசாயிகள் பயிர்த் தொழிலில் நஷ்டத்தை அடைவார்கள். தண்ணீர்ப் பற்றாக்குறை, பூச்சியடிப்புகளால் பாதிப்பு உண்டாகும். மூத்த சகோதரரால் இடையூறுகள் உண்டாகும்.

எனவே, சனிக்கிழமை தோறும் சனி பகவானுக்கு எள் எண்ணெய் தீபம் இட்டு வழிபட்டு வாருங்கள். சகல வழிகளிலும் நிம்மதி பெறலாம். மொத்தத்தில் இவ்வாண்டைப் பொறுத்தவரையில் சனிபகவான் உதவி குறைவே என்பதை மனத்தில் கொண்டு செயல்பட்டால், எல்லாவற்றையும் சமாளித்து விடலாம். அடுத்து குரு பகவானைப் பற்றிப் பார்ப்போம். குருபக வான் வருட ஆரம்பம் முதல் 19.9.2005 வரை நாலாமிடத்தில் சஞ்சரிக்கவுள்ளார். நாலாமிடம் குருவின் சஞ்சாரத் திற்கு உகந்த இடமல்ல. இது உங்களுக்கே தெரியும்.

மேஜர் கிரகங்கள் உதவி செய்யாத போது மாதக்கிரகங்கள் கைகொடுத்துக் தூக்கிவிட்டு விடும். அப்படியும் ஒரு சில சமயம் அற்புதங்கள் நடப்பது உண்டு.

அந்த அற்புதங்கள் உங்களுக்கும் நடக்காதா என்ன! நடக்கும். நம்பிக்கையோடு தொடருங்கள். இனி பலனைப் படியுங்கள்.

செய்தொழில், வியாபாரம் ஆகியவற்றில் எதிர் பார்த்த அளவிற்கு இலாபம் கிட்டாது. தொழிலா ளர்களுக்கும் உத்தியோகஸ்தர்களும் உழைப்பிற் கேற்ற ஊதியத்தை அடைய முடியாது. வேலைப் பளு கூடும். இன்னொருவர் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும். ஆனால் அதற்கான பலன் மட்டும் கிடைக்காது. எடுத்த காரியங்களில் தடை, தாமதங்கள் உருவாகும். வீண் அலைச்சல் ஏற்படும். உடல் நலனில் சிலபல இடையூறுகள் உண்டாகும். எல்லாவற்றிலும் ஒருவித குழப்பமும் அதிருப்தியும் நிலவும். சனி, குரு ஆகிய இருவருமே இவ்வாண்டு முழுவதும் நமக்கு உதவி செய்யப் போவது இல்லை என்பதை மனத்தில் கொண்டு செயல்படத் தொடங்கி னால் எல்லாவற்றையுமே எளிதாக சமாளித்து விடலாம் பார்த்துக் கொள்ளுங்கள்.

இனி அவருடைய பார்வைகளால் அடையப் போகும் பலன்களைப் பற்றிப் பார்ப்போம்.

குரு பகவான் ஐந்தாம் பார்வையாக எட்டாமிடத் தைப் பார்க்கிறார். இதனால் ஆயுள் பலம் அதிகரிக்கும். வீண் விவகாரங்கள் மட்டுப்படும். கண்டங்கள் விலகும். ஆபத்துக்கள் மறையும். எதிர்பாராத பண வரவு உண்டாகும். சண்டை சச்சரவு குறையும். கொஞ்சம் மட்டுப்படும்.

குரு பகவான் ஏழாம் பார்வையாக பத்தாமிடத் தைப் பார்ப்பதால் செய்தொழில், வியாபாரங்கள் மந்த நிலை அடையும். சமுதாய அந்தஸ்து, கௌரவம் குறைந்து போகும். உத்தியோகஸ்தர்கள் சிலபல இடையூறுகளைச் சந்திக்க நேரும். ஒரு சிலர் நிரந்தரப் பணி நீக்கத்திற்கும், ஒரு சிலர் சஸ்பென்ஷனுக்கும் ஆளாவார்.

ஒன்பதாம் பார்வையாக பன்னிரெண்டா மிடத்தைப் பார்ப்பதால், அனாவசியச் செலவுகள் அதிகரிக்கும். தேவையற்ற அலைச்சல்கள் உண்டா கும். மனத்தில் நிம்மதியற்ற நிலை உருவாகும்.

இத்தகைய இன்னல்களைக் கொடுத்து வந்த குருபகவான் 19.09.2005 முதல் ராசி மாறி உங்கள் ராசிக்கு ஐந்தாமிடத்தில் சஞ்சரிக்க உள்ளார். ஐந்தாமிடம் குருவின் சஞ்சாரத்திற்கு மிகவும் உகந்த இடமாகும். 4 இல் இருந்த போது கொடுத்து வந்த தொல்லைகளை விலக்கிக் கொள்வார். இனி ஒரு மூன்று மாதங்களுக்கு வசந்தத்தை அனுபவிக் கலாம். கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொள்ளலாம். முன்னோர்கள் தேடி வைத்த பூர்வீகச் சொத்து கைக்கு வந்து சேரும்.

பிள்ளைகள் சம்பந்தப்பட்ட விஷயங்கள் எல்லாம் நல்ல படியாக நடக்கும். நினைத்த காரியங்கள் கைகூடும். திருமணமாகாத இளம் வயது ஆண் பெண்களுக்கு திருமண வாய்ப்பு கூடிவரும். நல்ல புத்திர சந்தானப் ப்ராப்தி உண்டா கும். உடல் ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். விவசாயிகள் அமோக விளைச்சலையும் விளை பொருட்களுக்கு நல்ல விலையையும் அடை வார்கள்.

குரு பகவான் ஐந்தாம் பார்வையாக ஒன்பதா மிடத்தைப் பார்ப்பதால் தகப்பனாரது ஆதரவு அதிகரிக்கும். தெய்வ அருள் உண்டாகும். தெய் வீகத் திருத்தலங்களுக்கு யாத்திரை செல்லும் வாய்ப்பு உண்டு. நேர்த்திக் கடன்களை நிறை வேற்றலாம். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவார்கள்.

குரு பகவான் ஏழாம் பார்வையாக பதினோரா மிடத்தைப் பார்ப்பதால் திட்டமிட்ட காரியங்கள் எளிதில் வெற்றி பெறும். செய்தொழில், வியாபாரங் களில் இலாப வரவுகள் அதிகரிக்கும்.

குரு பகவான் ஒன்பதாம் பார்வையாக ஜென் மராசியைப் பார்ப்பதால் உடல்பலமும் பொலிவும் தேக சுகமும் அதிகரிக்கும். ஆரோக்கியம் நல்ல நிலையில் இருக்கும். மனதில் ஏற்பட்டிருந்த குழப்பமும் கவலையும் நீங்கி சுறுசுறுப்பும் உற்சாகமும் உண்டாகும். இந்தக் கால கட்டத்தில் ஏழரைச் சனியால் ஏற்படவிருக்கும் இன்னல்களைக் கூட சமாளிக்க குரு பகவான் கை கொடுப்பார்.

பிரயாணங்கள் திட்டமிட்டதாக அமையும். அலைச்சல் திரிச்சல் குறையும். அடிப்படை வசதிகள் பெருகும். தொழில் வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். புதிய தொழில்களைத் தொடங்கவும் வாய்ப்புண்டு.

*(அடுத்த வாரம் கர்கடக ராசியைப் பற்றி பார்க்கலாம்...)*





காளி மீது நெஞ்சம் - என்றும் - கலந்து நிற்க வேண்டும்;
வேளை யொத்த விறலும் - பாரில் - வேந்த ரேத்து புகழும்,
யாளி யொத்த வலியும் - என்றும் - இன்பம் நிற்கும் மணமும்;
வாழிமீதல் வேண்டும். அன்னாய்! - வாழ்க நின்றன் அருளே!.

**- சுப்பிரமணிய பாரதியார்**

# அரக்கனும் வேடனும்

பாப்பா முரசு சிறுகதை



காட்டில் கனமழை பெய்து கொண்டிருந்தது. மழையில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டி, வேடன் ஒருவன் ஏதாவது குகை கண்களில் தென்படாதா என்று ஓடினான்.

அப்போது ஓர் மரத்தடியில் அரக்கன் ஒருவன் மழையில் நனைந்தபடியே படுத்திருப்பதைக் கண்டான் அந்த வேடன்.

அந்த அரக்கனின் காலில் பலமான அடிபட்டிருந்ததால் அவனால் அந்த இடத்தை விட்டு எழுந்துகொள்ள முடியவில்லை. பெரிய உருவத்தைக் கொண்ட அரக்கனைத் தூக்கி நிறுத்துகின்ற சக்தி வேடனுக்கு இல்லை.

முதலில் இந்த அரக்கனை மழையில் இருந்து பாதுகாக்க வேண்டும். அதன் பின்னர் அவனது கால் காயத்திற்கு மருந்திட வேண்டும் என்று முடிவு செய்தான் வேடன்.

உடனே காட்டில் ஆங்காங்கே வளர்ந்திருந்த மூங்கில்களை எல்லாம் ஒடித்து வந்த வேடன் அரக்கன் படுத்திருந்த இடத்தில் செடி கொடிகளால் நன்கு சுற்றி மழைநீர் கீழே விழாதவாறு பந்தலை அமைத்தான்.

பின்னர் அரக்கனின் கால் காயத்திற்கு பச்சிலை மருந்தினைப் போட்டுக் கட்டினான்.

சிறிது நேரத்தில் மருந்து வேலை செய்யவே, மெல்ல தன் கண்களைத் திறந்து பார்த்தான் அரக்கன். தன்னைச் சுற்றிலும் பந்தல் அமைக்கப்பட்டிருப்பதையும் கால் காயத்திற்கு மருந்து போட்டிருப்பதும் அரக்கனுக்கு வியப்பை அளித்தது.

'அடேயப்பா! நமக்கு இவ்வளவு பெரிய உதவியினை யார் செய்து விட்டார்கள்!' என்ற எண்ணத்தோடு அருகில் திரும்பி பார்த்தான் அரக்கன்.

அங்கே கைகட்டியபடி வேடன் நின்று கொண்டிருந்தான்.

வேடன் உடல் முழுவதும் மழைநீர் வழிந்து கொண்டிருந்தது.

உடனே அரக்கன் "வேடன்! எனக்கு பாதுகாப்பாக குடை அமைத்தாய்! என் கால் காயத்திற்கு மருந்தும் போட்டாய்! ஆனால் நீ மழையில் நனைந்து கொண்டிருக்கின்றாயே! நீயும் என்னோடு இந்தப் பந்தலின் உள்ளே வந்து அமர்ந்து கொள்" என்றான்.

வேடன் தயக்கத்தோடு நடுங்கியபடி நின்று கொண்டிருந்தான்.

"வேடனே! நீ எதனால் இப்படி பயப்படுகின்றாய் என்பதை நானறிவேன். நீ என்னைக் கண்டு பயப்படவேண்டாம்! எனக்கு உதவி செய்த உன்னை ஒரு போதும் துன்புறுத்த மாட்டேன். உனக்கு நன்மை செய்ய வேண்டியே நான் ஆசைப்படுகிறேன். அதனால் நீ ஒரு போதும் தயக்கம் காட்ட வேண்டாம். உடனே மழையில் நனையாத வண்ணம் என் அருகில் நின்று கொள்" என்றான் அரக்கன்

வேடனுக்கு சற்றுர் பயம் தெளிந்தது 'அரக்கனே வரச் சொல்லி விட்டார், அதனால் மழையில் நனையாத வண்ணம் அரக்கனின் அருகே அமர்ந்து கொள்ளலாம்' என்று முடிவு செய்தான் வேடன்.

மெல்ல அரக்கனின் அருகே சென்று அவனை ஒட்டியவாறு நின்று கொண்டான் வேடன்.

"வேடன்! நீ பயப்படாமல் நில்! நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன். என் காலில் அடிபட்டதால் வலி ஏற்பட்டது. அந்த வலியால் நான் மயங்கியபடி விழுந்து விட்டேன். நல்லவேளையாக நீ வந்து மருந்திட்டு என் கால் காயத்தை குணப்படுத்தினாய்! இதற்கு நான் ஏதாவது கைமாறு செய்ய வேண்டும். என்று நினைக்கிறேன். உனக்கு என்ன வேண்டும் என்று கேள் நான் உனக்கு அதனை எனது சக்தியின் மூலம் வரவழைத்துத் தருகிறேன்" என்றான் அரக்கன்.

அரக்கன் இவ்வாறு கூறியதும் வேடன் மகிழ்ச்சியடைந்தான். அரக்கனிடம் எதைக் கேட்கலாம் என்று நீண்ட நேரமாக குழம்பிக் கொண்டிருந்தான்.

அப்போது அவனுக்கு திடீரென மனைவியின் ஞாபகம் வந்தது.

உடனே அரக்கனைப் பார்த்தான் வேடன். "அரக்கனே! நான் எதைச் செய்தாலும் என் மனைவியிடம் கலந்து ஆலோசனை செய்துதான் செய்வேன். நான் இன்று என் மனைவியிடம் இதனைப் பற்றி தெரிவித்து ஆலோசனை செய்த பின்னர் நாளை இதே இடத்திற்கு வருகிறேன். நீயும் இங்கே வந்து நான் கேட்டவற்றைக் கொடுக்கின்றாயா?" என்று கேட்டான்.

"ஓ! தாராளமாகக் கொடுக்கிறேன். எதையும் உடனே கேட்டு விடாமல் நன்கு யோசித்த பின்னர் கேட்பது நல்ல பழக்கம்தான், நீ உன் மனைவியுடன் கலந்து ஆலோசனை செய்து நாளை வா! நீ வரும் முன்னரே நான் உனக்காகக் காத்துக் கொண்டிருப்பேன்!" என்றான் அரக்கன்.

சிறிது நேரத்தில் மழையும் நின்று விடவே, வேடனும் மகிழ்ச்சியுடன் இல்லத்திற்குத் திரும்பினான்.

வேடனின் மகிழ்ச்சியைப் பார்த்த அவன் மனைவி வியப்படைந்தாள்.

"வெளியில் சென்று வரும் நேரம் எப்போதுமே உம்மென்று வருவீர்கள். இப்போது மட்டும் மகிழ்ச்சியுடன் வருகின்றீர்களே! நான் என்ன காரணம் என்று அறிந்து கொள்ளலாமா?" என்று கேட்டாள்.

உடனே வேடன் "நான் சொல்லப்போவது அதிக மகிழ்ச்சியான செய்தி தான். அதனை கேட்டால் நீ ஆனந்தமடைவாய்!" என்றான்.

"அடேயப்பா! அந்த அளவுக்கு மகிழ்ச்சியான செய்தியா? அதனைக் உடனே சொல்லுங்கள்!" என்று கூறினாள் வேடனின் மனைவி.

"அன்பே! நான் காட்டில் ஓர் அரக்கனைச் சந்தித்தேன். அந்த அரக்கனின் கால் காயத்திற்கு மருந்திட்டு அவன் படுத்திருந்த இடத்தில் பந்தல் அமைத்து மழைநீர் அவன் மீது வடியாதபடி உதவி செய்தேன். நான் செய்த உதவியால் அந்த அரக்கன் மிகவும் மகிழ்ச்சியடைந்து விட்டான். அதற்கு கைமாறாக அவன் தனது மந்திர சக்தியின் மூலம் நான் கேட்டதைத் தருவதாகக் கூறினான்.

நான் அந்த அரக்கனிடம் என்ன கேட்பது என்று தெரியாமல் உன்னிடம் ஆலோசனை கேட்க வந்தேன். நீ தான் அவனிடம் என்ன கேட்கலாம் என்பதைக் கூற வேண்டும்" என்றான் வேடன்.

அவன் மனைவி வேடனைக் கோபத்துடன் பார்த்தாள். "உங்களுக்கு ஆசை அதிகம் தான் போலத்தான் தெரிகிறது! அந்த அரக்கனுக்கு நீங்கள் உதவியைத்தானே செய்தீர்கள்! அதற்காக அவனிடம் பலனை எதிர்பார்ப்பது எந்த வகையில் நியாயம்? அரக்கனிடம் நீங்கள் உதவி பெற்றால் செய்த உதவிக்கே அர்த்தம் இல்லாமல் போய்விடுமே! அதனால் நீங்கள் அந்த அரக்கனிடம் எதுவும் கேட்டுப் பெற வேண்டாம்! அவன் தருகின்ற பரிசுப் பொருட்கள் எதையும் வாங்காமல் அன்புடன் மறுத்து விடுங்கள்" என்றாள்.

மறுநாள் அரக்கனைக் காண வேடன் புறப்பட்டான்.

வேடனை வழியில் ஒரு விறகு வெட்டி சந்தித்தான். "வேடனே! ஏதோ யோசனையுடன் செல்கிறாய் போன்று தெரிகிறதே! நீ எங்கே செல்கிறாய் என்பதை நான் அறிந்து கொள்ளலாமா?" என்று கேட்டான்.

வேடனும் அந்த விறகு வெட்டியிடம் நடந்தவற்றையெல்லாம் தெரியப்படுத்தி, அரக்கனை காணச் செல்வதாகக் கூறினான்.

உடனே விறகு வெட்டி "வேடன்! நீயும் பிழைக்கத் தெரியாதவன்! உன் மனைவியும் பிழைக்கத் தெரியாதவள்! கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் அந்த அரக்கனிடம் இருந்து பொன், பொருள், நகைகள் எல்லாம் பெற்றுக் கொண்டு வசதியோடு வாழலாம்" என்றான்.

உடனே வேடன் அதற்கு மறுப்புத் தெரிவித்தான். "விறகு வெட்டியே! நான் என்றுமே மனைவி பேச்சை மீறியதில்லை. அவள் பேச்சுக்கு கட்டுப்பட்டு நடப்பதை வழக்கத்தில் கொண்டுள்ளேன். எனவே ஒருபோதும் அவளுடைய பேச்சை நான் மீறவே மாட்டேன். அரக்கனிடம் நான் எதுவும் கேட்கப் போவதில்லை!" என்று உறுதியுடன் கூறியபடி சென்றான்.

அப்போது விறகு வெட்டி வேடனைப் பின் தொடர்ந்தான். வேடன் அரக்கனை சந்திக்கும் நேரம் மறைந்திருந்து கவனித்தான்.

அரக்கனை நெருங்கினான் வேடன். "வேடனே! வேடனே! வா! வா! உன் வருகையைத்தான் நான் கவலையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் அரக்கன்.

"அரக்கனே! என் மனைவி உன்னிடம் எதுவும் வாங்கக் கூடாது என்று அன்புக் கட்டளையிட்டு விட்டாள். உன்னிடம் ஏதாவது வாங்கினால் அதன் பின்னர் நான் உனக்குச் செய்த உதவிக்கு அர்த்தம் இல்லாமல் போய் விடுமாம். அதனால் எதுவும் வாங்கக் கூடாது" என்றான் வேடன்.

"வேடனே! உன்னைப் போன்று உன் மனைவியும் நல்லெண்ணம் படைத்தவளாயும், பொருள் மீது ஆசை இல்லாதவளாகவும் இருக்கின்றாள். உங்கள் இருவரையும் பார்த்து நான் மிகவும் பெருமையடைகிறேன். கண்டிப்பாக நான் உங்களுக்கு உதவி செய்தாக வேண்டும். அப்போது தான் என் மனமும் மகிழ்ச்சியடையும்" என்று கூறினான் அரக்கன்.

பின்னர் தன் கண்களை மூடியபடி ஏதோ மந்திரங்களை உச்சரித்தான்.

வேடனின் முன்னே ஒரு மூட்டை தங்க நாணயங்கள் தோன்றியன.

"வேடனே! உனக்கும், உன் மனைவிக்கும் நானாக கொடுக்கும் அன்புப்பரிசு இது! இதனை நீ கண்டிப்பாக எடுத்துச் சென்றுதான் தீர வேண்டும். இல்லையென்றால் என் மனது மிகவும் புண்பப்படும்" என்றான் அரக்கன்.

அரக்கனின் மனதில் நாம் துளியளவு கூட துன்பத்தினை ஏற்படுத்தக்கூடாது என்று நினைத்த வேடன் அந்த தங்க நாணயங்களை எடுத்துக் கொண்டான்.

பின்னர் அரக்கனுக்கு நன்றி கூறியபடி வீட்டிற்குத் திரும்பினான்.

மறைவிடத்தில் இருந்தபடி இதனையெல்லாம் நன்கு கவனித்துக் கெண்டிருந்த விறகு வெட்டியோ அந்த அரக்கனை நன்கு அடையாளம் கண்டு கொண்டான். இந்த அரக்கனின் அன்பைப் பெற்று அவனிடம் பத்து மூடை தங்க நாணயங்களைக் கேட்டுப்பெற வேண்டும் என்று ஆசையை வளர்த்துக் கொண்டான்.

ஒரு நாள் காட்டில் கடும் மழை பெய்து கொண்டிருந்தது. அரக்கன் மழை பெய்வதைக்கூட அறியாது ஒரு மரத்தடியில் குறட்டை விட்டபடி தூங்கிக் கொண்டிருந்தான்.

இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்று நெடுநாட்களாக காத்துக் கொண்டிருந்த விறகு வெட்டியோ மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான்.

உடனே மூங்கிலை வெட்டி வந்து அரக்கனின் மீது மழைநீர் விழாத அளவுக்கு பந்தலை அமைத்தான்.

'அரக்கனைச் சுற்றி பந்தல் அமைத்து விட்டோம். அவன் இப்போ மழையில் நனையாமல் இருக்கிறான். ஆனால் அவன் கால் காயத்திற்கு மருந்திட வேண்டுமே! அரக்கனின் இரண்டு கால்களிலும் எந்தக் காயமும் இல்லையே! நாம் காயத்திற்கு என்ன செய்வது?' என்று யோசனை செய்தான்.

திடீரென அவன் மனதில் ஓர் எண்ணம் தோன்றியது. தாமதிக்காமல் கோடரியை எடுத்தான். தன் பலங் கொண்ட மட்டும் அரக்கனின் ஒரு காலை வெட்டிப் பிளந்தான்.

திடுக்கிட்டபடி எழுந்தான் அரக்கன். தன் காலை வெட்டிக் கொண்டு தன் முன்னே கோடரியுடன் நிற்கின்ற விறகு வெட்டியை அப்படியே பிடித்து விழுங்கி இரையாக்கிக் கொண்டான்.

# ஆத்திசூடி

## கொள்ளை விரும்பேல்

நீ மற்றவர்களுக்குச் சொந்தமான பொருட்களை அவர்கள் மனம் வேதனைப்படும் படியாக அவர்களை வருத்தி அபகரிக்க ஆசைப்படாதே!

-ஔவையார்


எஸ் நிரஞ்சலா, கண்டி.

# உங்கள் பொது அறிவு எப்படி?

## தெரிந்து கொள்ளுங்கள்

1. ஆப்கானிஸ்தானில் அதி மக்களால் பேசப்படும் மொழி எது? **புஷ்டு.**
2. இஸ்ரேல் நாட்டில் புத்தாண்டு எந்த மாதத்தில் துவங்குகிறது? **செப்டெம்பர்.**
3. ஜனாதிபதி ஆட்சி அமுலுக்கு கொண்டுவரப்பட்ட முதல்மாநிலம்? **கேரளா.**
4. ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் எந்த அணிக்கு எதிராக டெண்டுல்கர் 10 ஆயிரமாவது ரன்னை எடுத்தார்? **அவுஸ்திரேலியா.**
5. உலக அமைதிக்கான நோபல் பரிசை சிபாரிசு செய்வது யார்? **நோர்வே நாட்டுப் பாராளுமன்றம்.**
6. சமையல் எரிவாயுவில் அதிகமாகக் கலந்துள்ள வாயு எது? **மீதேன்.**
7. காஞ்சி கயிலாசநாதர் கோவிலைக் கட்டிய மன்னர் யார்? **இரண்டாம் நரசிம்ம வர்மன்.**
8. தார்ப் பாலைவனத்தின் வழியே ஓடும் நதி எது? **சிந்து நதி**
9. வெள்ளைப் பூண்டுவின் மணத்தைக் கொண்ட தனியம் எது? **வெண்பொஸ்பரஸ்**
10. மனித உடலில் உள்ள எலும்புகளின் எடை எவ்வளவு? **9 கிலோ கிராம்.**

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 27.07.2005

**வர்ணம் தீட்டும் போட்டி இல 605**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு.**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 603


**பரிசுக்குரியவர்:**
ரி. சரண்யா,
தரம் 8, 40, ஆரியகம, ஹட்டன்

**பாராட்டுக்குரியவர்கள் :**

| | |
|---|---|
| ஏ. சிந்துஷா ஜெயக்குமார், தரம் 6, மன்/புனித சவேரியார் பெண்கள் பாடசாலை, மன்னார். | பாத்திமா சினிபா ராம், ஹிஜ்ரா ஒழுங்கை, பழைய வீதி, காத்தான்குடி -03. |
| என்.மாலதி, 275 மாரியம்மன் கோயிலடி, மன்னார் வீதி, புத்தளம். | ப. அக்ஸயா, கனகநகர், தம்பிலுவில் -01. |
| யோகராசா கலாரஞ்சினி சரசாலை தெற்கு, சாவகச்சேரி. | ரா.திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. |
| பி. அனோஜன், தரம் 2, தூய தோமையர் கல்லூரி, பண்டாரவளை. | எ. சஞ்சிகா, தரம்1A, 388/8, பருத்தித்துறை வீதி, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். |
| ம. துபாகரன், நீதிமன்ற வீதி, மல்லாகம். | என். திவாகர், சன் அக்கடமி வீதி, தோணிக்கல், வவுனியா. |




# தேனீ மனிதன்




தேனீக்களை மேற்பார்வை செய்யும் அயர்லாந்து வாசியான பிலிப் மெக்கோப் தனது உடலில் 35,000 தேனீக்களை மொய்க்க விட்டு உலக சாதனைப் படைக்கும் உத்வேகத்தில் காத்திருந்தார்.... காத்திருந்தார்.... காத்திருந்தார்... 2 மணித்தியாலங்கள் வரை காத்திருந்தார். ஆனால் பாவம், 20,000 தேனீக்கள் மாத்திரமே மொய்த்தன. அது சரி, தேனீக்களை எண்ணியது யார்?




# இளம் கோடீஸ்வரர்


தாய்வான் நாட்டில் பிறந்து அமெரிக்காவில் குடியேறியுள்ள ஜெறி யாங் என்பவர் யாஹு டொட் கொம் (YAHOO.COM) இன்ரநெற்றில் உலக விடயங்களைக் கண்டு பிடிக்க உதவியவர்.... கண்டு பிடித்தவரும் இவர்தான். 1997ஆம் ஆண்டில் இவரின் வயது 29. ஆனால் 2002ஆம் ஆண்டு கோடீஸ்வரர் பட்டியலில் இவரின் பெயரும் அடங்கும். குறுகிய காலத்தில் கோடீஸ்வரர் ஆகியவர். 730 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிபதி.

# கைவினைக் காட்சி



சுலோவேக்கியா 'லியுபிலியானா' நகரில் அண்மையில் நடைபெற்ற கைவினைக் கண்காட்சி ஒன்றே இது. கடதாசி மட்டைகளைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட நாய்களின் மத்தியில் அகப்பட்டுக்கொண்ட உண்மையான் நாயார், நீண்ட நேர தேடலின் பின் தெளிவாகக் குழம்பிக் காணப்படுகிறார். தன் இனத்தை அடையாளம் காண்பதில் அதற்கும் குழப்பமேற்பட்டுள்ளது.

# வர்ண ஜாலம்



சுவிற்சர்லாந்து 'லேன்க்' நகரில் வருடாந்தம் நடைபெறும் 'பராக் லயிடின்' என்னும் போட்டி பார்வையாளர்களைக் கவர்ந்திழுக்கும் கண்கொள்ளாக் காட்சியாகும். உயர்ந்த மலையுச்சிகளிலிருந்து பிரகாசமான வண்ணங் கொண்ட பரசூட்களில் நூற்றுக்கணக்கான போட்டியாளர்கள் தரையை நோக்கி மிதந்து செல்லும் காட்சியைக் காணக் கண்கோடி வேண்டும் என்கிறார்கள் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள்.





மணமக்கள் கூட்டமாக இருந்து திருமணம் நடைபெறும் நிகழ்வு இந்தியாவில் அடிக்கடி நடைபெறுகின்றது. இவ்வாறான திருமணங்களுக்குப் பல சமூக சேவை அமைப்புக்கள் அனுசரணை வழங்குவதால் மணமக்களுக்கு கல்யாணச் செலவு மிச்சமாகிறது. இந்நோக்கத்திற்காகப் பெரும்பாலான மணமக்கள் கூட்டத்தோடு கோவிந்தா போட ஆர்வம் காட்டுகின்றார்கள். ஒரு கல்லில் இரண்டு மாங்காய்.

உலகின் குளிர் நாடான அலாஸ்கா பகுதியில் உறை பனிக்குள் வாழும் வெள்ளையினக் கரடியை, துருவக் கரடி என அழைப்பர். இக் கரடி நீருக்குள் இருக்கும் மீன்களையும் ஏனைய கடல் பிராணிகளையும் சுழியோடிப் பிடிப்பதில் திறமைசாலி.






ஒல்லிக்குச்சி உடம்பை வைத்திருக்கும் பெங்களூர் இறக்குமதி ப்ரியாமணிக்கு தமிழில் வெளியான "கண்களால் கைது செய்" படம் காலை வாரிவிட்டது. இதில் பலத்த அடிபட்ட அவருக்குத் தமிழில் இன்னும் சரியான திருப்புமுனை, அமையவில்லை. என்ன செய்வது என்று யோசித்த அவர், பாலுமகேந்திரா எழுதி இயக்கும் 'அது ஒரு கனாக்காலம்' என்ற படத்தில், முழுக்க முழுக்க பாலுமகேந்திரா பாணிக்கு மாறிவிட்டார். படத்தில் அவரது கவர்ச்சிக் காட்சிகளுக்கு ஏகப்பட்ட வரவேற்பு இருக்கும் என்று சொல்லப்படுகிறது. தனுஷ் ஜோடியாக நடிப்பதால் அந்தமாதிரி காட்சிகளும் நிறைய இருக்கிறதாம். தொடை அழகு தெரியு மாறு பாலுமகேந்திரா தனது கதாநாயகிகளைப் படமாக்குவது வழக்கம். அந்த நடிகைகள் வரிசையில் ப்ரியாமணி கொடுத்த ஒத்துழைப்பை அவர் சரியாகப் பயன்படுத்திக் காட்சிகளைப் படமாக்கி இருக்கிறார். பார்க்கத் தயாராகுங்கள்.




'அந்நியன்' தமிழில் திரைக்கு வந்த அதேநாளில் தெலுங்கில் 'அபரஜித்துடு' என்ற பெயரில் வெளியாகி மாபெரும் வெற்றி பெற்றுள்ளது. இதனால் சதாவுக்கு முன்பு இருந்ததைவிட அதிக வரவேற்பு கிடைத்து இருக்கிறது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்கேற்ப, இரண்டு தெலுங்குப் படங்களில் நடிக்க கால்ஷீட் கொடுத்துள்ளார் சதா. ஒரு படத்தில் பாய்ஸ் சித்தார்த் நாயகனாகவும், இன்னொரு புதிய படத்தில் பாலகிருஷ்ணா நாயகனாகவும் நடிக்கின்றனர். தமிழில் மாதவன் ஜோடியாக 'பிரியசகி' படத்தில் மட்டுமே நடித்து வருகிறார் சதா.

## அலுத்துப்போய் அமெரிக்கா செல்லவிருந்த ஆர்யா!

'அறிந்தும் அறியாமலும்', 'உள்ளம் கேட்குமே' படங்களை அடுத்து ஒரு கல்லூரியின் கதை படத்தில் நடித்துவரும் சென்னை அண்ணாநகரைச் சேர்ந்த புதுமுக ஹீரோ ஆர்யா சினிமாவில் சான்ஸ் எதிர்பார்த்த அளவு கிடைக்கவில்லை என்பதால், ஆரம்பத்தில் இரண்டு முறை அமெரிக்கா செல்ல விசா, டிக்கெட் எல்லாம் எடுத்து விட்டாராம்.

அந்த சமயத்தில்தான் ஒரு முறை 'உள்ளம் கேட்குமே' பட வாய்ப்பும், மற்றொரு முறை 'அறிந்தும் அறியாமலும்' வாய்ப்பும் இவரைத் தேடி வந்து. அமெரிக்கா செல்லவிடாமல் தடுத்து நிறுத்தியது.

அதனால்தான் இன்று நம்மிடையே ஒரு நல்ல நட்சத்திரத்தை தந்துள்ளது. இப்பொழுது அமெரிக்காவா, அதெல்லாம் மறந்துடுங்க, அது எந்தப் பக்கம் என்கிறார் ஆர்யா.

அஜித் பல்வேறு தோற்றங்களில் நடித்த 'சிட்டிசன்' என்ற படத்தை எழுதி இயக்கியவர் ஷரவணசுப்பையா. தற்போது இவர் ஷாம், சினேகா, நந்தனா, அபர்ணா இணைந்து நடித்து வரும் 'ஏ பி சி டி' என்ற படத்தை எழுதி இயக்குகிறார். அதோடு சினேகா மீது சந்தேகப்பட்டு, சிகரெட்டால் அவருடைய தொப்புளைச் சுற்றி சுட்டு, அவரைச் சித்திரவதை செய்யும் வக்கிர மனம் படைத்த கணவர் வேடத்திலும் நடித்து வருகிறார். அப்படி என்றால் ஷாமுக்கும், சினேகாவுக்கும் என்ன உறவு? அதாவது, படத்தில்..?

### பம்பரக்கண்ணாலே படத்துக்காக பட்டையைக் கிளப்பிய ஸ்ரீகாந்த் - நமீதா!

பிரசாத் ஸ்டுடியோவில் 'பம்பரக் கண்ணாலே' படப்பிடிப்பு. ஸ்ரீகாந்த் - ஆர்த்தி அகர்வால், நமீதா நடிக்கும் இந்தப் படத்தை சூப்பர் குட் பிலிம்ஸில் தயாரிப்பு நிர்வாகிகளான இருந்த செந்தில் - கணேஷ் இருவரும் தயாரிக் கிறார்கள். இளையராஜாவின் அண்ணன் பாஸ்கரின் வாரிசு பார்த்தி இயக்குகிறார்.

பம்பரக்கண்ணாலே வார்த்தையைக் கேட்டாலே சந்திரபாபு ஞாபகத்துக்கு வர்ற மாதிரி படம் முழுக்க ஜாலி பட்டாசாக வெடிக்கிற கதை இது. ஊட்டியைத் தொடர்ந்து சென்னையில் படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கிறது!







சந்தியா

## 'பயமாய் இருக்கிறது' பயமுறுத்தியது நிஜமாய்!

ஒளிப்பதிவாளர் எஸ்.டி.விஜய்மில்டன் முதல்முதலா எழுதி இயக்கும் படம் 'அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது'. பரத் நடிக்கும் இப்படத்தை தனது ட்ரீம் திடேட்டர்ஸ் மூலம் இயக்குநர் சேரன், யுவன்சங்கர்ராஜா இசையில் தயாரிக்கிறார். இந்தப் படத்திற்கு இன்று, ஸ்டார்ட்கேமரா ஆக்ஷன் என்று அறிவிக்கப்பட்டது. கடந்த 5ஆம் திகதி ஞாயிறு அன்று. ஆனால் அதற்குமுன்பே ஊட்டி, கோபி, உடுமலை மற்றும் கேரளாவின் சாலக்குடி உள்பட பிற பகுதிகளில் படப்பிடிப்பு ஸ்டார்ட்கேமரா ஆக்ஷன் என ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையில் தினசரிகளில் அந்தப் பட விளம்பரம் வந்ததற்கு சில நாட்களுக்கு முன் அவுட்டோர் வாகனங்கள் புறப்பட்டுப்போகும்போது...சேலம் பகுதியில் ஒரு விபத்து. புரொடெக்ஷன் ஆட்களை அழைத்துச் சென்ற ஜெனரேட்டர் வாகனம் விபத்துக்குள்ளாகி, அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது. பட யூனிட்டைச் சேர்ந்த ஐந்நூறு ஆட்கள் சீரியஸான கண்டிஷனில் ஐ.சி.யூனிட்டில் அட்மிட் ஆகி சிகிச்சை பெற்று வருகின்றனர். அதன் விளைவு வெகு விமரிசையாக பூஜை போட திட்டமிடப்பட்டிருந்த மேற்படி படத்திற்கு ஏற்கெனவே அச்சடிக்கப்பட்ட போஸ்டர் டிசைன்களை தினசரி செய்தித்தாள்கள் மற்றும் சென்னை மாநகர் சுவர்களில் மட்டும் விளம்பரம் செய்துவிட்டு நிறுத்திக் கொண்டனர். மேலும் பட டைட்டிலில் வரும் பயமாய் இருக்கிறது எனும் வார்த்தைதான் சென்ட்டிமெண்டாக இந்த விபத்திற்குக் காரணம் என எண்ணி அதையும் தூக்கிவிடும் யோசனையில் இருக்கிறதாம் இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர் தரப்பு. இது எப்படியிருக்கு?




## சந்தியாவுடன் ஒரு சந்திப்பு

துருதுருவென இருக்கிறார் 'காதல்' சந்தியா. ஆனால் பேச்சு ரொம்பவே நிதானம். காதலுக்குப்பின் மலையாளத்தில் 'ஆலிஷ் இன் ஒண்டர்லேண்ட்' என்கிற சிபிமலயில் படத்தில் நடித்து அங்கேயும் ரசிக மனசுகளை வசீகரித்துவிட்டு இப்போது 'வல்லவனில்' சிம்புவோடு, 'டிஷ்யூ'மில் ஜீவாவோடு, 'கூடல் நகரில்' மீண்டும் பரத்தோடு....என களைகட்டுகிறார் 'காதல்' சந்தியா.

*வல்லவனில் என்ன பாத்திரம்?*
சிம்புவின் தோழியாக, மாடர்ன் கேர்ளாக வருகிறேன். காதல் ஐஸ்வர்யாவிலிருந்து இந்தக் கேரக்டர் முழுக்க மாறுபட்டிருக்கும்.

*நயன்தாராவின் உதட்டை சிம்பு கடித்த விவகாரம்....?*
நோ கமெண்ட்ஸ்.


*இப்படி நடிக்கவேண்டும் என சிம்பு ஏதாவது கண்டிஷன் போட்டிருக்கிறாரா?*
இல்லவே இல்லை.

*கிளாமரா நடிப்பீர்களா?*
மாடர்னாக பண்ணுவேன். கிளாமராக பண்ணமாட்டேன்.

*10-வது பரீட்சை எழுதப்போகிறீர்களாமே?*
ஆமாம்! வரும் செப்டெம்பரில் பிரைவேட்டாக எழுதுகிறேன்.

*காதல் பரீட்சை எப்போது எழுதுவீர்கள்?*
இப்போதைக்கு அதுபத்தி எனக்கு எதுவும் தோணலை....சொல்லிவிட்டு வெட்கமாய் சிரிக்கிறார் சந்தியா.

அறிமுகமான 'குறும்பு' படம், அடுத்து திரைக்கு வந்த 'ட்ரீம்ஸ்', 'கற்க கசடற'...ஆகிய படங்களில் முகம் முழுக்க மேக்கப் பவுடரை அள்ளிப் பூசிக்கொண்டு நடித்த தியா, துளியளவு பவுடர்கூட போடாமல் நடிக்கும் படம் 'கோடம்பாக்கம்'. இதில் அவர் கிராமத்துப் பெண் கேரக்டரில் நடிப்பதால், ஒரு காட்சிக்குக்கூட மேக்கப் போடவில்லையாம்!



## அஜித்தின் காட்:.பாதர் பட விவகாரம் முடிவுக்கு வந்தது!

ஏகப்பட்ட எதிர்பார்ப்புடன் தொடங்கிய 'காட்:.பாதர்' படம் முக்கால்வாசி முடிந்த நிலையில் படப்பிடிப்பு நின்று போனதற்குத் தயாரிப்பாளர் தரப்பில் பணம் ரெடி பண்ணாததுதான் சிக்கலுக்குக் காரணம் என்று இயக்குநர் ரவிகுமார் ஒரு வார இதழ் பேட்டியில் கூட சொல்லியிருந்தார். உண்மை அதுதான்!

இந்தப் படம் தொடங்கும்போது ஜூன் 15ஆம் திகதிக்குள் மொத்தப் படத்தையும் முடித்துவிட வேண்டும்! அதன்பிறகு படப்பிடிப்பு நடந்தால் நாள் ஒன்றுக்கு தயாரிப்பாளர் தரப்பிலிருந்து ரூபாய் 3 இலட்சம் கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தம் போடப்பட்டிருந்தது.

பணப் பிரச்சினையால் உரிய நேரத்தில் படப்பிடிப்பு நடக்கவில்லை. கிட்டத்தட்ட நாற்பது நாளுக்கும் மேல் படப்பிடிப்பு இல்லாமல் வீட்டில் இருந்தார் அஜித். உடனடியாக படப்பிடிப்பை நடத்தி தீபாவளிக்கு ரிலீஸ் பண்ண வேண்டும் என்று தயாரிப்பாளருக்குப் பஞ்சாயத்தார் உத்தரவு போட்டிருக்கிறார்கள்.




'வேர்ல்ட் வித்விங்ஸ்' எனும் பட நிறுவனத்தின் தயாரிப்பில் வீ.ஜேப்.ஆர்.என். எனும் புதியவர் இயக்கும் படம் 'ப்ளவர்ஸ்'. வசீகரன் ஜோடியாக இந்தப் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த 'பாய்ஸ்' சிந்தூரி இப்பொழுது அந்தப் படத்தில் இருந்து கழற்றிவிடப்பட்டுள்ளார். அதற்குக் காரணம் மேற்படி படத்தில் ஒரு பாடலை லண்டனில் எடுக்கத் திட்டமிட்டு அட்வான்ஸ் தந்தபொழுது பாஸ்போர்ட் இருக்கா எனக் கேட்டுள்ளனர். அப்பொழுது பாஸ்போர்ட் இருக்கு என்ற சிந்தூரி, அதன்பிறகு நான் இன்னும் பாஸ்போர்ட்டே எடுக்கவில்லை என்று இழுத்தடித்து டபாய்த்திருக்கிறார். அதன் விளைவே இந்த விலக்கல்.

# சினிவிசிட்

'சிட்டிஸன்' படத்திற்குப் பின் ஒரு வருடத்திற்கு மேல் இடைவெளிவிட்டு ஷரவணசுப்பையா இயக்கும் படம் 'ஏபிசிடி'. ஷாம், சினேகா, நந்தனா நடிக்கும் இப்படத்தின் ஆடியோ ரிலீஸ் சமீபத்தில் சென்னையில் நடந்தது. இதில் கலந்துகொண்ட இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார், எனக்குத் தெரிந்த கமல், எஸ்.ஜே.சூர்யா போன்ற சதா சர்வகாலமும் சினிமாவையே நினைத்து பேசிக்கொண்டிருப்பவர் ஷரவணசுப்பையா என்றார். அதை ஆமோதிக்கும்வகையில் 'அ....ஆ' நாயகி நிலாவுடன் வந்திருந்த எஸ்.ஜே.சூர்யாவும் மேடையில் நின்றிருந்த ஷரவணசுப்பையாவும் இமான் இசையில் மேடையில் பாடி அறிமுகப்படுத்தப்பட்ட ஒவ்வொரு பாடலுக்கும் நின்றபடியே ஆடி இரசித்துக் கொண்டிருந்தது, ரவிக்குமாரின் கூற்றை உண்மையாக்கியது.



'பாரிவள்ளல்' ரஜினிகாந்த் இரசிகர் மன்றம் என்ற பெயரில் கடந்த பல வருடங்களாக ரஜினி இரசிகர் மன்றம் நடத்திவரும் எல்.பிரபாகரன், ஆர்.பாலுவின் அசோஸியேட் கிருஷ்ணமூர்த்தி இயக்கத்தில் 'இப்படிக்குக் காதல்' எனும் படத்தையும் வி.சி.குகநாதனிடம் இயக்குநர் பயிற்சி பெற்ற ஆகாஷ்தான் இயக்கத்தில் 'பேரழகி' எனும் படத்தையும் ஒருசேர தயாரிக்கிறார். அலுவலக பூஜையெல்லாம் முடிந்து நட்சத்திரவேட்டை நடந்துவரும் வேளையிலும் தனது இரசிகர்மன்ற பணிகளை நிறுத்தாத பிரபாகரன், சந்திரமுகி 50 நாட்களை கடந்து வெற்றிகரமாக ஓடுவதை வாழ்த்தி தனது பட நிறுவனமான நியூபிரேம்ஸ் சார்பில் வாழ்த்து அட்டைகளை கோடம்பாக்கம் முழுவதும் விநியோகித்து வருகிறார். என்றும் பழசை மறக்காத ரஜினிக்கு பழசை மறக்காத இரசிகர் ஒரு தயாரிப்பாளர் வடிவில்.




**ஒவ்வொரு படமும் நீங்கள் கதை கேட்டுத் தானே ஓ.கே. செய்கிறீர்கள்? அப்படியிருந்தும் சில தோல்விகள் வருகிறதே?**

கதை சொல்லும்போது ஒருமாதிரி சொல்கிறார்கள். ஆனால் விஷுவலில் வேறு மாதிரி பண்ணிவிடுகிறார்கள். அதனால்தான் இப்போதெல்லாம் ஒருமுறைக்கு இருமுறை கதையைக் கேட்கிறேன். இனி எனக்கு நெருக்கமான நண்பர்களிடமும் கதையைச் சொல்லி கருத்துக் கேட்டு தேர்வுசெய்யவிருக்கிறேன்.

**முதல் காதல் தோல்வி அனுபவம் நிஜத்திலும் உண்டா?**

உண்மைதான். என் முதல் காதல் தோல்வியில்தான் முடிந்தது. நான் இரண்டாவதாக காதலித்த பெண் எனக்கு மனைவியாகிவிட்டாள். முதல் காதல் என்பது வெறும் இனக்கவர்ச்சிதான் என்பதை ஒரு பக்குவத்துக்கு வந்தபிறகு புரிந்துகொள்ள முடிந்தது. இந்த வயசுல நமக்கு எதற்கு காதல்? வாழ்க்கையில ஜெயிக்கப் பாரு என எனக்கு அட்வைஸ் சொல்லி என் முதல் காதலை மறுத்த என் முதல் காதலி இப்போதும் கூட எனக்கு மிகச்சிறந்த தோழியாக இருக்கிறாள். அந்தவகையில் நான் கொடுத்து வைத்தவன்.

**உங்கள் முதல் காதலை மனைவியிடம் சொன்னீர்களா?**

அந்த அனுபவங்களை என் மனைவியிடம் நான் மறைக்கவில்லை.

**இன்னும் பெரிய அளவில் சக்ஸஸ் பண்ணாததற்கு காரணம் உங்களை இரசிகர்கள் அன்னியமாகப் மீசையில்லாம பார்ப்பதுதான் காரணமா?**

ஆரம்பத்தில் அந்த பிரச்சினை இருந்தது. நான் மதுரைக்காரன் என்பதை பத்திரிகைகளின் பேட்டி வாயிலாக இரசிகர்கள் தெரிந்துகொண்ட பிறகு, என்னை அவர்கள் அன்னியமாக பார்க்கவில்லை. ஒவ்வொரு நடிகனுக்கும் நல்ல பிரேக் கிடைக்க ஒரு நேரம் வரும். அந்த நேரம் எனக்கும் வந்தே தீரும். எனக்கு என்மேல் ரொம்பவே நம்பிக்கை இருக்கிறது. நடந்துபோனதல்ல வாழ்க்கை. நடக்கப்போவதுதான் வாழ்க்கை என நினைக்கிறவன் நான்.

**இளம் ஹீரோக்கள் நிறைய வந்துவிட்டார்களே?**

ஒவ்வொருவருமே வித்தியாசமான திறமைசாலிகளாக இருக்கிறார்கள். அவர்களை நான் பொறாமையோடு பார்க்கவில்லை. போட்டியாளர்களாக பார்க்கிறேன் என்கிறார் ஷாம்.




'நீ நான் நிலவு' இப்படி ஒரு படம் புதுமுக இயக்குநர் சிவகுமாரின் இயக்கத்திலும் தயாரிப்பிலும் வளர்ந்து வருகிறது. இந்தப் படத்தில் கதாநாயகனாக ரவி அறிமுகமாகிறார். நாயகியாக (மிஸ் குஜாரத்) புதுமுகம் மேக்னா அறிமுகமாகிறார். நகைச்சுவைக்காக லொடுக்குப்பாண்டி புகழ் கருணாஸ் ஆகியோர் நடிக்கின்றனர்.

கதை, திரைக்கதை, எழுதி இயக்குகிறார் சிவகுமார். இவர் தென்னவன் படத்தில் அசோசியேட்டாக இருந்தவர். ஒளிப்பதிவு - ராஜரத்தினம். இவர் டைரக்டர் செல்வமணியின் தம்பி. தினாவின் இசையில் ஐந்து பாடல்கள் இடம்பெறுகின்றன. சண்டைப் பயிற்சியை சூப்பர் சுப்பராயன் கவனிக்கிறார்.

இதோ, அதோ என 3 ஆண்டுகளாக இழுத்துக் கொண்டிருந்த 'உள்ளம் கேட்குமே' படம் வெளியாகி வெற்றிகரமா ஓடிக்கொண்டிருப்பதில் சந்தோஷத்தில் இருக்கிறார் ஷாம். "எங்க அம்மா தியேட்டருக்குப்போய் டிக்கெட் கிடைக்கலைன்னா ரொம்ப டென்ஷன் ஆயிடுவாங்க. 'உள்ளம் கேட்குமே' படம் பார்க்கப்போய் டிக்கெட் கிடைக்காம சந்தோஷப்பட்டாங்க. உன்னோட படம் ஹவுஸ்:.புல்லா ஓடுதுடா என அவங்க பாராட்டிய போது எனக்கும் சந்தோஷமாக இருந்தது" என உற்சாகமாக பேச ஆரம்பித்தார் ஷாம்.

என்னை அறிமுகப்படுத்திய ஜீவா, எனக்கு இந்தப் படம் மூலம் மறு அறிமுகம் தந்திருக்கிறார். 12-பி படம் வந்த பிறகு அடுத்து நாம என்ன மாதிரி படங்கள் பண்றதுன்னு கொஞ்சம் குழப்பமாவே இருந்தது. ஆனா இப்போ அந்தப் குழப்பங்கள் கிடையாது. எப்படிப்பட்ட கேரக்டர்களைப் பண்ணனும்னு ச்சூஸ் பண்ணி நடிக்க ஆரம்பிச்சிட்டேன். இந்த அனுபவம் எனக்கு தியேட்டரில்தான் கிடைத்தது. தியேட்டர்களுக்குச் சென்று எனது படங்களை ஆடியன்ஸோடு உட்கார்ந்து பார்த்தேன். அப்போது கதைதான் ஹீரோ என்பதை உணர்ந்துகொண்டேன். 'ஏபிசிடி'யில் இதுவரை பண்ணாத ஒரு :.பெர்பார்மென்ஸ் ஸ்கோப் உள்ள கேரக்டரை பண்ணியிருக்கிறேன். இனி எனது படங்கள் சிறந்த கதையம்சம் உள்ள படங்களாக வரும்.

## மாதவன் ஜோடியாக நம்ரதா ஷிரோத்கர் நடிக்கும் "கேட்பவரெல்லாம் பாடலாம்"

முதல் படமாக தீஸ்பரீ மன்சில் ஆரம்பித்து ஷோலே தம்மேஷேதம், யாதோங்கி பாரத், சாகர், கடைசி படமான 1942 லவ் ஸ்டோரி வரை நூற்றுக்கணக்கான படங்களுக்கு இசை அமைத்து இந்திப் படவுலகையும், இந்தியாவையும் கலக்கிய இசை அமைப்பாளர் ஆர்.டி.பர்மன்.

மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற இவரது ஹிட் பாடல்களில் 12 பாடல்களை தேர்ந்தெடுத்து ரீ மிக்ஸ் செய்து இப்பொழுது புதிய படமொன்றில் கதைக்கு ஏற்ப பயன்படுத்தியுள்ளார். பாடல் இப்பொழுது 'கேட்டவரெல்லாம் பாடலாம்' என்ற கியூ மூவிஸ் தயாரிக்கும் படத்தில் இடம்பெறச் செய்துள்ளார்.

முழுக்க முழுக்க பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து தயாராகும் இப்படத்தில் மாதவன் நாயகனாக நடிக்கிறார். கல்லூரி நாயகனாக நடிக்கும் இவரது ஜோடியாக நம்ரதா ஷிரோத்கர் நடிக்கிறார். இவர் மிஸ் இந்தியா பட்டம் பெற்றவர். மேலும் ரியாசென், சோனாலி குல்கர்னி, ரிஷிபட் நாயகிகளும் நடிக்கிறார்கள்.

'மறுவிசாரணை', 'சாதிக்கொரு நீதி' போன்ற படங்களில் நடித்த சிராஜ் கதாநாயகனாக நடிக்கும் படம் 'ஜெயந்த்', இந்தப் படத்தில் கதாநாயகி ப்ரீத்தி. இருவரும் சேர்ந்து கிளுகிளுப்பாக ஒரு ஆட்டம் போட்டிருக்கிறார்கள். இதுவரை சென்னையை தமிழ்சினிமா பதிவு பண்ணியிருந்தாலும் முழுக்க முழுக்க தமிழ் இரசிகர்களுக்கு சென்னையை அறிமுகப்படுத்தப்போகிறது இந்தப் படம்.

ராஜ்கென்னடி பட நிறுவனம் மூலம் 5ஆவது படமாக 'நூற்றாண்டு வாழ்க' படத்தை மன்சூரலிகான் தயாரிக்கிறார். 'நூறாண்டு வாழ்க' படத்தில் கதாநாயகனாக நடித்து கதை - திரைக்கதை - வசனம் எழுதி முதன் முறை இப்படத்தை இயக்கி டைரக்ஷனில் குதிக்கிறார். படம் பற்றி மன்சூரிடம் கேட்டோம்.

ஆணுக்குப் பெண் சமம் என்பது சரியல்ல. ஆணைவிட பெண் மேலானவள் என்பதே சரி. ஆண்களை பூமியில் ஜனிப்பவள் பெண்தான். ஆனால் பெண்களில் பத்துபேருக்கு எட்டு பெண்களின் வாழ்க்கை சரியாக அமைவதில்லை. கோலம் - பூக்கோலம் - மாக்கோலம் என பெண்களின் கைவண்ணத்தில் உருவாகிறது. ஆனால் அவளின் வாழ்க்கை அலங்கோலமாக மாறுவது ஏன்? எப்படி? இதை அலசுவதுதான் 'நூறாண்டு வாழ்க கதை' என்றார்.

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வளரும் இதில் அலெக்ஸ், செந்தில், பாண்டு, காரைக்குடி விஷ்வா, லைலா அலிகான், மதிஷா, சாதனா பிரபல நாயகி சார்மிளா, மன்சூரின் குழந்தை அலிகான், துக்ளக் மற்றும் பலர் நடிக்க...இதற்கு 'காதல்' ஜோஸ்வா இசையமைக்கிறார்.




## இனி மேல்...!!

நாளொரு மேனி
பொழுதொரு வண்ணம்
நம் நாட்டில் வளரும்
கொலைக் கலாசாரம்!

வாரந்தோறுமே
வன்முறை பெருகிட
ஆறாய் ஓடுமே
அப்பாவிகள் இரத்தமே!

அடடா! எத்தனை
பெருமைகள் நமக்கு!
அகிலத்தாரின் பார்வை
நம்மேலே இருக்கு!!

சிக்காக்கோவை
விஞ்சிய
ஸ்ரீலங்காவினிலே.....
"மக்கள் உயிர்களோ
மலிந்தே போயிற்று!!"

வெட்கித்தலை குனிய
வேண்டும் நாமே -
இதை
வெளியில் சொன்னால்
மானக்கேடே!!

அழகிய நாட்டின்
அமைதியைக்
குலைத்தே
ஆனந்தமடையும்
அரக்கத்தனமேன்?!

தேச வளங்கள்
ஒருபுறம் அழிய....
மனித வளமோ
வற்றிப் போகும்!!

நாளைய சந்ததி -
இனி
எழுதுகோலேந்தா!
"நரபலி கேட்டே
ஆயுதம் தரிக்கும்!!"

கைத்தொழில் அருகி -
பிறரைக்
கொல்வதே
தொழிலாய்
கொள்கையும் வகுத்து
அதன் வழி நடப்பர்!

*- யாழமீர் மர்சூன்*

## தூது போகும் தோழன்!

செல்லிடப்
பேசிகளின்
அதிவிரைவுச்
செய்திப்
பரிமாற்
றங்களில்
சிக்கிக்
கொண்டது
வாழ்க்கை!

உன்
கைகோர்த்து
போய்வர
வேண்டிய
உல்லாசப்
பொழுதுகளை
தன்னைக்
கையிலி
ருத்தும்படி
வாங்கிக்
கொண்டது
செல்லிடப்
பேசி!

நீ இல்லா
வாழ்வு
நிலவில்லா வான்போல
செல்லில்லா வாழ்வும்
செல்லாத வாழ்வாய்....

அயர்ந்து தூங்கும்போது
'உச்சா' போக
அடம்பிடிக்கும் நம்
செல்லக் குழந்தையை
போல்
சில இரவுகளில்
சிணுங்கும்
தொல்லைப் பேசியாய்
தூக்கம் கெடுக்கிறது!

இயந்திரமயமான
வாழ்க்கையில்
இந்த ஜடப்பொருளும்
உயர் திணையாகி
உறவாடினாலும்

உனக்கான எனதும்
எனக்கான உனதும்
முத்தங்களை எப்போதும்
தனக்காக்கித்தான்
கொள்(ல்)கிறது!

*–மெய்யன் நட்ராஜ்,*
*டோஹா – கட்டார்.*

## ஞாபக முட்டையுடைத்த வரலாறு

முன்னையதைவிடவும்
வேரற்றுப் போயின
நிலாச்சிரிப்பில்
வியாக்கியானம்
செய்யும்
என் ஆட்காட்டி
நட்புக்கு
விரத்தி மேவிப்
போனதாய்
பெருமையாய்ச்
சொல்லி விறாண்டும்
கறுப்பானதொரு
காலப் பூனை.

ஆர்ப்பரிக்கும்
சாத்தியமற்ற
போராடிப் புலம்பல்கள்
வயதுக்கு வந்ததால்
ஆச்சர்யப் பற்றுற்ற
தாவணிக் கனவுகள்.

எனது வரலாறு
இனி
ஞாபக
முட்டையுடைத்து
பூட்டப்பட்ட
சிவப்புப் பக்கங்களை
பிய்த்துப் பிய்த்து
ருசி பார்க்க
தேற்றைகள் யாவும்
அசிங்கப்பட்டுப்
போனது.

எனதான்மாவின்
ஆலயத்துள்
தனிமையாயிருக்கும்
புல்லாங்குழல்
புன்னகைக்கு
துப்பாக்கியொன்று.

விதவை முகவரி
கொடுத்து
புரலும் நிமிஷங்களை
இருளில் புதையுண்டு.

சேற்றுச் சிந்தனை
அப்பிய
என் ஆட்காட்டி நட்பே
கையூண்டி எழும்
வெள்ளைப் பொழுதை
காலால்
எட்டி உதைக்காதே
மண்தின்னும் காலம்
மிக
தூரமில்லையென்பதால்.

*–தமிழடியான்.*

## வேதனையற்ற முகங்களை...!

வேதனையற்ற
முகங்களைத்
தேடுகிறேன்....
காணவில்லை
கவலையாக இருக்கிறது.

ஆர் முகத்தைப்
பார்த்தாலும்
அழுகை நிறைந்ததாக....
அவலங்கள் கொண்டதாக....

ஓ....
என் வாழ்க்கையில்
மட்டுமல்ல
எல்லோர் வாழ்க்கையிலும்
விதியும் போரும்
விளையாடித்தான்
இருக்கின்றன.....

சீதனக் கொடுமையினால்
சீரழியும் ஏழைக்
கன்னியரும்.....
'சீ...'வேண்டாம்
வாழ்க்கையென்று
வாழ்வின் விளிம்பில்
நிற்கும் காளையரும்.....

பிள்ளைகளை இழந்த
பெற்றோரும்
பெற்றோரை இழந்த
பிள்ளைகளும்.....
கணவனை இழந்த
மனைவியரும்
மனைவியரை இழந்த
கணவர்களும்.....


வயிறு கழுவ
வழியேதுமில்லாமல்
வாடுகின்ற ஏழைகளும்.....
வேதனையின் உருவமாகவே
வெந்துழலும் தோட்டத்
தொழிலாள மக்களும்......

பட்டம் பெற்று பலவருடங்கள்
கடந்த பின்னும்
பதவியொன்று கிடைக்காமல்
பட்டமரமாய் ஏங்கிநிற்கும் நம்
பட்டதாரிகளும்.....
'எட்டாக் கனிதானா..?'
சமாதானம் என்று கேட்டு
கொட்டாவி விட்டேங்கும்
நம்மினிய மக்களும்.....

நம் நாட்டில்
வேதனைகள் நிறைந்த
முகங்களைத் தவிர
வேறென்ன தான்
மலிந்து கிடக்கின்றன....?

நாளை கருவாகி உருவாகும்
நம் பிஞ்சுகளின்
முகங்களிலாவது
புன்னகைப் பூக்களைக் காண
முடியாதா....?
புதுத் தேசமாய் ஈழம்
உருவாகாதா...?

*–கன்னிமுத்து வெல்லபதியான்,*
*எருவில்.*



## வெளிநாட்டு மச்சானுக்கு

மச்சான் உனக்காக
மச்சி நான் காத்திருந்து!
மடலொன்றும் இதுவரை
காணல்ல....

ஊரிலிருக்கும்போது
உசுருபோய் விடும் - என்பாய்!
எப்படி முடிந்தது
இப்பொழுது அப்படியே லிருக்க.....

என்கன்னிப் பருவம்
கண்ணீரில் கரையுது - மச்சான்!
என் கவலையெல்லாம் -
நாதியற்று
நதியாகி கடலாகுது மச்சான்!

வரங்கள் வந்தும்
வானமுன்னு சொன்னேன்!
வாழ்க்கையே.... நீதான் - என்று
வைராக்கியமா நின்றேன்!

மன்னிச்சிடுங்க - மச்சான்
வருடம் பத்தாச்சு - எனக்கு
வயசும் முப்பத்திரெண்டாச்சு
இனியும் வாழ்க்கப் படலனா
என்
பருவம் என்னாவது -
அதற்காய் மன்னிச்சிடுங்க.....
அன்பு - மச்சான்!

*–திருமதி றிஸ்வா தாஹிரா,*
*கிண்ணியா.*

## ஹைக்கூ.....

**வறுமை**
பிச்சைக்காரனின்
கிழிந்த சட்டையில்
அழகிய விளம்பரம்
வறுமையை ஒழிப்போம்...!

**மென்மை**
'பூக்களைப் பறிக்காதீர்'
வாசகம் ஏந்திய படி....
மகரந்த மணியில்...
வண்டுகள்...!

**மனிதம்**
'உயிர்களைக் கொல்லாதீர்'
உயிருட்டும் விளம்பரம்
உயிரைப் பறிக்கும்....
துப்பாக்கி ரவையில்...!

**ஏக்கம்**
செருப்பின்......
விளம்பரப் பலகையை
உற்றுப் பார்த்த வண்ணம்
ஒருவன்!....அதிசயமாய்
குனிந்து பார்த்தேன்
ஊன்று கோலில்
அவன்....!

*–மு.கமலன்,*
*வாழைச்சேனை.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

"இங்கு கவிதை, கவிதையாக மட்டும் இயங்கவில்லை; தான் சார்ந்தவர்களின் முகமாகவும் இருக்கிறது. வார்த்தை, வார்த்தையாக மட்டும் இல்லை; தான் சார்ந்தவர்களின் ஆன்மாவாகவும் இருக்கிறது. கவித்துவம் மட்டுமே இன்று கவிதைக்கான அழகியலாக இருக்க முடியாது. மொழி முகமூடியாக இருந்த காலம் கடந்துவிட்டது. யாரும் அழகிய வார்த்தைகள் என்று நம்பி அதற்குள் ஒளிந்துகொள்ள இயலாது. மொழி தன் அர்த்தங்களின் போதாமையின் சவக்குழிக்குள்ளிருந்து மீண்டு வரவேண்டி உள்ளது. கவிதைக்குள் செயல்படும் அரசியலும், அழகியலும் எவை சார்ந்தவை, அவை எந்த அறம் சார்ந்து இயங்குகின்றன என்ற கேள்விகளையும் உள்ளடக்கியே வாசிக்க முடியும்...." என்று குறிப்பிடும் கவிஞர் மாலதிமைத்ரி, "பெண் உடல் மீதான மோகத்தை அதிகமாக வளர்த்தெடுக்கும் இச்சமூகம், பெண்ணின் இருப்பை – சுய தனி இருப்பை வெறுக்கும் மனோநிலையை அடித்தளமாய்க் கொண்டும் இயங்கி வருகிறது" என்கிறார்.

இதனால், தன் இருப்பு சார்ந்த கேள்விகளுடனும், முரண்களுடனும் இயங்கும் பெண், தன்னை முற்றிலுமாக இச் சமூகத்திலிருந்து துண்டித்துக்கொள்ள முடியாமல், தன்னை அமைப்பின் குரலாகவும் அதேசமயம் அதற்கு எதிரான குரலாகவும் வைத்துக்கொள்ள நேர்கிறது. அத்தகைய ஒரு கவிக்குரல் அ.வெண்ணிலாவுடையது. கவிஞர் அ.வெண்ணிலாவின் மூன்று கவிதைகள்.

### பௌர்ணமி நிலவு

இன்று பௌர்ணமி
என்றேன்.
என்ன செய்யலாம்?
என்பது போல
பார்த்தாய்.

எவ்வளவோ
இருக்குதான்
பௌர்ணமி
இரவுக்கென்று.

ஒரு மலையுச்சியில்
நின்றபடி
நிலா பார்க்க
முத்தமிட்டுக்
கொள்ளலாம்.
வெட்டவெளி
பாறையில்
இரவு முழுதும்
படுத்துக் கிடக்கலாம்.


ஒவ்வொரு
பௌர்ணமியையும்
பார்த்து ரசிக்கும்
மரங்களோடு
பேசிக்கொண்டிருக்கலாம்.

காலடிகள் விழாத
ஒற்றையடிப் பாதையில்
நிலா வெளிச்சம்
புதைய நடக்கலாம்.

துள்ளுவது மீன்களா
நிலாத் துண்டுகளா -
எனக்
குளக்கரையில்
அமர்ந்து
இரவு முழுவதும்
வேடிக்கை பார்க்கலாம்.

எவ்வளவோ
இருக்குதான்
பௌர்ணமி
இரவுக்கென்று.

வா! குறைந்த பட்சம்
குழந்தைகளோடு
மொட்டை
மாடியிலாவது
அமர்ந்திருப்போம்.



### இரவின் இரகசியம்!

இரவின் அடர்ந்த
கருமையை
துளைத்துச் செல்லும்
ஒற்றை மின்மினி
தன் இரகசியங்களை
பூதம் போல் காக்க
இரவு -
வெறி கொண்டலைந்தாலும்
விண்ணிலிருந்து விழும்
எரி நட்சத்திரமோ.
அமானுஷ்யத்தை
மோப்பம் பிடித்தலையும்
நாய்களின் கண்களோ
ஊடுருவிக்
கொண்டேயிருக்கின்றன.

விரிந்த கைகளின்
ரேகைகளைக் கூட
பார்க்க அனுமதியாத
இரவின்மேல் தீரா
வசீகர முண்டாகிறதெனக்கு.
மங்கும் குரலொலியோடு
மென்மை பிசகாமல்
ஆனால்,
உக்கிரத்தோடு அலையும்
பூனையைப் போல்
இரவின் ஒரு
நிமிடத்தையாவது
அசைத்துப் பார்த்துவிட
வேண்டும்
தூக்கம் விழிக்கும்
இரவொன்றில்.

### நிர்வாணம்


அம்மாவின்
எதிரில்
ஆடை மாற்றிக்
கொள்ளக்கூட
கூசியிருக்கிறேன்.

உன்னிடம் கூட
மறுதலித்
திருக்கிறேன்
பலமுறை.
நீ கூட
சலித்துக்
கொண்டிருக்கிறாய்


பேற்றின்
வலியோடு
அலறும் குரலில்
இணைந்தே
ஒலிக்கிறது
என்
நிர்வாணத்திற்கான
அழுகையும்.

வழியில்
மருத்துவச்சி
எதிர்ப்படும்
எல்லா
கணங்களிலும்
நிர்மூலமாக்
கப்படுகிறேன்
ஆடைகளின்
உலகிலிருந்து.


## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி



பெயர் : எம்.எல்.எம். நஸீம்.
வயது : 23
முகவரி : காகாமுனை – 07, கிண்ணியா.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரி.வி., கவிதை.



பெயர் : த.சுதாகரன்.
வயது : 23
முகவரி : அரஸ்கோ, அரியாலை புங்கங்குள சந்தி, யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு : வழமையானவை.



பெயர் : எம். நவ்சாத்.
வயது : 22
முகவரி : P.O.Box - 22750, Doha - Qatar.
பொழுதுபோக்கு : பத்திரிகை, வானொலி, டெலிபோன்.




பெயர் : கா.விமலேஸ்வரன்.
வயது : 19
முகவரி : 05, 2ஆம் யுனிட், மெனிக் பாம், ஆண்டியாபுளியங்குளம், வவுனியா.
பொழுதுபோக்கு : பத்திரிகை, வானொலி, சித்திரம், கதைப் புத்தகம்.





# மனித எலும்பின் பலம் அறிய விரல் நகம் சோதித்தால் போதும்!

மனித உடலில் உள்ள எலும்பிலும் மனித விரல் நகத்திலும் காணப்படும் ஒரு




பொதுவான இணைப்புப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை



இரண்டிலும் இது உள்ளது. எனவே எலும்பின் பலத்தை அறிய விரல் நகத்தைச் சோதித்தால் அதில் முக்கிய விளக்கம் கிடைக்கும்.

ஆஸ்ட்டியோபோரோசிஸ் என்பது ஒரு வகை எலும்பு நோய். எலும்பு பலவீனம் அடைந்து உடையும் அபாயம் இந்த நோயால் ஏற்படும். அதை எளிதில் குணப்படுத்த முடியாது. இந்த நோய் பெண்களில் 3 பேருக்கு ஒருவரிடமும் ஆண்களில் 12 பேருக்கு ஒருவரிடமும் தோன்ற வாய்ப்பு உண்டு. இங்கிலாந்தில் மட்டுமே ஆண்டுக்கு 2 லட்சம் பேரிடம் இந்த நோய் பாதிப்பு ஏற்படுகிறது.



எலும்பில் புரதச்சத்து அணுக்களை ஒன்றோடொன்று இணைக்க டைசல்பைட் என்ற பொருள் தேவை. இந்தச் சத்துக் குறைந்தால் நகம் நிறம் மாறுகிறது. இவ்வாறு மாறும் நபரின் எலும்பைச் சோதித்தால் இந்தப் பொருள் எலும்பிலும் குறைந்து போயிருப்பது தெரியவரும். எனவே நகத்தைச் சோதிக்க இப்போது புதிய லேசர் கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ஒருவகை ஸ்கேன் கருவியாகும்.

## ஒற்றைத் தலைவலி இருதய நோயின் அறிகுறி

சாதாரண தலைவலிகளைக் காட்டிலும் ஒற்றைத் தலைவலி கொடுமையானது. இது வந்துவிட்டால் பாதிக்கப்பட்டவர்கள் பாவம் திண்டாடிப்



போவார்கள். அவர்களால் எதுவும் செய்ய முடியாது. ஒற்றைத் தலைவலியால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பக்கவாத ஆபத்து இருப்பதாக முந்தைய ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அமெரிக்காவின் மேரிலாண்டைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் ஒற்றைத் தலைவலிக்கும் இருதய நோய்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதாகக் கூறியுள்ளனர்.

ஒற்றைத் தலைவலியால் பாதிக்கப்படும் நபர்களில்



பெரும்பாலானோர் புகைப் பிடிப்பவர்களாகவும், கட்டுப்பாட்டை மீறி மதுபானம் அருந்துபவர்களாகவும் இருக்கிறார்கள். ஒருவேளை இந்த இரண்டு பழக்கங்களுமே இல்லாதவர்களாக இருந்தாலும், பாதிப்பு அவுரா (Aura) என்ற இடத்தில் இருக்குமானால் அவர்களுக்கு இருதய நோய்கள் மற்றும் பக்கவாத ஆபத்து முன்கூட்டியே தொடங்க வாய்ப்பு உள்ளது. அடிக்கடி ஒற்றைத் தலைவலி ஏற்படும் நபர்கள் அல்லது 'அவுரா' என்ற குறிப்பிட்ட பகுதியில் பாதிப்பு ஏற்படும் நபர்களுக்கு இருதய நோய்களுக்கே உரித்தான இரத்த அழுத்த பிரச்சினை, கொலஸ்ட்ரோல் கோளாறு தலைதூக்குமாம்.

ஆகையால் பிரச்சினைக்குரிய ஒற்றைத் தலைவலிகள் மற்றும் ஆபத்து இல்லா தலைவலிகள் பற்றி மேற்கொண்டு விரிவான ஆராய்ச்சி நடத்த வேண்டும் என்றும், அதன்பிறகே இருதய நோய் ஆபத்து குறித்து ஒரு முடிவுக்கு வர முடியும் என்றும் இந்த நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஓவரா டி.வி. பார்த்தால், குழந்தைகள் மக்காகி விடும்

**டி.வி.** பார்த்தால் குழந்தைகளின் படிப்பு பாதிக்கும் என்று பரவலாகவே கருத்து உள்ளது. எனினும் டி.வி.க்கும், குழந்தையின் படிப்புக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என்றும் சொல்லப்படுகிறது. இந்நிலையில் அமெரிக்காவில் இது சம்பந்தமாக 3 விதமான முறையில் நடந்த ஆய்வில் பெற்றோருக்கு கிலி உண்டாக்கும் தகவல்கள் கிடைத்து உள்ளன.

***அதன் விவரம் வருமாறு :***

டி.வி. நிகழ்ச்சிகளைக் கூடுதலான நேரம் பார்க்கும் குழந்தைகள் மக்காகி விடும் என்பது உண்மைதான். அதுபோல



படுக்கையறையில் டி.வி. இருந்தாலும் குழந்தைகளின் படிப்பு பாதிக்கப்படும்.

***பாதிப்பு என்ன?***

படுக்கையறையில் டி.வி. இருந்தால் கணிதம், மொழிப் பாடம், வாசிப்பு சோதனை ஆகியவற்றில் குழந்தைகள் குறைந்த மார்க் எடுப்பார்கள்.

5 முதல் 11 வயதுக்குள் அதிகமாக டி.வி. பார்க்கும் குழந்தைகள் கல்லூரிப் படிப்பில் சாதிக்கத் தவறி விடுவார்கள்.




3 வயதுக்கு முன் டி.வி. பார்க்கும் ஒவ்வொரு மணி நேரத்துக்கும், குறிப்பிட்ட குழந்தைகள் 6இல் இருந்து 7 வயது வரை படிப்பில் மட்டமாக இருப்பார்கள்.

இது போக, கூடுதலான நேரம் டி.வி. பார்ப்பதால் குழந்தைகள் உடல் பருமனாகி விடும். மேலும் டி.வி. நிகழ்ச்சிகளில் வன்முறை காட்சிகள் இடம் பெறும் பட்சத்தில் அந்தக் குழந்தைக்கு அந்தக் குணம் நாளடைவில் தொற்றி விடும்.

ஆக, டி.வி. நிகழ்ச்சிகளை அளவோடு பார்த்தால் ஒரு பிரச்சினையும் இருக்காது. மணிக்கணக்கில் உட்கார்ந்தால் அறிவுத் திறன் பாதிக்கப்படுவதுடன், பல உடல்நலக் கோளாறுகளும் ஏற்படும் என்று இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

## நோய்களை ஊக்குவிக்கும் சுற்றுச் சூழல் சீர்கேடு

நகர்ப்புற மக்கள் தொகை அதிகரிப்பு, காடுகளை அழித்தல், மோசமான வேஸ்ட் மெனேஜ்மெண்ட் கொள்கைகள், மாசுபாடு, கட்டிடங்கள், ஆறுகளின் குறுக்கே இஷ்டத்துக்கு அணைக்கட்டுகளை கட்டுவது,




வெப்பநிலை உயர்வு ஆகியவற்றால் சுற்றுப்புறச் சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்கள், தொற்றுநோய் பரவலுக்கு வித்திடுவதாக ஐ.நா.சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

தொற்று நோய்கள் காரணமாக உலகம் முழுவதும் ஆண்டுக்கு 15 மில்லியன் பேர் உயிரிழப்பதாகக் கூறியுள்ள இந்நிறுவனம், இதில் 3இல் 2 பங்கு சாவுகள் தென்கிழக்கு ஆசியா, மற்றும் ஆபிரிக்காவில் நடப்பதாகத் தெரிவித்துள்ளது. உயிரிழப்பவர்களில்



பெரும்பாலானவர்கள் குழந்தைகள். 1970களில் டெங்கு காய்ச்சல் வெறும் 9 நாடுகளில் மட்டுமே காணப்பட்டது. ஆனால் இந்தக் காய்ச்சல் இன்று 100க்கும் மேற்பட்ட நாடுகளில் காணப்படுகிறது. இதற்கு நகர்ப்புற மக்கள் தொகையில் நிகழும் மாற்றங்கள் தான் காரணம் என்று இந்த அமைப்பு கூறியுள்ளது.

நகர்ப்புறங்களில் குடிநீர் மற்றும் கழிவு நீர் வசதியின்மை, கொசுக்கள் பெருக்கம், கொறித்துத் தின்னுகிற பிராணிகள் ஆகியவற்றால் மலேரியா, டெங்கு, டி.பி. ஹான்டா வைரஸ் போன்ற ஆபத்தான தொற்று நோய்கள் பரவுகின்றன. இதுபோல சுரங்கங்கள் அமைப்பது, அணைகள் கட்டுவது, விவசாயத்துக்காக நீர்ப்பாசனத்தை அதிகரித்துக் கொண்டே போவது ஆகியவற்றின் மூலம் கொசுக்கள் வசதியாக வாழ்வதற்கு நல்ல வாய்ப்பு அமைகிறது.



மலேரியா உள்ளிட்ட தொற்றுநோய்கள் பரவுவதற்கு அடுத்த முக்கியமான காரணம் காடுகள் அழிக்கப்படுவதுதான். இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவுகளில் எண்ணெய் பனைகள் பயிரிடுவதற்காகக் கணிசமான அளவுக்குக் காடுகள் அழிக்கப்பட்டு விளை நிலங்களாக்கப்பட்டு விட்டன. இதுபோல பல்வேறு நாடுகளிலும் காடுகள் தொடர்ந்து மனிதர்களால் அழிக்கப்பட்டு வருவதால் சீதோஷ்ண நிலை சீர்கெட்டு நோய்கள் பரவுவதாக இந்நிறுவனம் கூறியுள்ளது.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது —ஷோபா—*

### மாவிலைத் துவையல்

***தேவையானவை :-***

மாந்தளிர் - 10, 12.
மிளகாய் வற்றல் - 4,5.
புளி - சிறிது.
உப்பு - தேவைக்கேற்ப.
கடுகு உளுத்தம் பருப்பு சேர்த்தது - 1 1/2 தேக்கரண்டி.

***செய்முறை :-***

முதலில் தளிரைக் கழுவி சிறிதாக நறுக்கிக் கொள்ளவும். பிறகு வாணலியில் எண்ணெய் ஊற்றி, தாளித்து, பின் உளுத்தம் பருப்பைப் போட்டு, பொரித்து எடுத்துக் கொள்ளவும். பிறகு அதில் மிளகாய் வற்றலை வறுத்து பிறகு, மாவிலையைப் போட்டு நன்றாக வதக்க வேண்டும்.

பிறகு அம்மியில் மிளகாய் வற்றல், புளி, உப்பு முதலியவற்றை வைத்து நன்கு அரைக்கவும். அரைத்த பின் அதில் மாவிலையை வைத்து நன்கு மசிக்கவும்.


பின் அதனுடன் கடுகையும், உளுத்தம் பருப்பையும் வைத்து சிறிது அரைத்த பின் எடுத்து விடலாம்.

காரம் தேவைப்படுவோர் அப்படியே பயன்படுத்தலாம். தேவைப்படாதோர் சிறிது தேங்காயையும் சேர்த்து அரைத்துக் கொள்ளலாம். (கடைசியில் தான்) கடுகையும், உளுத்தம் பருப்பையும் அரைக்க வேண்டும். மிகவும் வாசனையாய் இருக்கும்.

இதுபோன்று, நாரத்தை தளிர், எலுமிச்சை தளிரையும் அரைக்க நன்றாக இருக்கும்.

## 'சைனஸ் அறை'களில் அடைப்பு ஏற்படுவது எப்படி?


மூக்கின் அனைத்து செயல்களுக்கும் உறுதுணையாக இருக்கும் இந்த சைனஸ் அறைகளின் முக்கியமான செயல், நாம் எழுப்பும் சத்தத்துக்கு சரியாக ஒலிவடிவம் தருவது. இதுதவிர கண்களுக்கும், மூளைக்கும் காற்றடைத்த மெத்தை



மாதிரி இருந்து இது உதவி செய்கிறது. மூக்கு வழியாக திறந்தவெளி உலகத்தோடு தொடர்பு கொண்டிருக்கும் இந்த சைனஸ் அறைகள் அடைத்துக் கொள்ள பல காரணங்கள் இருக்கின்றன. மூக்கின் நடுவில் இருக்க வேண்டிய தடுப்புச் சுவர் சிலருக்கு சற்று வளைந்து இருக்கும். அந்தத் தடுப்புச் சுவர் நடுவில் இருந்தால் சைனஸ் அறைகளின் உள்ளே காற்று சென்று வருவதில் ஒரு தடையும் இருக்காது. மாறாக, அது வளைந்து இருக்கும் பட்சத்தில் வளைவு அதன் அருகில் இருக்கும் சைனஸ் அறையின் வாசலை எப்போது வேண்டுமானாலும் அடைத்து விடக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.

அடைப்புக்கான அடுத்த காரணம், அந்த அறை வாசலில் நிகழும் சதை வளர்ச்சி. இதை Polyp என்று சொல்வார்கள்.

மூன்றாவதாக, தூசுக்கள் நிரம்பிய இடத்தில் வேலை பார்த்தால் தூசுகளும், வேதிப் பொருட்களும் மூக்குள்



போய் டர்பினேட்டுகள் என்னும் ஜவ்வுகளைத் தாக்கி பிரச்சினையை உண்டு பண்ணுவது, குழந்தைகளுக்கு அடினாய்டு சதை வளருவது இன்னொரு காரணம். சைனஸ் அறைகளில் சளி போய் தங்கிய பிறகு மேற்சொன்ன காரணங்களால் அறைவாசல் அடைத்துக் கொண்டால் தொந்தரவுகள் ஆரம்பமாகி விடும்.

வெளியே வந்தபோது நிருபர்களின் கூட்டத்தைக் கண்டாள் பேஜ். முதலில் அவர்கள் லாராவைச் சூழ்ந்துகொள்ள முயன்றார்கள். ஆனால், அவள் அவர்களுடன் எதுவும் பேசாமல் வேகமாகத் தனது காரில் ஏறிச் சென்று விட்டாள். அடுத்து, அழுதுகொண்டிருக்கும் இளைஞர்களைப் படம் எடுத்தார்கள் நிருபர்கள். பிறகு பிலிப்பின் பெற்றோர்களை நெருங்கினார்கள். ஆனால் பிலிப்பின் அப்பாவான சாப்மன் கடுங்கோபத்துடன் சத்தம் போட்டார். "உங்களுக்கு இருதயம் கிடையாதா?" என்று கத்தினார். அதற்குள் அவருடைய நண்பர்கள் அவரை மெல்ல வேறுபுறம் அழைத்துச் சென்று விட்டார்கள்.

மாதிரி இன்று பண்ணிக்கொண்டு விட்டாள்."

ஏராளமான கார்கள் சென்று கொண்டிருந்ததால் இவர்கள் கார் மெல்ல மெல்ல ஊர்ந்துதான் செல்ல வேண்டியிருந்தது. பேஜுக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது. அவளுடைய கார் ஆஸ்பத்திரியில் இருக்கிறது. அதை எடுத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் ஆலிஸனைப் பற்றி நடு நடுவே போன் செய்து விசாரித்துக் கொண்டிருந்த போதிலும், காலை முதல் நேரில் போய்ப் பார்க்கவில்லை.

"தயவு பண்ணி என்னை ஆஸ்பத்திரியில் இறக்கி விடுகிறீர்களா? ஆலியைப் பார்க்க வேண்டும்" என்றாள்.

"எனக்கும் க்ளோவைப் பார்க்க வேண்டும். இந்த மட்டில் இரண்டு குழந்தை

**சென்ற வாரம்**

**பிலிப்பின் மரணச் சடங்கிற்குச் செல்வதற்காக பேஜ் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறாள். அவளை அழைத்துச் செல்வதற்காகத் தாரென்ஸன் வந்தான். இறுதிச் சடங்கில் மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர். பிலிப்பைப் பற்றி அனைவரும் நன்றாகப் பேசினார்கள்...**

# ஒரு தாயின் மகன் 40

சர்ச்சில் சடங்குகள் முடிந்தபின், பிலிப்பின் பள்ளிக்கூடத்திலும் பிலிப்பின் வீட்டிலும் சில நிகழ்ச்சிகள் இருந்தன. ஆனால் அங்கெல்லாம் போகப் பேஜுக்கு மனம் வரவில்லை. சர்ச்சில் கண்ட காட்சிகளே போதும் போதுமென்றாகி விட்டது.

தாரென்ஸன் அவள் பக்கத்தில் வந்து நின்றான். வருத்தத்தில் அவன் கண்களும் சிவந்திருந்தன.

"வா, உன்னை வீட்டில் கொண்டு போய்

களும் உயிரோடு இருக்கிறார்களே, அதற்கே நாம் கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும்" என்றான் அவன்.

'ஆலிஸன் ஜடமாக இருப்பதைக் காட்டிலும் இறந்து போவதே மேல்' என்று பிராட் சொன்னதற்கும் இதற்கும் எத்தனை வித்தியாசம்! என்று பேஜ் எண்ணிக் கொண்டாள்.

"ஆமாம். பதினாறு வருஷமாகிறது எனக்குக் கல்யாணமாகி. என் இல்லறம் பிரமாதமானது என்று நம்பியிருந்தேன் - மூன்று நாள் முன்பு வரை. அந்த நம்பிக்கை தப்பு - ரொம்பப் பெரிய தப்பு."

ஆஸ்பத்திரியை நெருங்கிக் கொண்டிருந்தது அவர்கள் கார்.

அவள் என்ன சொல்கிறாள் என்பதை



விடுகிறேன்" என்று அவன் அழைக்க, பேஜ் அவனுடன் போய்க் காரில் ஏறிக்கொண்டாள். ஆனால் உடனே புறப்படாமல் இருவரும் மௌனமாகச் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தனர்.

"செனெட்டரின் மனைவி லாரா வந்திருந்தாளே, கவனித்தீர்களா? ரொம்ப மனோதிடம். பிலிப்பின் அப்பா, அம்மா எரிச்சல் படுவார்களே என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் வந்திருக்கிறாளே?" என்றாள் பேஜ்.

"பத்திரிகைக்காரர்களுக்கு லாரா மீது நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டிருக்குமே, அதற்காகவே வந்திருப்பாள். எவ்வளவு இரக்க இருதயம் உள்ளவள், இறந்து போன பையனைப் பற்றி அவள் எத்தனை வருத்தப்படுகிறாள் என்றெல்லாம் நாளை எழுதுவார்களே? ரொம்ப சாமர்த்தியமான திட்டம்" என்றான் தாரென்ஸன் இகழ்ச்சிச் சிரிப்புடன்.

"நீங்கள் ரொம்ப மோசம்" என்றாள் பேஜ். "நிஜமாகவே மனப்பூர்வமான வருத்தத்துடன் வந்திருக்கக்கூடாதா என்ன?"

"எனக்கு அப்படித் தோன்றவில்லை. அரசியல்வாதிகளைப் பற்றி எனக்குத் தெரியும். நிச்சயமாய்ச் சொல்கிறேன். சவ அடக்கத்துக்குப் போய்விட்டு வா என்று செனெட்டர்தான் அவளுக்கு யோசனை சொல்லியிருப்பார். எப்படியானால் என்ன? நாலு பேரிடம் நல்ல பெயர் கிடைக்கிற

"ஆலி எந்த நிலைமையில் இருந்தாலும் பரவாயில்லை. உயிருடன் வந்தால் போதும் என்பதில் நான் குறியாக இருக்கிறேன். ஆனால் பிராட் அப்படி நினைக்கவில்லை. வாழ்நாள் பூரா ஊனமாக, மனவளர்ச்சி குன்றியவளாக அவள் இருப்பதைக் காட்டி

*எழுதியது:* **டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

லும் இறந்து போவதே மேல் என்று நினைக்கிறார்." என்றாள்.

"சில பேர் ரொம்ப ரொம்ப யதார்த்தக் கண்ணோட்டத்துடன் இருப்பார்கள்." என்று ஆறுதலாகக் கூறிய தாரென்ஸன், அவள் கண்களை நேருக்கு நேராகப் பார்த்தான். "பிராடுடன் இதற்காகச் சண்டை போடுகிறாயா என்ன?"

"ஆமாம். இன்று காலை கூட ரொம்ப நேரத்துக்குச் சண்டை" என்று ஒரு சோகப் புன்னகையுடன் ஒப்புக்கொண்டாள் அவள்.

"குடும்பத்தில் இதெல்லாம் சகஜம்."

"அப்படியில்லை. எங்கள் விஷயத்தில் வேறு சில சிக்கல்களும் ஏற்பட்டிருக்கின்றன."

அவன் கேட்க வேண்டாமென்றுதான் நினைத்தான். ஆனால் கேட்காமலிருக்க முடியவில்லை. "ரொம்ப சீரியஸான சிக்கலா?" என்றான்.

அவன் ஊகித்துக் கொண்டான். "நெருக்கடி ஏற்படும் சமயங்களில் சில பேர் இதுபோல தப்பான வழிகளில் நிம்பதி தேடுவார்கள். சகஜம்தான்" என்றான்.

"இது நெருக்கடியால் திடீரென்று ஏற்பட்டதல்ல. ரொம்ப நாளாகவே ஒரு பெண்ணிடம் அவருக்குத் திருட்டுத்தனமாக உறவு இருந்து வந்திருக்கிறது. இப்போது கையும் களவுமாக அகப்பட்டு விட்டார். அவ்வளவுதான்."

எப்படி இவ்வளவு மனம் விட்டுத் தாரென்ஸனிடம் பேசுகிறோம் என்று அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. அம்மாவிடமோ, அக்காவிடமோ, ஏன் நெருங்கிய தோழியான ஜேனிடம் கூட, சொல்லியிருக்க மாட்டாள். அவள் எதையும் ஒளிக்காமல் பழகியது கணவன் பிராட் ஒருவனிடம்தான். அவனும் இப்போது இல்லையென்றாகி விட்டது.

ஆஸ்பத்திரியை அடைந்தார்கள். ஆலிஸனின் நிலைமையில் எந்த முன்னேற்றமும் இல்லையென்று தெரிந்தது. காரை எடுத்துக்கொண்டு ஜேனின் வீட்டுக்குப் போனாள், ஆண்டியை அழைத்துக் கொள்வதற்காக.

ஆண்டி பேஸ்பால் விளையாடிவிட்டு அப்போதுதான் திரும்பியிருந்தான். விளையாட்டு உடையில் இருந்தான்.

(தாய் தொடர்வாள்.....)

## உயிர் தப்பினார்




சாதிக் கபூர் மற்றும் பிபாஷா பாசு இருவரும் தற்போது உயிருடன் இருப்பது அதிசயம் தான். என்ன பயந்து விட்டீர்களா? அது ஒன்றும் இல்லை. இருவரும் ஒரு படப்பிடிப்புக்காகச் சென்றிருந்தார்கள் அது ஒரு கடல் காட்சி. அதில் நீரில் செலுத்தும் ஸ்கூட்டர் ஒன்றின் மேல் தான் அந்தக் காட்சி. அதற்காக இருவரையும் பாதுகாப்புக் கவசம் அணியுமாறு டைரக்டர் பணித்தபோதும் பிபாஷா எனக்கு நீச்சல் தெரியும் என்று கூறி அதனை அணிய மறுத்துவிட்டார். ஆனால் சாதிக் அணிந்து கொண்டார். படப்பிடிப்பு தொடங்கியபோது எதிர்பாராத விதமாக ஸ்கூட்டர் நீருக்கடியில் மிக வேகமாகச் சென்று விட்டது. இவ்வேளை சாதிக் ஸ்கூட்டரை விட்டு வெளியே பாய்ந்து விட்டார். பாதுகாப்புக் கவசம் அணியாத பிபாஷா நீருக்கடியில் மூழ்கிவிட்டார். உடனே படப்பிடிப்புக் குழுவினர் பாய்ந்து போய் அவர்கள் இருவரையும் காப்பாற்றி வெளியே கொண்டு வந்தார்களாம். பிபாஷாவின் தன்னம்பிக்கை நன்றாகத் தான் உள்ளது.

## சல்மான் ஒரு....!



கதரீனா கயிப் இப்போது ஹிந்தி திரையுலகத்தை கலக்கி வரும் இளம் நாயகி. இவர் அண்மையில் சல்மான் கானுடன் 'மெனி பயர் கயன் கியா' எனும் படத்தில் நடித்துள்ளார். படப்பிடிப்பு முடியும் போது இவர் சல்மான்கானுடன் காதல் கொண்டிருப்பதாகப் பலரிடம் கூறியிருக்கிறார். இவரிடம் சல்மான்கானைப் பற்றிக் கேட்ட போது 'அவர் ஒரு சுமுகமான நடிகர். அவருடன் நடிக்கும் போது அவரிடம் நான் நிறை விடயங்களைப் பார்த்து தெரிந் கொண்டேன். அவர் படப்பிடிப்புக்குப் போகும் வரைக்கும் படப்பிடிப்பு சம்பந்தமான எந்த விதமான யோசனையும் இன்றியே இருப்பதாக எண்ணியிருந்தேன். ஆனால் அவர் அப்படியல்ல. அடுத்து எடுக்கப்போகும் காட்சி எவ்வாறு அமைய வேண்டும் என்று தன் மனதிற்குள்ளேயே செட் போட்டுப் பார்த்து விடுகிறார். பின்னர் தான் படப்பிடிப்புக்கு ஆயத்தமாகிறார். இப்படி ஒவ்வொரு காட்சியாகப் பார்ப்பதால்தான் அவர் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்' என்று அவரைப் பற்றியே பெருமையாகச் சொல்கிறார் கதரீனா. கதரீனா உங்கள் அவதானத்திற்கு எம் வாழ்த்துக்கள்.

## பிரீத்தி சிந்தாவின் நக்கலுக்கு



மல்லிகா ஷெரவாத்துக்கு என்ன நடந்தது? என்று தான் இப்போதெல்லாம் பாலிவுட்டில் பரவலாகப் பேசப்படுகிறது. அப்படி என்ன அவர் சினிமாத்துறையை விட்டு ஓடிவிட்டாரா? அல்லது ஏதாவது புத்தி பிசகி விட்டதா? என்று பலவாறாகச் சிந்தித்துக் கொண்டு விஷயத்தைக் கேட்டால்,

அது ஒன்றும் இல்லையாம். மல்லிகா ஏதோ ஒரு காரணத்திற்காகப் பெரும் கோபத்துடன் காணப்படுகிறாராம். அது என்னவென்றால், அண்மையில் நடந்த கலை நிகழ்வு ஒன்றில் மல்லிகாவும் கலந்து கொண்டாராம். அவர் அங்கு வருகை தந்திருந்த தொழிலதிபர் கரண் ஜோகரிடம் கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக் கொண்டிருந்தாராம். இதை அவதானித்த பிரீத்தி சிந்தா, கரண் அருகில் வந்து 'என்ன கரண் ஒரு சரியான செக்ஸ் பாம்மைத் தான் பிடித்திருக்கிறீர்கள் போங்கள்' என்று நக்கலாகச் சொல்லி விட்டு சென்று விட்டாராம். அதனால் கோபமடைந்த மல்லிகா, உடனே கலை விழாவிலிருந்து வீடு வந்து விட்டாராம். அவரின் கோபம் இன்னும் அடங்கவில்லையாம். இதனால் தயாரிப்பாளர்கள் வீட்டுக்கு வந்தாலும் அவர்களையும் பார்க்க முடியாது என்று கூறி அனுப்பி விடுகிறாராம். பிரீத்தி சிந்தாவின் நக்கலுக்கு ஒரு அளவே இல்லாமல் போய்விட்டது.

# வடகடல் நிறுவனம்


## அன்று கடலுக்குள் மூழ்கவிருந்தது

## இன்று கலங்கரை விளக்காகின்றது

யாழ்ப்பாணம், குருநகரில் இயங்கும் வடகடல் நிறுவனமானது கடற் றொழில் சமுதாயத்திற்கு அதி உன்னத சேவையினை வழங்கும் நோக்கம் கொண்டதும் வட மாகாணத்தில் தற்போது சிறப்பாக இயங்கும் அரச கைத்தொழில் நிறுவனமாகவும் காணப்படுகிறது. ஒரு காலத்தில் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாய தொழிற்சாலை, ஒட்டிசுட்டான் மட்பாண்ட தொழிற்சாலை, சீநோர் என வட மாகாணம் கைத்தொழிலில் கொடிகட்டிப் பறந்த காலம். யுத்த அனர்த்தத்தினால் அழிவுற, தற்போது சீநோரை தாய் நிறுவனமாகக் கொண்ட வடகடல் நிறுவனம் பல இன்னல்களின் மத்தியிலும் சிறப்புற இயங்கி வருகிறது.

***வட கடல் நிறுவன வரலாறு :***

1967ஆம் ஆண்டு நோர்வே, சுவீடன் ஸ்தாபனத்திரால் அரசசார்பற்ற நிறுவனமாக



நூல் இழைக்கும் இயந்திரம்

உருவாக்கப்பட்ட இந்நிறுவனம், 1971ஆம் ஆண்டு நிர்வாகங்கள் சட்டத்திட்டத்தின் கீழ் அரச நிர்வாகத்தில் சீநோர் ஸ்தாபனமாக மாற்றப்பட்டது. பின்னர் 1985ஆம் ஆண்டில் இலங்கை ஸ்தாபன சட்டத்தின்படி அரச, நிர்வாக கூட்டமைப்பாக மாற்றப்பட்டு வளர்ச்சியிலும், அபிவிருத்தியிலும் உயர்ந்து பல்வேறு பிரதேசங்களிலும் தொழிற்சாலைகளையும் பிரிவுகளையும் உருவாக்கி, பாரிய நிறுவனமாக வளர்ச்சி கண்டது.

1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை வெகுச்



சத்துணவு திட்டத்தை ஆரம்பித்து வைக்கையில்

சிறப்பாக இயங்கிய சீநோர் நிறுவனம், அரசு புலிகளிடையே இரண்டாம் கட்ட பாரிய மோதல் ஆரம்பமானதை அடுத்து தொழிற்சாலைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. இந்த யுத்தமானது கட்டடங்களையும் இயந்திரங்களையும் பாழ்படுத்தியது. தொழிலாளர்களின் சீவியத்தையும் வாழ்க்கையினையும் பாரதூரமாகச் சின்னாபின்னப்படுத்தியது.

ஏறக்குறைய 10 வருடங்கள் முற்றுமுழுதாக அழிவுற்ற நிலையில் இருந்த இந்நிறுவனத்திற்கு, 2000ஆம் ஆண்டில் புது இரத்தம் பாய்ச்சப்பட்டு மீள உயிருட்டப்பட்டது. அன்றைய அரசின் வட மாகாண புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சராக பொறுப்பேற்ற கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா பார்வை பட்டதனால் இந்நிறுவனம் மறுமலர்ச்சியடைந்தது.

அன்றைய அமைச்சரவையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொண்டுவந்த பிரேரணையினை அடுத்து வட கடல் நிறுவனம் (North Sea Ltd ) என பெயர் செய்யப்பட்டு பாழ் நிறுவனமான சீநோரிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது. திரைசேரியும் இதற்கு ஒப்புதல் வழங்கியது. இவ்வாறு வீறு நடை கொண்டு எழும்பிய வடகடல் நிறுவனத்தின் துரதிர்ஷ்டம் 2001 டிசம்பர் ஆட்சி மாற்றத்தினைத் தொடர்ந்து ஏற்பட்டது. அப்போதைய அரசின் பாராமுகத்தினாலும் அப்போதைய அமைச்சர் மகேஸ்வரனின் மாற்றாந்தாய் மனப்பாங்கினாலும் வடகடல் நிறுவனம் கடலில்



இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கிய போது

மூழ்கத்தொடங்கியதுடன் அதள பாதாளத்தை நோக்கிச் சென்றது.

ஆனால், வடகடல் நிறுவனத்தின் இந்த அவல நிலை நீண்ட நாள் நீடிக்கவில்லை. 2004 ஏப்ரல் நாடாளுமன்ற தேர்தலைத் தொடர்ந்து ஆட்சி மாற்றத்தினால் கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து கலாசார அமைச்சு, கல்வி, மற்றும் வாழ்க்கை தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சராக கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா பதவியேற்றார். அவரது அமைச்சின் கீழ் மீண்டும் வடகடல் நிறுவனம் கொண்டுவரப்பட்டது.


நிர்வாகம் மறுசீரமைக்கப்பட்டு புதிய பணிப்பாளர் சபை பதவியேற்றுக்கொண்டது. வடகடல் நிறுவன தலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், யாழ்.மாவட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதம அமைப்பாளருமாகிய நடராஜா மதனராஜா பதவியேற்றார். அமைச்சின் தீவிர முயற்சியினால் திறைசேரியிலிருந்து 20 மில்லியன் ரூபா நிதியுதவி வடகடல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

இந்நிறுவனமானது வட மாகாணத்திற்கும் யாழ் மக்களுக்கும் கிடைத்த பெரும் வரப்பிரசாதமாக இருந்தது நன்கு உணரப்பட்டது.

இக்காலமே நிறுவனத்தின் பொற்காலமாகும். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிநடத்துதலில் தலைவர் நடராஜா மதனராஜாவின் கடும் முயற்சியில் வடகடல் மீண்டும் வீறுநடை போட ஆரம்பித்தது. தொழிற்சாலை புனரமைப்பு செய்யப்பட்டது. துருப்பிடித்து இரும்புக் குவியலாக இருந்த இயந்திரங்கள் ஓடத்தொடங்கின. உற்பத்தி ஆரம்பமானது. பணிப்பாளர் சபை உறுப்பினர்களும், தொழிற்சாலை ஊழியர்களும் இரவு பகல் பாராமல் தன்னிகரற்ற சேவைகளை வழங்கியமையினால் வடகடல் நிறுவனம் இன்று வீறுநடை போடுகின்றது.

வடகடல் நிறுவனமானது, சீநோரினால் உள்வாங்கப்படாமலிருந்த ஊழியர்களை உள்வாங்கியும் நாளாந்த சம்பளத்தில் கடமையாற்றிய ஊழியர்களை நிரந்தரமாக்கியும், ஏராளமான இளைஞர், யுவதிகளுளுக்கு வேலைவாய்ப்பு வழங்கியும் வடமாகாண குறிப்பாக யாழ்ப்பாண அபிவிருத்தியில் முக்கிய பங்கெடுத்துக்கொண்டிருக்கிறது. வட கடல் நிறுவன தற்போதைய செயற்பாடுகளாக சகல தரப்பட்ட மீன்பிடி வலைகளை செய்வது எல்லா வகையான இழை நூல்களை உற்பத்தி செய்வது. அவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்வதுடன் கடற்றொழில் சமுதாய அபிவிருத்தி திட்டங்களில் ஈடுபடுதல் மற்றும் கடற்றொழிலாளர்களுக்கும் அவர் தமது குடும்பத்தினருக்கும் நலன் வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பது என்பவற்றில் ஈடுபட்டுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரையின் பேரில் இம்மாதம் 13ஆம் திகதி வடகடல் நிறுவனத்தினால் வறிய கடற்றொழிலாளர்களில் குழந்தைகளுக்கு சத்துணவு திட்டம் நிறுவன தலைவர் நடராஜா மதனராஜாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வடகடல் நிறுவன பொருட்களின் தரத்தை அறிந்த FAO நிறுவனம் 5 மில்லியன் ரூபாவுக்கு கொள்வனவுக் கட்டளைகளை அனுப்பி வைத்துள்ளது. அதுமட்டுமன்றி UNDP CARE நிறுவனங்களும் வேறு தனியார் நிறுவனங்களும் கேள்வி விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ளன என்பது தற்போதைய நிலையாகும். அடிப்படை வசதிகள் குறைவு, போக்குவரத்து கஷ்டங்கள். புலிகளின் கெடுபிடிகள் மற்றும் கப்பம் வாங்குதல் என்பவற்றையும் தாண்டி வட கடல் நிறுவனம் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.



இரும்புக் குவியலாகிருந்த இயந்திரங்கள்

எதிர்காலத்தில் ஐஸ்கட்டி உற்பத்தி செய்தல், படகு உற்பத்தி, கடல் மோட்டர் இயந்திரம், கடல் தொழில் உபகரணம் செய்தலும், திருத்துதலும் போன்ற பாரிய அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என வட கடல் நிறுவன தலைவர் நடராஜா மதனராஜா தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தின் போது சேதமடைந்த ரோலர் படகுகளை இலவசமாக திருத்தி வழங்கியதில் வட கடல் நிறுவனம் முக்கிய பங்காற்றியது.

ரோலர்களை திருத்திக் கொடுப்பதினூடாக பாதிக்கப்பட்ட மக்களிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நற்பெயரை பெற்று விடுவார் என்ற காழ்ப்புணர்ச்சியில் புலிகள் இத்திட்டத்தை தடுத்து நிறுத்தியுள்ளனர். ஈ.பி.டி.பி மீதான அரசியல் முரண்பாட்டை மக்களுக்கான சேவையை தடுப்பதனூடாக புலிகள் தீர்த்துக் கொள்ள நினைப்பதானது. பாதிக்கப்பட்ட மக்களையும் அவலப்படும் மக்களையும் பலி வாங்குவதாகவே அமையும் ஈ.பி.டி.பி.யாக இருந்தாலென்ன புலிகளாக இருந்தாலென்ன மக்களின் நலனில் நின்று சேவை செய்பவர்களையே மக்கள் மனதில் நிறுத்தி வைப்பார்கள்.

**தொகுப்பு :- ஜெ.கே.**

# இலங்கையில் இந்துமத பிரசாரகர்கள்

இலங்கையில் ஏனைய மதங்களுக்குப் பிரசாரகர்களும், மத போதகர்களும் இருக்கும்போது, இந்து சமயத்தவர்களுக்கு மட்டும் பிரசாரகர்கள் இல்லாத குறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பெரு முயற்சியினால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. இலங்கைத் திருநாட்டில் நீண்டகாலமாக இந்து மதப் பிரசாரகர்கள் இல்லாத குறை கூறப்பட்டு வந்தபோதும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவுமே மேற்கொள்ளப்படவில்லை. மறுபுறம் மதம் மாறுதல், மதம் மாற்றுதல் எனும் நடவடிக்கைகள் மூலம் இந்து சமயத்தவர்களே ஏனைய மதங்களுக்கு மாறும் - மாற்றப்படும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் நிலைமையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. காலங்காலமாக இடம்பெற்று வரும் மேற்படி சம்பவங்களினால் இந்து சமயத்தினைப் பேணுவதுடன் நின்றுவிடாமல்



வரவேற்புரையை வழங்கும் போது

அதனை வளர்ப்பதற்குரிய அவசியமும் உணரப்பட்டது. எனவே இந்துமத குருமார், சிவாச்சாரியார்கள் என்போருக்கு மேலதிகமாக இந்து மத பிரசாரகர்களும் அவசியம் தேவை என்பதை நன்குணர்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதற்குரிய ஆக்கபூர்வமான பணிப்புரைகளை வழங்கினார்.



அமைச்சர் சான்றிதழ்களை வழங்கும் போது

இதில் குறிப்பிடவேண்டிய விடயம் இந்திய அரசியல் தலைவர்களுடன் அமைச்சர் நடத்திய பேச்சுவார்த்தை களை அடுத்து பெங்களூர் நகரில் இந்து மத பிரசாரகர்களுக்கு உரிய பயிற்சியும், போதனைகளும் வழங்க இந்திய அரசானது அனுசரணை வழங்க மகிழ்வுடன் முன் வந்தது.

இதனை அடுத்து இந்து சமய அலுவல்கள் விவகார திணைக்களத்தினால் இந்து மதப் பிரசாரகர்களைத் தெரிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களில் இருந்து தகுதியானவர்கள் எனக் காணப்பட்ட 55 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட இந்து மதப் பிரசாரப் பயிலுனர்கள் கடந்த மாதம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும், இந்து சமய விவகார அமைச்சின் ஆலோசகர் சட்டத்தரணி செல்வி மகேஸ்வரி வேலாயுதத்தினதும் ஆலோசனைகளுடனும், ஆசிகளுடனும் பெங்களூருக்கு பயிற்சி பெறப் புறப்பட்டுச் சென்றனர். இந்து மதப் பிரசாரகர்களுக்கான திட்டம் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதிலிருந்து அதனை



விழாவில் கலந்து கொண்ட பிரதம விருந்தினர்கள் சிலர்

நடைமுறைப்படுத்தும்வரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரையில் சட்டத்தரணி செல்வி மகேஸ்வரி வேலாயுதம் மேற்கொண்ட அயராத முயற்சிகள் உண்மையில் மனமுவந்து பாராட்டப்பட வேண்டியவை என்பது குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

இந்து மதப் பிரசாரப் பயிலுனர்களாக மொத்தம் 55 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். அதில் 19 பேர் பெண்கள் என்பது மற்றுமோர் விசேட அம்சமாகும். பெங்களூர் பயணமாவதற்கு முன் கருத்துத் தெரிவித்த பயிலுனர் ஒருவர்,



பயிற்சி பெற்ற இந்து பிரசாரகர்களில் ஒரு பகுதியினர்

தாம் உரிய முறையில் விண்ணப்பம் மட்டுமே அனுப்பி வைத்ததாகவும், மற்றப்படி அதிகாரத்தில் அல்லது உயர் பதவியில் எவரையும் தனக்குத் தெரியாதென்பதுடன், எவ்வித சிபாரிசும் இன்றித் தான் தெரிவு செய்யப்பட்டமை குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் கூறினார்.

இந்து சமயப் பிரசாரகர்களாகப் பயிற்சி பெறுவோரான 55 பேருக்கும் போக்கு வரத்து, தங்குமிடம், பயிற்சி மற்றும் அனைத்து வசதிகளுக்குமுரிய செலவினங்களையும் இந்து சமய அலுவல்கள் விவகார அமைச்சே பொறுப்பேற்றிருந்தமை மற்றுமோர் சிறப்பம்சமாகும்.

இவ்வாறு சென்ற 55 பேரும் பெங்களூரில் இந்து சமயப் பிரசாரகர்களாக அறிவொளி பெற்றுக் கொண்டதுடன், சிவதீட்சையும் பெற்றுக்கொண்டு கடந்த வாரம் நாடு திரும்பினர். இவர்கள் சிறப்பாகப் பயிற்சியை முடித்துக் கொண்டமையினால், இந்து மதப் பிரசாரகர்களாகச் சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இந்து



அமைச்சின் மதியுரைஞர் சட்டத்தரணி செல்வி மகேஸ்வரி வேலாயுதம் உரையாற்றுகையில்

சமய அலுவல்கள் விவகார அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இவ் வைபவத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மகணானந்தாஜீ, இராஜகிரிய அம்மன் ஆலய சுவாமிகள் கனகரட்ணம், சைவ சித்தாந்த சொற்பொழிவாளர் வசந்தா வைத்தியநாதன், இந்து கலாசார அமைச்சின் மதியுரைஞர் சட்டத்தரணி செல்வி மகேஸ்வரி வேலாயுதம், இந்து சமய விவகார திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன், அமைச்சின் செயலாளர் மகா நந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக ஊடகவியலாளரும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை உறுப்பி னருமாகிய திருஞானசுந்தரம், இரத்மலானை இந்துக் கல்லூரி அதிபர் மன்மதராஜா ஆகியோர் பங்கேற்றனர்.

இவ் வைபவத்தில் உரை யாற்றிய கனகரட்ணம் சுவாமிகள், தமிழை நேசிப்பவரே தாயை உண்மையாக நேசிப்பார். தாயாரை நேசிப்பவரே தன் சமயத்தினை நேசிப்பார். எனவே தவறில்லா தமிழினால் இந்து சமயப் பிரசாரத்தினைச் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் எனக் கூறினார்.

இராமகிருஷ்ண மிஷன் போஷகர் ஆத்மகணானந்தஜீ உரையாற்றுகையில், இந்து மதப் பிரசாரகர்களை உருவாக்கும் 15 வருடகாலக் கனவு நனவாகியுள்ளது என்று கூறியிருந்ததுடன், இத் திட்டத்தினை நடைமுறைப்படுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு தமது வாழ்த்துக்களையும், ஆசிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இந் நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்திய அமைச்சின் மதியுரைஞர் சட்டத்தரணி செல்வி மகேஸ்வரி வேலாயுதம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இடையறாத முயற்சியும் பங்களிப்புமே அவரது வழிநடத்தலில் தாம் இத் திட்டத்தினைச் சிறப்பாக மேற்கொள்ள உறுதுணையாக அமைந்தது எனக் குறிப்பிட்டார்.

ஆசியுரை வழங்கிய சொற்பொழிவாளர் வசந்தா வைத்தியநாதன் அவர்கள், இந்து மதப் பிரசாரகர்கள் இல்லாத குறை இன்று தீர்க்கப்பட்டுள்ளது. இத் திட்டத்



பயிற்சி பெற்ற இந்து பிரசாரகர்களில் ஒரு பகுதியினர்

தினை சிறப்பாக அமுல்படுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வரலாற்றில் நிச்சயம் இடம் பிடித்துள்ளார் எனக் கூறினார்.

சான்றிதழ் வழங்கும் இவ் வைபவத்தில், பயிற்சியை முடித்துக் கொண்ட இரு பிரசாரகர்களும் உரையாற்றினர். இந்து சமயப் பிரசாரகர்களாக நாம் எம்மை அர்ப்பணிக்கின்றோம். மிகவும் உணர்ச்சியுடன் இப்பதவியை பொறுப்பேற்கின்றோம். இந்து சமயப் பிரசாரகர்கள் ஆகவேண்டும் என்ற எமது ஆவலைப் பூர்த்தி செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு நாமும், இந்து சமய சமுதாயமும் வரலாறும் என்றும் கடமைப்பட்டவர்கள். இந்து சமய வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும் நாம் முழுமையான பங்களிப்பினை வழங்குவோம் என அவர்கள் தமதுரையில் கூறினர்.

இந்து சமயப் பணியில், இந்து சமயப் பிரசாரகர்களைத் தோற்றுவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் திட்டமானது மேலும் பல்வேறு பணிகளிலும் சிறப்பாக விரிவு பெற்று அவரின் பதவிக் காலத்திலேயே முழுமையடைய வேண்டும் என்பதே இலங்கை வாழ் இந்து சமயத்தவரின் அவாவும் பிரார்த்தனைகளுமாகும்.

**படஉதவி:- மதி**

**தொகுப்பு :- ஜெ.கே., மதி**

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## சர்வகட்சி மாநாட்டு யோசனைகள் கைவிடப்பட்டன

**1984ஆம்** ஆண்டின் பிற்பகுதியில் கூடிய சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா தமிழர் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வை மறுக்கும் விதத்தில் முன்வைத்த யோசனைகள் பற்றி கடந்த வாரத்திற்கு முந்திய வாரம் குறிப்பிட்டிருந்தோம். 1984 ஒக்டோபரில் இந்திரா காந்தி சுட்டுக் கொல்லப்படுவதற்கு ஒரு வருடம் முன்னதாக புதுடில்லியில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில், இலங்கை அரசின் இழுத்தடிக்கும் முயற்சிகள் பற்றி தெரிவித்திருந்தார். அப்போது அவர் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்தின் இரு புதல்வர்கள் மீதும் பயங்கரவாதச் சாயம் பூச இலங்கை அரசு எடுத்த முயற்சி பற்றியும் குறிப்பிட்டிருந்தார். இது குறித்து கடந்த வாரம் விபரித்திருந்தோம். மீண்டும் 84ஆம் ஆண்டின் இறுதியில் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டின் எதிர் விளைவுகள் பற்றிப் பார்ப்போம். சர்வகட்சி மாநாட்டுப் பேச்சாளரான அமைச்சர் அத்துலத் முதலி




யோசனை விபரங்களைப் பத்திரிகையாளர்களுக்குத் தெரியப்படுத்தினார். இந்த யோசனைகளை அமுலாக்குவதற்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலம் மக்களின் அபிப்பிராயம் பெறப்படும் என்றும் கூறினார். மறுநாள் நடைபெற்ற ஐ.தே.க.வின் மாநாட்டில் பிரதமர் பிரேமதாசா, இந்த யோசனை குறித்து விளக்கமளித்தார். இந்த யோசனைகள் இலங்கையின் ஒற்றையாட்சி முறைக்கு அச்சுறுத்தலாக அமையுமா? இல்லையா? என்பது பற்றித் தெரிந்து கொள்ள சர்வஜன வாக்கெடுப்பொன்று நடத்தப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்.

பிரேமதாசாவின் கோரிக்கைக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா பதிலளித்தார். புதிய யோசனைகள் மாவட்டங்களுக்கோ அல்லது பிராந்தியங்களுக்கோ சமஷ்டி அதிகாரங்களை வழங்காத காரணத்தினால், இலங்கை அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒற்றையாட்சி முறைக்கு அது அச்சுறுத்தலாக அமையாதென்று கூறினார்.

**தனி நாடொன்றினை அமைப்பதற்கான ஆணையை 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வழங்கியதாக அதில் குறிப்பிட்டிருந்தார். வடக்குக் கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து சுயாட்சித் தமிழ் மொழி மாநிலமொன்றை உருவாக்குவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி இணக்கம் தெரிவித்திருந்ததாகவும், இந்தியாவின் நல்லுதவிகளை ஏற்றுக் கொண்டு இவ்வாறான ஒரு மாற்றுத் தீர்வை தமிழ் மக்கள் முன்னிலையில் எடுத்துச் செல்ல தமிழர் விடுதலைக் கூட்டணி தயாராகவிருந்ததாகவும், அந்த அறிக்கையில் அவர் தெரிவித்திருந்தார்**

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழக் கோரிக்கையை கைவிடுவதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதால், இந்த யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார். இலங்கையின் இராணுவ நடவடிக்கைகள், நாட்டின் வருமானத்தைப் பாதிப்பதாலும், அரசியல் தீர்வொன்றினைக் காணுமாறு உதவி வழங்கும் நாடுகளும் அமைப்புக்களும் வற்புறுத்துவதாலுமே ஜெயவர்த்தனாவின் நிலைப்பாட்டில் சிறிது மாற்றமேற்படக் காரணமாகியது எனலாம்.

ஜெயவர்த்தனா தனது நகல் யோசனைகளைப் பற்றி ஐ.தே.க. எம்.பி.க்களுக்கு விளக்கி அவர்களின் ஆதரவைப் பெற முனைந்தார். மூன்று பிரிவுகளாக ஐ.தே.க. எம்.பி.க்களைச் சந்தித்து நகல் யோசனைகள் பற்றி விளங்கப்படுத்தினார். இதற்கிடையில் வழமைபோல் தீர்வு முயற்சிகளைக் குழப்பும் வேலைகளில் பௌத்த மதகுருமார் இறங்கினர். வண.மடிகே பன்னசீக மகாநாயக்க தேரர், கோட்டை ஸ்ரீ ஜயவர்த்தனபுரவிலுள்ள நாக விகாரையில் நகல் யோசனைகளை எதிர்த்துக் கூட்டமொன்றினை நடத்தினார். உத்தேச யோசனைகள் நாட்டுக்கும் சிங்கள இனத்துக்கும் பௌத்த சமயத்துக்கும்

(அரசியல் தொடர்)

அச்சுறுத்தலாக அமையுமென்று எச்சரித்தார். உத்தேச யோசனைகளை எதிர்த்து சத்தியாக்கிரக இயக்கமொன்றினை ஆரம்பிக்குமாறு அவர் பௌத்த மக்களுக்குக் கோரிக்கை விடுத்தார். ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளிருந்த ஜெயவர்த்தனாவுக்கு எதிரான அணியொன்றும் உத்தேச யோசனைகளுக்கெதிராகப் பிரசார வேலைகளை ஆரம்பித்தது.

இந்த உத்தேச யோசனைகளைப் பற்றி ஆராய்வதற்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் பீடம் கொழும்பில் கூடியது. நகல் யோசனைகள் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்காத காரணத்தால், அவற்றை நிராகரிக்க வேண்டுமென்று சிவசிதம்பரம் வாதிட்டார். தீவிர கருத்துக்கள் கொண்டவர்களும் அதனை நிராகரித்தனர். இந்த யோசனைகள் குறித்து அமிர்தலிங்கம் அதிருப்தியுற்றிருந்தபோதிலும், அதற்கு ஆதரவாகப் பேசினார். இந்த யோசனைகளை அமுல்படுத்துவதற்கு தமிழர்கள் சந்தர்ப்பம் வழங்க வேண்டுமென்று அவர் வாதிட்டார்.

சர்வகட்சி மாநாட்டின் கூட்டத் தொடர் டிசம்பர் மாதம் 21ஆம் திகதி மீண்டும் கூடியது. இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ஜெயவர்த்தனா நகல் யோசனை பற்றிய தத்தமது கருத்துக்களை எழுத்து மூலம் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டார். அத்துடன் இந்த யோசனைகளை ஆராய்ந்து, ஆலோசனைகள் கூறுமாறு பௌத்தமகா சங்கத்தினருக்கு அழைப்பு விடுத்தார். இந்த யோசனைகள் குறித்து மக்களின் கருத்தறிவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு அல்லது தேர்தல் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இதன் மூலம் நாட்டிற்கு சமாதானம் ஐக்கியமும் ஸ்திரத்தன்மையும் ஏற்படும் என்று தான் நம்புவதாகவும் அவர் சொன்னார். தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதியின் கூற்றுக் களை நிராகரித்தது. அக்கூட்டத்தில் அமிர்தலிங்கம் அறிக்கையொன்றினை வெளியிட முனைந்தார். ஆனால், அவருக்கு அனுமதியளிக்கப்படவில்லை.

அன்றிரவு தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் பீடம் கூடியது. ஜெயவர்த்தனா மீது நம்பிக்கை வைத்தமைக்காக அமிர்தலிங்கத்தையும் ஏனைய மிதவாதிகளையும் கூட்டத்தில் கலந்து கொண்டோர் கண்டித்தனர். ஜெயவர்த்தனாவின் நடவடிக்கைகளைக் கண்டித்தும், நகல் யோசனைகளை நிராகரித்தும் அறிக்கையொன்றினை வெளி

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

யிடுமாறு அமிர்தலிங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மறுநாள் இரண்டு பக்க அறிக்கையொன்றினை அமிர்தலிங்கம் வெளியிட்டார். சர்வகட்சி மாநாட்டில் முதல் நாள் கூட்டத்தில் தான் தெரிவித்தவற்றை அவர் அறிக்கையில் மீண்டும் வலியுறுத்திச் சுட்டிக் காட்டினார். தனி நாடொன்றினை அமைப்பதற்கான ஆணையை 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வழங்கியதாக அதில் குறிப்பிட்டிருந்தார். வடக்குக் கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து சுயாட்சித் தமிழ் மொழி மாநிலமொன்றை உருவாக்குவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி இணக்கம் தெரிவித்திருந்ததாகவும், இந்தியாவின் நல்லுதவிகளை ஏற்றுக் கொண்டு இவ்வாறான ஒரு மாற்றுத் தீர்வை தமிழ் மக்கள் முன்னிலையில் எடுத்துச் செல்ல தமிழர் விடுதலைக் கூட்டணி தயாராகவிருந்ததாகவும், அந்த அறிக்கையில் அவர் தெரிவித்திருந்தார். அந்த அறிக்கையின் இறுதியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

"மாநாட்டில் முன்வைக்கப்பட்ட நகல் மசோதாவின் சரத்துக்களை கவனமாக ஆராய்ந்தபோது அவை பிராந்திய சுயாட்சியை அமைப்பதற்கு போதுமானவையாக இல்லை. பிராந்திய சுயாட்சியை விட குறைந்தளவு யோசனைகளே முன் வைக்கப்பட்டுள்ளன. 1980ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திச் சபைத் திட்டத்தை நாம் ஏற்றுக் கொண்டபோது எமது தனிநாட்டுக் கோரிக்கைக்கு அது ஓர் மாற்றீடாக இல்லையென்பதை நாம் திட்டவட்டமாக உணர்ந்து கொண்டிருந்தோம்."

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் இந்த அறிக்கையைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நகல் மசோதாவை எதிர்க்கும் தனது பிரசாரங்களை மேலும் முன்னெடுத்துச் சென்றார். அமிர்தலிங்கத்தின் அறிக்கை வெளியிடப்பட்ட சில மணித்தியாலங்களின் பின்னர் 5 பக்க அறிக்கையொன்றினை திருமதி பண்டாரநாயக்கா வெளியிட்டார். "இந்த நாட்டு மக்கள் நகல் மசோதாவை தெளிவாகவும் திட்டவட்டமாகவும் நிராகரிக்க வேண்டும்" என்று அதில் ஆலோசனை கூறப்பட்டிருந்தது. அமைச்சர் சிறில் மத்தியூவும் இந்த உத்தேச யோசனைக்கு எதிராக அறிக்கையொன்றினை வெளியிட்டார். முழுமையாக இந்த யோசனையைக் கைவிடுமாறும், மக்கள் அதற்கு ஆதரவு அளிக்கக்கூடாதென்றும் சிறில் மத்தியூ அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டார். புத்த பிக்குகளும் நகல் யோசனைக்கு எதிராக அழுத்தங்களைக் கொடுக்க ஆரம்பித்தனர். யோசனைகளைக் கைவிட வேண்டிய அளவுக்கு அழுத்தம் அதிகரிப்பதை ஜெயவர்த்தனா பின்னர் உணர்ந்தார். இந்த யோசனைகளைத் தான் முன்னெடுத்துச் சென்றால் சிங்கள பௌத்த மக்கள் தன்னைத் துரோகியென பட்டம் சூட்டுவார்களென்று அவர் கூறினார்.

(தொடர்ந்து வடியும்....)




குன்றின் உச்சியில் கருவறை மட்டுமே மீதமிருந்த கோயிலை நோக்கி இருவரும் படிகளில் ஏறினர்.

கோயிலை ஒட்டி தென்மேற்குப் பகுதியிலிருந்த ஆலமரத்தடியில் அமர்ந்தனர்.

"ஆமாம், ஸ்ரீதேவிக் குட்டிங்கிற பேரைக் கேட்டதும் உனக்கு தூக்கி வாரிப் போட்டதே! ஏன்? இந்த ஊருக்கும், அவளுக்கும் என்ன சம்பந்தம்?" என்றார் குமார்.

அந்த ஊரில் பெரிய சூறாவளியையே ஏற்படுத்திய கதையைச் சொல்வதற்கு ஆயத்தமானான் பிரபாகரன்.

பிரபாகரன் சொல்லப் போகும் கதையைக் கேட்க ஆவலுடன் ஆலமரத்தின் நிழலில் உட்கார்ந்தார் குமார்.

"அது ஒரு பயங்கரமான சம்பவம்! உனக்கு 'சந்தனக் காட்டு இல்லம்' ஞாபகமிருக்கா? அந்த வீட்டுத் தலைவர் கோவிந்தன் நம்பூதிரியைத் தெரியுமில்லையா? அதான், மந்திரம் தந்திரம்னு அலைஞ்சுட்டிருப்பாரே? அவரை ஞாபகமிருக்கா?" என்றான் பிரபாகரன்.

"உம்.... இப்ப ஞாபகம் வருது" - குமார் கண்களைச் சுருக்கிக் கொண்டு பதிலளித்தார்.

உச்சிக் குடுமியுடன், முழங்கால் வரையிலான முண்டு ஒன்றைக் கட்டிக் கொண்டு, கோயிலில் பூஜை நடத்தப் போகும் கோவிந்தன் நம்பூதிரியை குமார் பார்த்திருக்கிறார்.

"ஒரு தடவை மாந்திரீகத்துக்குப் போன அவர், திரும்பி வந்தபோது ஒரு பெண்ணையும், கைக்குழந்தை ஒன்றையும் அழைத்து வந்தார்."

"சில காலத்துக்குப் பிறகு வெளியூர் போவதாகச் சொல்லிப் புறப்பட்டுப் போனார். ரொம்ப நாள் திரும்பவே இல்லை."

"அந்தப் பெண்மணியும், குழந்தையும் தனியாகத்தான் வாழ்ந்தனர். குழந்தை வளர்ந்தாள். அவளும் இந்தக் கோயிலில் பூஜை செய்திருக்கிறாள். ஒருவேளை நீ கூட அவளைப் பார்த்திருக்கலாம்" என்றான் பிரபாகரன். குமார் யோசனையில் ஆழ்ந்தார்.

**எழுதுவது சிவன்**

சின்ன வயதில் அவர் கோயிலுக்குப் போனபோது கருவறையின் முன்புறம் நின்றபடி, தரிசனம் முடித்துவிட்டு வருபவர்களின் உள்ளங்கையில் பிரசாதமாக சந்தனத்தைப் போடும் இளம்பெண் ஒருத்தியின் தாமரை முகம் சட்டென்று மின்னி மறைந்தது.


பிரபாகரன் விட்ட இடத்திலிருந்து தொடங்கினான்.

"ஒரு நாள் அந்தப் பெண்ணும், அவளது அம்மாவும் திடீரென்று காணாமல் போனார்கள்.

மூன்று நாட்கள் கழித்து, அவர்களுடைய பிரேதங்கள் அந்த இல்லத்துக்குப் பின்னாலிருந்த குளத்தில் மிதந்தன."

"அப்ப அந்தப் பெண்ணுக்கு என்ன வயசு இருக்கும்?" குமார் விசாரித்தார்.

"இருபது இருபத்தொண்ணு



இருக்கலாம்."

"அவுங்க சாவுக்கு என்ன காரணமாம்?"

"அதெல்லாம் எனக்குச் சரியாகத் தெரியாது. அவ உடம்பில ஏதோ ஆவி பூந்துக்கிட்டதா சொன்னாங்க. யாரோ அவளைக் கற்பழிச்சுக் கொன்னுட்டதாகவும் பேசிக்கிட்டாங்க."

"அதே சமயத்துல மூணுபேர் கோயில் பக்கத்திலேயே செத்துக் கிடந்தாங்க" என்றான் பிரபாகரன்.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது அங்கே குஞ்சு ராமன் வந்தார்.

அவர் அறுபது வயது தாண்டியவர். கல் தச்சர். சிற்ப வேலைப்பாடுகளும் தெரிந்தவர்.

குமாரும், பிரபாகரனும் பேசிக் கொண்டிருந்த விஷயத்தைக் கேட்டுத் தனக்குத் தெரிந்ததைச் சொல்ல ஆரம்பித்தார்.

"வந்தவங்க முதல்ல அந்த அம்மாவை கொன்னுட்டாங்களாம். அந்தப் பொண்ணு கொலைகாரங்களோட மோதினாளாம். வந்தவனுங்க, மகளையும் அடிச்சுக் கொன்று ரெண்டு பேரையும் குளத்துல வீசியெறிஞ்சிட்டுப் போனதாகவும் பேசிக்கிட்டாங்க" என்றார்.

"கொலை செஞ்சவங்க யார்?" குமார் கேட்டார்.

குஞ்சுராமன், பிரபாகரனை உற்றுப் பார்த்தார்.

"நான் சொல்றேன் தம்பி. ஆனா நீ வீணா வருத்தப்படக் கூடாது. உங்க மாமா சந்துநாயர்தான் காரணம்னு சொன்னாங்க. அவர்தானே கோவிந்தன் நம்பூதிரி வீட்டில காரியஸ்தரா இருந்தவர். நம்பூதிரி இறந்தபிறகு எல்லாச் சொத்தும் அந்தப் பெண்ணுக்குப் போய்ச் சேரும்னு அவருக்குத் தெரியாதா? அதனால அவங்களைக் கொன்னுட்டு, சொத்துக்களை மடக்கத் திட்டம் போட்டாராம்" என்றார் குஞ்சுராமன்.

"உங்க மாமாவோட பிள்ளைங்க நாலு பேருமே பக்கா ரௌடிங்க. நான் சொல்றனேன்னு வருத்தப்படாத அவங்களை எதிர்த்த யாரும் உயிரோட இருந்ததில்லை" என்ற குஞ்சுராமன், கொஞ்ச நேரம் வெற்றிலையை அசை போட்டுவிட்டுப் புறப்பட்டுப் போனார்.

சூரியன் மறைய ஆரம்பித்தது.

"நாம போகலாமா?" பிரபாகரன் எழுந்தார்.

"நீ போ பிரபாகரா, நான் இன்னும் கொஞ்ச நேரம் இங்க உட்கார்ந்துட்டு வர்றேன்" என்றார் குமார்.

பிரபாகரன் கிளம்பிச் சென்றான்.

அவன் போனதும் குமார் எழுந்து கோயில் கருவறையை நோக்கி நடந்தார்.

கோயில் முழுவதும் மோகினிச் சிலைகள். அதில் ஒன்றைப் பார்த்ததும், குமாருக்குத் தூக்கிவாரிப் போட்டது.

(வாசனை வீசும்....)

# நிலவின் ஒளியை மறைத்த மெழுகுவர்த்தி!

அவன் ஒரு அரசன். "தான்" என்ற அகங்காரம் நிரம்பியவன். வேட்டைக்குச் சென்றபோது, காட்டிலே ஒரு துறவியைச் சந்தித்தான். கண்களை மூடித் தியானம் செய்துகொண்டிருந்தார் துறவி. "நான் பல நாடுகளை வென்று, என் நாட்டோடு இணைத்திருக்கிறேன். நான் வென்று வந்த செல்வத்தால், என் கஜானா நிரம்பி வழிகிறது. அந்தப்புரம் எங்கும் நான் கவர்ந்து வந்த மாற்று தேசத்து அழகிகள் இருக்கிறார்கள். ஆனால், நான் சந்தோஷமாக இல்லை. எனக்கு எப்போது மகிழ்ச்சி கிடைக்கும்...?" - அரசன் கேட்டான்.



தியானம் கலைந்ததால் கண்விழித்த துறவி சற்றே கோபமாக, "நான் செத்தால்தான் உனக்குச் சந்தோஷம் கிடைக்கும்...." என்று சொல்லிவிட்டுக் கண்களை மூடி, மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தார். "நான் எத்தனை பெரிய அரசன்.... என்னையே அவமானப் படுத்துகிறாயா.....?" என்றபடி கொஞ்சமும் சிந்திக்காமல் துறவியைக் கொல்வதற்காக இடுப்பிலே இருந்த கத்தியை உருவினான். "அட மூடனே... நான் என்றால், என்னைச் சொல்லிக் கொள்ளவில்லை.... 'நான்' என்ற இறுமாப்பு செத்தால்தான் உனக்குச் சந்தோஷம் கிடைக்கும்...." என்று துறவி விளக்கினார்.

நம்மைவிடப் படிப்பிலோ, பதவியிலோ, செல்வத்திலோ குறைவானவன் என்று நாம் மதிப்பிட்டு வைத்திருக்கும் ஒருவர், ஒரு விவாதத்தின் போது நாம் சொல்லும் கருத்துக்கு 'ஆமாம் சாமி' போடாமல் மாற்றுக் கருத்தைச் சொல்லும்போது அதை ஏற்றுக்கொள்ள நம் 'ஈகோ' இடம் கொடுப்பதில்லை.

இன்னும் கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள். இதுபோன்ற ஈகோ உடையவர்கள், "நாம் சொல்லும் கருத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.... நமக்கு எல்லோரும் மரியாதை கொடுக்க வேண்டும்...." என்றுதான் நினைக்கிறார்கள். அப்படியென்றால் என்ன அர்த்தம்...? மற்றவர்கள் இவர்களுக்கு மரியாதை கொடுத்தால்தான் இவர்கள் சந்தோஷப்படுவார்கள். இதையே வேறு வார்த்தைகளில் சொன்னால், இவர்கள் தங்களின் மகிழ்ச்சிக்காக மற்றவர்களின் தலையாட்டலை எதிர்பார்த்திருப்பார்கள்! இன்னும் பச்சையாகச் சொன்னால், "எனக்கு மரியாதை கொடு..... எனக்கு மரியாதை கொடு...." என்று மற்றவர்களிடம் மறைமுகமாகப் பிச்சை எடுப்பவர்கள் இவர்கள். 'மரியாதை' என்ற பிச்சையை மற்றவர்கள் இவர்களுக்குக் கொடுக்க மறுக்கும் போது, இவர்களின் அமைதி பறிபோய்விடுகிறது. சந்தோஷம் தொலைந்து விடுகிறது.

நமது வேதங்கள் ஆண்டவனை 'ஆனந்தம்' என்று குறிப்பிடும். இதை ஏன் சொல்கிறேன் என்றால், Edging God Out என்பதன் சுருக்கம்தான் EGO! அதாவது, நம்மைவிட்டு ஆண்டவன்..... அதாவது, ஆனந்தம் வெளியேறும் நிலைதான் 'ஈகோ'!

"கடவுளே! 'நான்' என்ற அகங்காரத்தை இதோ உனக்கு எதிரே உடைத்து விடுகிறேன்...." என்று நமக்கு நாமே உணர்த்தத்தான் தேங்காயை ஒரு அடையாளப் பொருளாகக் கோயிலிலே உடைக்கிறோம்.

தேங்காயின் கடுமையான ஓடு உடையும்போது எப்படிச் சுவையான இளநீர் வெளிப்படுகிறதோ, அதேமாதிரி நமது அகங்காரம் என்ற ஈகோ உடையும்போது சந்தோஷம் வெளிப்படும்.

அலுவலகத்திலோ அல்லது நண்பர்கள் மத்தியிலோ உங்களின் கருத்தைச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறீர்கள். அதை அழுத்தமாகவும் சொல்கிறீர்கள். ஆனால், நீங்கள் சொன்ன கருத்து எடுபடவில்லை. நீங்கள் ஈகோ இல்லாதவராக இருந்தால், இதுபற்றிக் கவலைப்பட மாட்டீர்கள். உங்களின் கருத்தை மற்றவர்கள் பாராட்டினாலும் சரி, கிண்டல் செய்தாலும் சரி, ஏற்றுக்கொண்டாலும் சரி, கண்டுகொள்ளாவிட்டாலும் சரி.... இதனால் பாதிக்கப்படாமல் இருப்பீர்கள்.

கவிஞர் தாகூரின் வாழ்க்கையில் நடந்த சம்பவம் இது. ஒரு முறை படகில் ஏறி, யமுனை நதியைக் கடந்து கொண்டிருந்தார் தாகூர். அது இரவு நேரம். படகிலே இருந்த சின்ன அறையில் மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் தாகூர் கவிதை எழுத முற்பட்டார். ஆனால், அன்று ஏனோ தெரியவில்லை.....பிடிபடாமல் தாகூரிடமே கவிதை கண்ணாமூச்சி விளையாடியது. கடைசியில் சோர்ந்து போன தாகூர், மெழுகுவர்த்தியை அணைத்து விட்டார். மெழுகுவர்த்தியை அணைத்ததுதான் தாமதம்.... நதியும் படகும் நிலாவின் வெளிச்சத்தில் அழகாக ஒளிர்வது தெரிந்தது. இதைப் பார்த்ததும் தாகூருக்குக் கவிதை பெருக்கெடுக்க ஆரம்பித்து விட்டது.

இந்தச் சம்பவத்துக்கும் ஈகோவுக்கும் என்ன சம்பந்தம்....? ஒரு சின்ன மெழுகுவர்த்தி எப்படி நிலாவின் ஒளியையே தாகூரின் கண்ணிலிருந்து மறைத்துவிட்டதோ, அதேமாதிரித்தான் ஈகோ! நிலா என்ற சந்தோஷத்தை அது மறைத்துவிடும்!

நன்றி : சுவாமி சுகபோதானந்தா.

(தொடர்ந்து வரும்.........)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

### முரசு வாசகர்களுக்கு

ஜூலை 7 - 13ஆம் திகதி வெளியாகிய முரசில் பிரசுரமான 128ஆவது குறுக்கெழுத்துப் போட்டி தவறுதலாக பிழையான தரவுகளோடு இடம்பெற்றதை வேதனையோடு தெரியப்படுத்துகிறோம். இத்தவறின் காரணமாக குறுக்கெழுத்துப் போட்டியில் ஆர்வத்தோடு பங்கு கொள்ளும் அன்பு வாசகர்களுக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு வருந்துகிறோம். தவறைச் சுட்டிக் காட்டி தபாலட்டைகளை அனுப்பி வைத்துள்ள வாசகர்களுக்கு எமது நன்றிகள்.

### குறுக்கெழுத்துப் போட்டி 130

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | |
| 4 | | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | |
| 12 | 13 | 14 | | 15 |
| 16 | 17 | | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 |

### மேலிருந்து கீழ்

1. சுடலையில் ஏற்றப்படும் தீபம் (குழம்பியுள்ளது).
3. பெண்களிடம் இருக்கும் ஒரு குணம் (குழம்பியுள்ளது).
5. பெண்களுக்கு மட்டுமில்லாமல் ஆண்களுக்கும் இருக்க வேண்டியது.
9. பானையிலே சோறிருந்தால் பூனைகளும் இப்படி ஆடும் (குழம்பியுள்ளது).
15. குடல் புண் இருப்பவர்கள் தவிர்க்கவேண்டிய சுவை (குழம்பியுள்ளது).
18. நல்லோர் பெரியோரிடமிருந்து நாம் பெறவேண்டியது (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

1. எருமையை இப்படியும் அழைப்பர்.
5. கடல் குழம்பியுள்ளது.
8. கொஞ்சம் என்பதை இப்படியும் சொல்லலாம் (குழம்பியுள்ளது).
12. தங்கத்தைமெருகூட்டும் ஒருமுறை (குழம்பியுள்ளது).
16. உள்ளவர் இல்லாதவருக்கு கொடுப்பர் (திரும்பியுள்ளது).
18. இலங்கையில் சூர்யா என்ற பெயரில் தயாரிக்கப்படும் இந்திய தமிழ்ப்படம் (திரும்பியுள்ளது).
20. சுகன்யா தோன்றி நடிக்கும் தொடர் நாடகம் ஒன்றின் பெயர் (குழம்பியுள்ளது).

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 26.07.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-130
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# காலமெல்லாம் காதல் வாழ்க!

**சிவா** கோபத்துடன் தன் நண்பன் ராஜாவைப் பார்த்தான்.

“அப்படின்னா நீ என் தங்கையை மணம் முடிக்க மாட்டியா ராஜா.....”

“இங்க பாரு சிவா, நீ என்னை என்ன வேணும்னாலும் சொல்லு அதுமட்டும் என்னால முடியாது....”

“அப்படின்னா நீ அவளைக் காதலிக்கல்ல....

கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சத்தியம் செய்யலை....?”

“நான் அப்படி எப்போதாவது உன்கிட்ட சொன்னேனா. இல்ல உன் தங்கை உமாக்கிட்ட சொன்னேனா....”

“என்கிட்ட சொல்லலை. ஆனா உமாக்கிட்ட சொல்லியிருக்கே. அவளை நம்ப வச்சி, அவளோட வாழ்க்கையையே சின்னாபின்னமாக்கிட்டே. உயிர் நண்பன்னு நம்பி உன்னை என் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போனேன். ஆனா நீ என் தங்கச்சியோட மானத்தையே வாங்கிட்டியேடா பாவி....”

“இங்க பாரு சிவா....உனக்கு நான் மட்டும் நண்பனில்லை. யாரோ உன் தங்கச்சியை பாழ் பண்ணிட்டாங்க. நீ வீணா என் மேலே பழிபோடுறே....”

“அடப்பாவி.....நம்பிக்கைத் துரோகி....என் தங்கச்சி பொய் சொல்லமாட்டா. அவளைக் கெடுத்தவன் நீதான். உன்னை சும்மா விடமாட்டேன். அழிச்சிடுவேன். உனக்கு ரெண்டு நாள் தாரேன்.



-பாலா.சங்குபிள்ளை, ஹட்டன்.

மரியாதையா என் தங்கச்சி கழுத்துல தாலியைக் கட்டிடு. இல்லைன்னா உன் தலை இருக்காது. நான் கொலைகாரனாயிடுவேன்.”

சிவா - கண்கள் சிவக்க படபடவென பேசிவிட்டு வேகமாக நடக்க, ராஜா எதுவும் பேசாமல் அப்படியே சிலையாக நின்றான்.

ஒரு வாரம் ஓடியது.

ராஜா அந்த திருமண அழைப்பிதழை வெகுநேரமாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். உமாவுக்கும் பாலுவுக்கும் திருமணம் என்று போடப்பட்டிருந்தது. பாலு ராஜாவின் சித்தப்பாவின் மகன் - பாலுவும் சிவாவின் நெருங்கிய நண்பன்தான்.

பாலுவுக்கும் ராஜாவுக்கும் கடந்த வாரம் பெரும் வாக்குவாதம் ஏற்பட்டது.

“டேய் ராஜா என்னயிருந்தாலும் நீ செஞ்சது ரொம்ப துரோகம்டா. சிவா உன்மேல் ரொம்ப நம்பிக்கை வச்சிருந்தான். உமா உன்னை உயிரா நேசிச்சா. ஆனா நீ அவளை உயிரற்ற பயிரா வேரோடு வெட்டி சாய்ச்சிட்டியேடா. உன்னை என் தம்பின்னு சொல்லவே வெட்கப்படுறேன். நீ செஞ்ச இந்தத் துரோகத்துக்காக நிச்சயம் தண்டனையை அனுபவிப்பே....ஒரு பெண்ணை நம்ப வச்சி கழுத்தறுத்துட்டு இப்போ ஒண்ணும் தெரியாதவன் மாதிரி இருக்கியே. உனக்கு மனசாட்சியே இல்லையாடா.....”

ராஜா - எதுவுமே பேசவில்லை. பாலு கடுமையாகப் பேசிவிட்டு சென்ற பின்னும் அவன் மௌனமாகவே இருந்தான். ராஜா - அந்தத் திருமண அழைப்பிதழை மறுபடியும் பார்த்தான். அவன் கண்களிலிருந்து முதல் முறையாக கண்ணீர் பெருகியது.

“என்னை மன்னிச்சிடு சிவா. உன் தங்கையை மனதார நேசித்தது உண்மைதான். மணம் முடிக்கவும் நினைச்சது சத்தியம்தான். ஆனா ஏற்கெனவே என் முழு உடம்பையும் பரிசோதனை செஞ்ச வைத்திய அறிக்கை லேட்டாத்தானே எனக்கு கிடைச்சிச்சி. எனக்கு இரத்தப் புற்று நோயிருக்கிற விஷயம் அப்புறம்தானே தெரிஞ்சிச்சி....

முத்திப்போன இந்த நோயோட உன் தங்கையை மணம் முடிச்சா அவள் மாங்கல்யத்துக்கு ஆபத்து வரும்னு தெரிஞ்சும் நான் எப்படி உன்னை ஏமாற்றமுடியும்...காலமெல்லாம் உன்னோட கைகோர்த்துக்கிட்டு சந்தோஷமா இருக்கலாம்னு நினைச்ச என்னை கடவுள் கைவிட்டுட்டான். என்னைவிட பாலு உன் தங்கையை கண்போல காப்பான்...மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் உண்மையை யாரிடமும் சொல்லவும் முடியாமல் நான் படுற வேதனையை யார் கிட்டே சொல்லுவேன்...”

ராஜா இவ்வளவு நாளும் மனதில் அடக்கி வைத்திருந்த வேதனைகள் யாவும் வெளிப்பட ‘ஓ’ வென சத்திமிட்டு அழத் தொடங்கினான்......

*(யாவும் கற்பனை)*

# இவ்வார சிறுகதைகள்

## காதலாகி



-எஸ்.ஷாஜகான், தாராபுரம்.

**அ**ன்று அதிகாலை வேளையிலே மாதவன் சுறுசுறுப்பாக இருக்கின்றான். காரணம் தன் தங்கை சுமதியின் வரன் விடயமாக மாப்பிள்ளை வீட்டார் வரும் நேரம்....பத்துமணி என்பதால் வீட்டார் அனைவரையும் எழுப்பி..... அவரவர் பணிகளைப் பணித்து தானும் தன் வேலைகளில் மும்முரமாக இருக்கின்றான்.

எவ்வளவுதான் மும்முரமாக இருந்தாலும், தன்னால்...பழைய நினைவுகளில் இருந்து.... மீள முடியாத நிலையிலேயே நித்தம் வாழுகின்றான். ஆம்! மாதவன் பல்கலைக்கழகத்திலே ரோஜா வதனத்தைக் கொண்ட சாந்தியைக் கண்டான். அவள் மேல் அளவிலா அன்பு கொண்டான் நாளடைவில் காதலர்களாகப் பல இடங்களுக்குச் சென்று வந்தனர். இவர்கள் காதல் சரித்திரத்தில் காவியமாகா விடினும்..... கலையுக, நவயுக காதலாக இருந்தது. அந்தப் பல்கலைக்கழகமே...... அறிந்த உண்மை.......

ஆம்! காதல் ஓர் ஆஸ்துமா நோய்தான். இது மாதவனை மட்டுந்தான் தொற்றிக் கொண்டது எனலாம். ஆனால் சாந்திக்கு இது ஒரு பொழுது போக்காகத்தான் இருந்தது. பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறியதும் அவளும் தனது காதலுக்கு குட்பை சொல்லிச் சென்றது, பாவம் ஒன்றும் அறியாத மாதவனுக்குத் தெரிந்ததும் அனலில் புழுவாக துடித்தான், துவண்டான். சித்தப் பிரமை பிடித்தவன் போல அலைந்தான்.

இந்த வேதனையோடு வாழ்க்கையின் வசந்தத்தை வெறுத்த இவனுக்கு, மீண்டும் ஓர் சுனாமி வேகமாக அடித்தது, ஆம் தந்தை அழகப்பன் இந்த உலகத்தை விட்டு நீத்தார் என்றபோது. குடும்பத்தின் சுமை அவன் தலையில் சுமத்தப்பட்டு கொஞ்சம் தலையை நிமிர்ந்தான். ஏதோ பல வகையில் கஷ்டப்பட்டு செலவழித்து ஒரு வங்கியில் வேலையைப் பெற்றுக் கொண்டு தனது குடும்ப வண்டியையாவது ஓட்டுவோம் என்று தனக்கு ஓர் வாழ்க்கை தேவையில்லை என்று வாழ்ந்து வருகின்றான். சாந்தி எங்கிருக்கின்றாள், எப்படியிருக்கின்றாள் என்று எண்ணத்தில் ஒன்றுமேயறியாத மாதவன், அவள் நினைவுகளோடு காதல் என்ற வசந்தம் தன் வாழ்க்கையில் ஒளி வீசக் கூடவில்லை என்றாலும் காதலின் தூய்மையைப் போற்ற இவன் வாழ்க்கையை வேறொருத்திக்கு கொடுக்காமல் தூய்மையாக இருக்கின்றான்.

வாசலில் வாகன சத்தம் கேட்டு நினைவில் இருந்து மீண்ட மாதவன் சுறுசுறுப்பாகின்றான். தன் தங்கைக்கு நல்லதோர் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று புரோக்கர் மணியிடம் கூறியதால் அவர் கொண்டு வரும் இந்த சம்மந்தக்காரர்களைச் சந்திக்க வாசலுக்கு ஓடும் அவனுக்கு, மீண்டும் ஓர் சுனாமிதாக்கவிருப்பதை அவன் அறிந்திருக்க வில்லை.

வாசலில் சென்ற மாதவன் அவர்களை “வாருங்கோ, வாருங்கோ” என்று வாயார அழைத்தபோது, வேனில் இருந்து அனைவரும் இறங்கி உள்ளே செல்கின்றனர். கடைசியாக ஒரு பெண், குழந்தையோடு இறங்கியதை கண்டு பேய் அடித்தது போல பிரமையோடு பார்க்கின்றான். தன் இதயபூர்வ காதலுக்கு வசந்தமாக இருந்து சுனாமியாக மாறிய சாந்தி, நெற்றியில் குங்குமம் இன்றி ஓர் விதவையாக இறங்குகின்றாள். ஓஹ்! என் சாந்தியா என்று அழவேண்டும் போல இருந்தது மாதவனுக்கு.

“என்ன மாதவன் சுகமாக இருக்கின்றீரா” என்று சாந்தி கேட்டபோது, பிரமையில் இருந்த மாதவன் சற்று விடுபட்டு ஓமோம் “போங்க....உள்ளே போங்கோ” அன்று அன்பாக வேண்டி...அவனும் வீட்டினுள்ளே நுழைகின்றான்.

தற்போது மாதவனுக்கு இக்கட்டான நிலை. சாந்தி யார்? இவள் எப்படி இங்கே என்று மனதைக் குடைந்ததோடு சாந்தியின் வாழ்க்கைக்கு என்ன நடந்தது? என்ற கேள்விக் குறியோடு..... அவர்களின் பெண் பார்க்கும் படலம் நடக்கின்றது. சாந்தி ஓரமாக ஒதுங்கியிருக்கின்றாள். அவள் ஒரு விதவை இந்த மங்களகரமான காரியத்தில் முன்னிருப்பது சரியில்லை என்று நினைத்தாளோ....என்று மாதவன் மனதிலே நினைத்து சாந்தி இருக்கும் இடத்தை நோக்கிச் செல்கின்றான்.

“சாந்தி! என்ன நடந்தது உமக்கு. என்ன இந்தக் கோலம் என்று மெதுவாக கேட்டான்...” ஐயோ! மாதவன் அதை தயவு செய்து கேட்கவேண்டாம். முதலில் என்னை நீங்கள் மன்னித்துக் கொள்ளுங்கோ. நான் உங்களுக்கு பெரிய துரோகம் செய்ததற்குக் கிடைத்த தண்டனைதான் இது! என்று கூறிய சாந்தி, மாதவன் உங்கள் தங்கைக்கு வரன் சம்பந்தமாக மணி வந்த போது, உங்கள் தங்கையின் புகைப்படமும் குடும்பப் புகைப்படமும் குடுத்து இருந்தீர்கள். அதில் உங்களின் முகத்தைக் கண்ட நான்! நான், செய்த துரோகத்திற்குப் பரிகாரமாக எனது தம்பியை உங்கள் தங்கைக்குக் கொடுக்க எண்ணினேன். தயவு செய்து எனது தம்பியை நீங்கள் ஏற்றுக்கொண்டு இவர்கள் வாழ்க்கையை வசந்தமாக்க வேண்டும் என்று அன்பாக வேண்டுகின்றேன்” என்று பேசி முடித்தாள். மாதவனோ “ஆம்” என்று தலையை ஆட்டி “தயவு செய்து உங்களுக்கு என்ன நடந்தது கூறுங்கோ” என்றான்.

மாதவன் பண ஆசை கொண்ட நான், உங்களை மறந்து ஒரு பெரிய கோடீஸ்வரனுக்கு விருப்பம் தெரிவித்தேன். இறுதியில் ஒரு குழந்தை இருக்கும் போதே ஓர் விபத்தில் என் கணவர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். இதை விடுங்கள் மாதவன். நீங்கள் கல்யாணம் முடித்து விட்டீர்களா?...எத்தனை பிள்ளைகள்” என்று ஆதங்கத்தோடு கேட்டாள் சாந்தி.

“இல்லை சாந்தி! எனக்கு” காதல் என்ற புனிதத்தை சாக்கடையாக்க விருப்பமில்லை என்ற போது சாந்தி...அழுவதை அறிந்தான் மாதவன். அப்போது சாந்தியை தம்பி அழைத்தபோது எழுந்து சென்றாள்....

மாதவன் மீண்டும் ஓர் வசந்தம் வாசலுக்கு வந்ததை உணர்ந்தான். ஆம் அவன் மனநிலை இப்படி உரைத்தது. ‘சாந்தி நீர் என்னிடம் எத்தனை குழந்தை, கல்யாணம் கட்டி விட்டீரோ, என்று கேட்டீர்’ ஆம்! எனக்கு ஒரு அழகிய மனைவியும் பேபி என்ற பெண் குழந்தையும் இருக்கின்றார்கள்! நாம் மீண்டும் வசந்தத்தை நோக்கிப் பயணிக்க நீ என்னோடு வர வேண்டும், வருவாயா! சாந்தி என்று அவன் மனம் கேட்டது. சாந்தி இதை ஏற்பாளா! அவர்களுக்கு மீண்டும் வசந்தம் பூக்குமா! அப்போது வானொலியில் கும்பிட போன தெய்வம் குறுக்கே வந்ததம்மா, பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.

*(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# மருந்தும் அழிவு தரும்

தீங்கு விளைவிக்கக்கூடிய அல்லது அபாயகரமான போதைப் பொருட்களை பயன்படுத்தும் மனிதர்கள், தங்கள் முன்னே இருக்கின்ற உண்மையான உலகத்தைப் பார்க்கவே மாட்டார்கள். அவர்கள் உண்மையிலேயே நிஜ உலகின் ஈடுபாடுகளுடன் இல்லை. வாகனங்கள் செல்லுகின்ற நெடுஞ்சாலை, சாதாரணமாக இருக்கும் சூழல், வீடு ஆகிய அனைத்து இடங்களிலும் சரி, அவர்கள் உங்களுக்கு மிகவும் ஆபத்தானவர்களாகவே இருப்பார்கள். மருந்துகளையோ அல்லது போதைப் பொருட்களையோ உட்கொள்ளும் நிலையில்தான் மென்மேலும் சரியாகச் செயல்பட முடியும் அல்லது இன்னும் சற்று சுகமாக இருக்கிறது அல்லது கூடுதலான மகிழ்ச்சியாக உள்ளது என்று மனிதர்கள் தவறாக நம்பிக்கை கொள்கின்றனர். இது மற்றொரு "மனப்பிரமை" என்று கூறலாம். விரைவாகவோ அல்லது நாள் கழித்தோ, இம் மருந்துகள் யாவும், நமது உடலில் அழிவை ஏற்படுத்தும். இவ்வாறு மருந்துப் பொருட்களை உட்கொள்ளும் நபர்களை, அவற்றிலிருந்து விடுபடத் தேவையான உதவிகளையெல்லாம் அளித்து ஊக்கப்படுத்துங்கள்.

- 'மகிழ்ச்சி' எனும் நூலிலிருந்து.

**சுனாமிப் பொதுக் கட்டமைப்பினால் பணத்தைப் பகிர்ந்து தருவதற்கே இந்த அரசாங் கங்களால் முடியவில்லை. தீர்வைத் தர எப்படி ஒப்புக்கொள்ளப் போகிறார்கள்?**

-இரா.குமரேசன், கினலன் எல்ல.

சரி, தனிநாடு எடுப்பது சாத்தியம் தானென்றால், நெஞ்சில் மகசீன் கூடுகளைக் கட்டிக்கொண்டு கையில் துவக்குகளோடு நாமெல்லோரும் பதுங்கு குழிகளுக்குப் போய் விடலாம். அல்லது இன்றைய உலகச் சூழலில் இங்கே தனிநாடு சாத்தியமில்லை என்று நம்புபவர்கள், சுனாமிக் காசு, இடைக்கால சபை என்பவற்றுக்குப் பேச்சு நடத்தும் அதே சமயமே, நிரந்தரத் தீர்வுக்கான பேச்சையும் நடத்து வதற்குத் தமிழ்த்தரப்பை வற்புறுத்த வேண்டும். இரண்டும் இல்லாமல் வீர வசனங்களைப் பேசி, எழுதிக் கொண்டிருப்பவர்கள், நமது மக்களின் தலையில்தான் கொள்ளி வைத்துக் கொண்டி ருக்கிறார்கள்.

**உங்கள் விருப்பம் என்ன? வெறுப்பு என்ன?**

-நா.பிரியா, வெலிமடை.

இரண்டுக்கும் ஒரே பதில்தான் : கண்ணாடி முன் நிற்பது!

**சந்திரமுகி வென்றுவிட்டதே?**

-அ.ம.வபீஸ், மருதமுனை - 06.

ஆமாம், பெண்களைப் பற்றி சுப்பர்ஸ்டார் என்ன சொன்னாலும், கடைசிக் காலத்தில் அவருக்குக் கை கொடுப்பவர்கள் பெண்கள் தான். படையப்பாவுக்கு ரம்யா கிருஷ்ணன் என்றால், சந்திரமுகிக்கு ஜோதிகா.

**நீங்கள் வியக்கும் சாதனையாளர் யார்?**

-அஹமட் இப்ராஹீம், ஏறாவூர்.

சந்தேகமில்லாமல் மண்ணெண்ணையார் தான்! ஏகப்பிரதிநிதிகள் எல்லைக் குள்ளேயே, அவர்கள் விருப்பத்தையும் மீறி சிங்களக் கட்சி ஒன்றின் எம்.பி.யாக வென்றதும், பிறகு "உன் தலைக் கறுப்பே இங்கு தெரியக்கூடாது" என்று அவர்கள் துரத்தி விட்டதும், அவர்கள் பெயரைச் சொல்லியே கொழும்பில் எம்.பி.யாக வென்று காட்டியதும், அவர்களது கொலை மிரட்டலை யும் மீறி சிங்கப்பூரில் இருந்து கொண்டு சிங்களக் கட்சியின் ஒரேயொரு தமிழ் எம்.பி.யாகத் தொடர்வதும் சாதாரண சாதனையா!!!

**கூட்டமைப்பு எம்.பி.க்கள் பேசுவதில் ஏதாவது உங்களுக்கு விளங்குகிறதா?**

-இ.குணசீலன், யாழ்ப்பாணம்.

அவர்கள் எதையாவது சொந்தமாகப் பேசினால்தானே விளங்குவதற்கு? முஸ்லிம் அரசியல்வாதிகள் அச்சமற்ற வகையில் தங்கள் தங்கள் தரப்புகளைப் பிரதிநிதித்துவம் செய்து பேசுவதால், அச்சுறுப்பாக அவர்கள் பேசுவதைப் புரிந்துகொண்டுவிட முடிகிறது. மாறாக, ஏகப் பிரதிநிதித்துவத்தின் நிழலில் பேசுகிறவர்கள், தாங்கள் தடுமாறுவது மட்டுமல்லாமல், தமிழ்த் தரப்பையே அநீதியானதாக, பாசிஸத்தைக் கூச்சமின்றிக் கக்கும் குரலாகக் காட்டி, இனத்தைக் கீழ்மைப்படுத்தும் ஆபத்தையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். படித்த, நாகரிகம் மிக்க தமிழ்ப் பெருந்தலைகள், இதை நாசூக்காகக் கூடக் கண்டிக்காமல் எப்படி சகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் இன்னும் வியப்பாக இருக்கிறது!

**அண்மையில் பார்த்த திரைப்படம்?**

-ஆர்.உமா, கினலன், எல்ல.

கடைசியாகப் பார்த்தது அந்நியன்தான்! இத்தகைய பிரபல படங்களில் எவ்வளவு தான் குற்றச்சாட்டுகள் கண்டுபிடிக்க முடிந்தாலும், அத்தனையையும் மீறி நம் பொது அறிவில் நம்பிக்கை வைத்து, படத்தைச் செதுக்கிச் செதுக்கிப் பண்ணுகிற ஷங்கர், பாலா, சேரன், மணிரத்தினம் போன்றவர்களைக் கையெடுத்துக் கும்பிடலாம் போலத் தோன்றுகிறது - சச்சின், லண்டன், கற்க கசடற போன்ற படங்களைப் பார்த்துவிட்டு வெளியே வரும்போது!

**சுனாமி பொதுக் கட்டமைப்பினால் ஏதாவது பிரயோசனம் உண்டா?**

-மீரா முகைதீன் - ஹாலீத், ஏறாவூர் - 3ஏ.

திசைகளற்ற வெளியில் எல்லாத் திசையும் முன்னோக்கியதே!

**இந்தச் சிறிய நாட்டுக்குப் பத்துக்கு மேற்பட்ட தொலைக்காட்சி சானல்கள் தேவைதானா?**

-எஸ்.ராஜா, வத்தளை.

புதிதாக ஆங்கிலத் தொலைக்காட்சி ஒன்றி லிருந்து தமிழ் சானல் துவங்கப் போகிறதாம். புதியவை வருவது நிச்சயம் நல்லதுதான். போட்டி அதிகமாகும்போது நிகழ்ச்சிகளிலும் கவனம் அதிகரிக்கும். பலதரப்பட்ட மக்களின் ரசனைக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ப நிகழ்ச்சிகள் கிடைக்கும். மக்களின் வரவேற்பைப் பெறுவன பிழைக்கும்; பெறாதன மடிந்துவிடும். இது வளர்ச்சிதானே! பத்தல்ல, பலநூறு பூக்கள் மலரட்டும்!

**அரசு, சுஜாதா, ஹாய்மதன் போன்றவர்களை விட, சுற்றிவளைக்காமல் நேரடியாக விஷயத்துக்கு வரும் உங்கள் முறை எனக்குப் பிடித்திருக்கிறது. ஒத்துக் கொள்கி றீர்களா?**



ஐஸ்வர்யா ராய்.

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

என்னை மிகமிகத் தன்னடக்கமானவர் என்றும், சேர்த்து நீங்கள் பாராட்டுவதற்குரிய பதிலைத் தவிர வேறெதைச் சொல்ல முடியும் இதற்கு!

**காத்திருப்பவன், வெறுங்காலுடன் நீண்ட தூரம் நடக்க வேண்டி ஏற்படும்" என்ற முதுமொழி எதை உணர்த்துகிறது?**

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

ஜனாதிபதிப் பதவி ஒரு செருப்பு என்பதை.

**ஐஸ்வர்யா ராயைவிட ஸ்நேகா அழகுதானே?**

-சிஹ்னாஸ் தௌபீக், ஹுஸைனியாபுரம்.

வாருங்கள்....வாருங்கள்...நீங்களும், என்னுடைய 'கேஸ்'தானா? 'நிறம் மாறாத பூக்கள்' படம் வந்தபோது எல்லோரும் ரத்தி என்றொரு மகா அழகி நடித்திருப்பதாகச் சொன்னார்கள். எனக்கு அந்தப் படத்தில் ராதிகாதான் கொஞ்சுமொழி அஞ்சுகமாய்த் தெரிந்தார். பிறகு 'தேஸாப்' என்றொரு ஹிந்திப் படத்தில் மந்தாகினி என்ற அழகுப்புயல் அவதரித்திருப்பதாக ஊரெங்கும் சொன்னார் கள். படத்தை ஓடிப்போய்ப் பார்த்தேன். என்ன கொடுமை! அதில் எனக்கு மாதுரி தீட்சித் அல்லவா அழகான ராட்சசியாய் அவஸ்தை தந்தார்!

ம்....யோசித்துப் பார்த்தால்...அழகு என்பது அவர்களில் இல்லை; எங்களிடம்தான்!

**வாழ்க்கையில் நம்பிக்கை கொள்வதற்கு எதுவுமில்லையே?**

-ம.ருத்ரா, சின்ன செல்வகந்த.

சுயமுன்னேற்ற நூல்கள் பலவற்றை எழுதிப் புகழ்பெற்ற நார்மன் வின்சென்ட் பீல் ஒரு நண்பரோடு பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னார்:

"நாம் ஒவ்வொருவரும் கடவுள் நமக்குத் தந்த வாழ்க்கைக்காகக் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும்!"

நண்பர் சொன்னார் : "நானே எக்கச் சக்க மாய்க் கடன் வாங்கிவிட்டுத் திண்டாடிக் கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு நாளும் 50 பேராவது என்னை பணத்தைத் திருப்பித் தரச் சொல்லி துளைத்து எடுத்துக் கொண்டிருக் கிறார்கள். இந்த நிலையில் நான் கடவுளுக்கு எங்கே நன்றி சொல்வது?"

## சிந்தியா பதில்கள்

"யோசித்துப் பாருங்கள், யாருக்கும் நீங்கள் கடனைத் திருப்பிக் கொடுக்கப் போவ தில்லை. அப்படியிருக்கையில் அந்த 50 பேரில் நீங்கள் ஒருவராக இல்லாமல் போனதற்காக கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டு மல்லவா!"

**காரியக்காரனின் பேச்சு என்கிறார்களே அது எப்படி இருக்கும்?**

-அ.சுமன், நற்பிட்டிமுனை - 07.

இசைஞானி இளையராஜாவின் முன் கோபம் திரையுலக வட்டாரத்தில் வெகு பிரசித்தமானது. பல இயக்குனர்களும் அவரிடம் பாடலுக்கான சந்தர்ப்பத்தை விளக்கிவிட்டு, அவர் போட்டுக் கொடுக்கும் மெட்டை அப்படியே வைத்துக்கொள்வார்கள். மெட்டுச் சரியில்லை என்று சொல்வதில்லை. காரணம், மரியாதை கலந்த பயம்.

பயணங்கள் முடிவதில்லை, நான் பாடும் பாடல், வைதேகி காத்திருந்தாள்.... என்று தன் படங்களுக்கு ராஜாவிடமிருந்து அருமையான பாடல்களைப் பெற்றுக் கொண்டவர் இயக்குநர் ஆர்.சுந்தர்ராஜன். அவர் தனக்குத் திருப்தியில்லாத மெட்டுக்களை நிராகரித்து விட்டு, புதிய மெட்டுக்களைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள, நாசூக்காகப் பேசுவதில் கில்லாடியாக இருந்ததுதான் காரணம். ஒருமுறை இளையராஜா வாசித்துக் காட்டிய மெட்டைக் கேட்டுவிட்டு இப்படிச் சொன்னாராம். :"ட்யூன் ரொம்ப பிரமாதமா இருக்குண்ணே. ஆனா இந்த ட்யூனை நான் ஓக்கே பண்ணுனா, என்னோட ஃப்ரண்ட்ஸ்லாம் என்னை ஒரு மாதிரி கிண்டல் பண்ணுவாங்களோன்னுதான் யோசனையா இருக்கு......"

இசைஞானி சிரித்துவிட்டாராம். அதன்பிறகு அவருக்குத் திருப்தியாகும் வரை பல மெட்டுக்களைப் போட்டுக் காட்டினாராம்!

**அமெரிக்காவைக் கலங்கடித்த டோராபோரா மலைத்தொடர் நாயகன் என்ன ஆனார்? மறைந்து விட்டாரா?**

-எஸ்.சந்திரமோகன், பலாங்கொடை.

அண்மையில் லண்டனுக்கு வந்திருந்தாரே!

## இலக்கிய நயம்

# காணாவிட்டாலோ கலக்கம் - அவனை கண்டுவிட்டாலோ உள்ளம் உவக்கும்

தருவது முழடில்யன்

'ஜல் ஜல்' என்று சதங்கை ஒலி கேட்டது. திரை மெல்ல உயர்ந்தது. சபையின் கவனம் மேடைமீது குவிந்தது.

சிவப்புக் கரையிட்ட மஞ்சள் நிறச் சேலையும், மின்னும் ஆபரணங்களுமாக, கொண்டைப் பூ அசைய, பின்னல் தொடைகளில் மோதி நெளிய நடந்து வந்த சாம்பவி, மேடையின் மையத்திற்கு வந்து சபையினரைப் பார்த்தபடி நின்றாள்.

கண்கள் சபை முழுவதையும் சில விநாடிகளில் துழாவிச் சோர்ந்தன. உயிர்ப் பிழந்து சோகம் குடியேறிற்று. குருவின் பாதம் தொட்டு வணங்கி, அரை மண்டியில் நின்றாள். ஆபரணங்களின் கற்களும், சேலையின் பொன்னிழைகளும் மின்னு வதற்குச் சமானமாக அவள் கண்களும் பளபளத்து மின்னின.

ஐந்தாம் வரிசையில் அமர்ந்திருந்த தோழி பாவனியை அவள் கண்கள் சந்தித்து ஏதோ வினவின. அவள், 'தளராதே, வந்து விடுவான்' என்பது போலச் சைகை செய்து உற்சாகமூட்டும் பாவனையில் கட்டை விரலை உயர்த்திக் காட்டினாள்.

சாம்பவியின் முகம் மேலும் கூம்பியது. கால்கள் துவள்வது போல உணர்ந்தாள். எதிர் பார்ப்பு எல்லாம் இல்லாமலாகி, இதை ஒப் பேற்றி முடிப்பேனா என்று ஐயம் கொள்ளத் துவங்கினாள்.

சபை எதுவுமறியாது அவள் உடலையே வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி மௌனம் பரப்பியிருந்தது.

கண்கள் அசைவற்று நிற்க, சாம்பவி சிற்பம் போலத்தான் இருந்தாள்.

தம்புராவின் சுருதி, மண்டபத்தைக் கனக்கச் செய்துகொண்டிருந்தது.

முதல் ஜதி ஒலித்தபோது, அவள் கரு விழிகள் மட்டும் அசைந்தன. மேடை உயிர்கொண்டது.

ஜதிச் சொல் தொடர, வலது காலை குத்தடவாக, அதிராமல் தட்டினாள். சதங்கை 'ஜல்' என்றது.

கண்களும் கழுத்தும் தாளத்திற்கு ஏற்ப அசைய ஆரம்பித்தன. கைகளும் கால்களும் தன்னிச்சையாக ஜதிக்கேற்ப அபிநயித்தன. அவள் அனுமதி பெறாமலே அவளுடம்பு மெல்ல சுழன்றாட ஆரம்பித்தது.



மனம் அவள் உடம்பைப் பின்தொடர முடியாமல் தத்தளித்தது. பழக்க சுபாவத்தில், தன் உடலில் கூடிய லாவகமும், கைகள் வழியாகச் சென்று அர்த்தங்களும் அவளுக்கு வியப்பைத் தந்து கொண்டிருந்தன. தானா ஆடிக்கொண்டி ருக்கிறோம்? என்ற சந்தேகத்துடனேயே ஆடிக்கொண்டிருந்தாள். அவளுக்குள் பெருகிய அதிருப்தியே உத் வேகமூட்டி அவளை ஆவேசமாக இயக்கியது. ஒவ்வொரு முத்திரையிலும், கரணத்திலும் குறையிருப் பதை உணர்ந்தபடியே, உடலை அதன் போக்கில் ஆடவிட்டு, சபையை விழிகளால் துழாவிச் சோர்ந்தாள்.

ஒரு வழியாக வர்ணம் ஆடி முடிந்ததும் சபையை வணங்கிவிட்டுப் பின்னகர்ந்தாள். மண்டபம் உற்சாகக் கரவொலியெழுப்பியது. திரை இறங்கியது.

மேடைக்குப் பின்புறம் மூச்சு வாங்கப் போய் நின்றாள். நடன ஆசிரியை அவள் கைகளைப் பற்றி, பாராட்டுதலாக எதையோ சொன்னார். தான் நன்றாக ஆடினேனா என்பதை அவளுக்கு நம்ப முடியவில்லை. மீதியையும் நன்றாக ஆடி முடித்து விட வேண்டும் என்ற பெருமிதத்தோடு ஆசிரியை அவளை மீண்டும் மேடைக்கனுப்ப விரைந்தார்.

சாம்பவி மறுபடி மேடைக்கு வந்தாள்.

திரை உயர்ந்தது.

ஸ்தானக நிலையில் கால்கள் விரிந்தி ருக்க, பரத உடை மஞ்சள் மலராக விரிந்தி ருந்தது. கைகள் அஞ்சலியாகக் குவிந்தி ருந்தன.

கண்கள் தோழியைத் தேடின. பாவனி விழிகளால் மண்டப வாசல் பகுதியைக் காட்டினாள்.

அங்கே -

கைகளை நெஞ்சுக்குக் குறுக்காகக் கட்டியபடி அவன் நின்றான். முகத்தில் மகிழ்ச்சியை வெளிப்படுத்து கிறானா, கேலி செய்கிறானா என்பதைக் கண்டுபிடிக்க முடியாதபடி எப்போதும்போல புன்னகை நெளிந்திருந்தது.

ஜதி ஆரம்பித்திருந்தது. சாம்பவிக்கு கால்கள் பரபரத்தன. இதயம் எம்பி மேலண்ணத்தை இடித்து அவளைத் தூக்கிச் சென்றுவிடும் போல் தோன்றியது.

கால்களை மெல்லத் தட்டினாள். சபா வந்தனம் செய்தாள். தாளம் எழுந்தது. அவள் உடல் மேடையில் மிதந்தது. செம் பஞ்சுக் குழம்பு பூசப்பட்ட விரல்கள் குவிந் தன. பிறகு அகன்று மலர்ந்த பூவாகின.

மனதின் உவகையும் முகத்தில் பூத்தது. சாம்பவி தன் உடல் பற்றிய பிரக்ஞையை இழந்தாள். தன் அசைவுகளால் அரங்கை நிரப்பி, மஞ்சள் அலையாக எங்கும் வீசினாள்.

ஒரு பறவையின் இறகு சுழன்று சுழன்று அலைவது போல அந்தரத்தில் மிதந்தாள். அவளே மேடையாகி ஆடினாள். மஞ்சள் குருவியாகச் சிறகடித்து, தலை சரித்து, ஒயிலாகத் திரும்பி காற்றில் தாவினாள். மனதுக்குள் எழுந்த உற்சாகம், அதன் எண்ணங்கள் வழியே உடலைச் செல்ல விட்டது. பாட்டும் தாளமும் அவள் அசைவு கள் மீது காற்றுப் போல படர்ந்தன. சாம்பவி வானில் சஞ்சரித்தாள்.

மண்டபம் அதிர்ந்த கரவொலியின் நடுவே, அவள் மீண்டும் தரையில் இறங்கி நின்றாள். கரங் கூப்பி மண்டியிட்டாள். திரை இறங்கியது.

மேடைக்குப் பின்புறம் ஓடி வந்தாள். பாவனியுடன் அவன் நின்றிருந்தான். முகத்தில் அதே குறும்பு இழை! இவளுக்கு நெஞ்சு படபடத்தது. எங்கே அழுதுவிடு வோமோ எனப் பயந்தாள்.

பாவனியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

பாவனி சிரித்தாள். "தலைவரே! உங் களுக்கு மட்டும்தான் மலர்ந்த பூவைப்போல விளங்கும் இவள் அழகின் மலர்ச்சியை மட்டும்தான் காணுகிற பாக்கியம். எங்களுக் கெல்லாம் கூம்பி ஒளியிழந்த வாடல் பூவை யும் பார்க்க வேண்டியிருக்கிறது" என்றாள்.

அவன் சிரிப்பு மாறாமல் நின்றான். சாம்பவி தோழியின் கையைக் கிள்ளினாள்.

"ஆ" எனக் கையை உதறிக்கொண்ட பாவனி, "வாடி உதிர்ந்த மலர் மீண்டும் பூக்கும் அதிசயத்தை இங்குதான் எல்லோ ரும் பார்க்க முடியும். இதோ, சுனையிலுள்ள குவளை மலரைப் போல பழைய அழகைப் பெற்று விட்டாள் என் தலைவி!" என்று சிரித்தாள்.

***கொன்றைப் பூவிற் பசந்த வுண்கண்***
***குன்றக நெடுஞ்சுனைக் குவளை போலத்***
***தொல்கவின் பெற்றன விவட்கே***
***வெல்போர் வியனொடும் பாசறை நீடிய***
***வயமான் றோன்றனீ வந்தமாறே.***

*(ஐங்குறுநூறு : 500)*




**1983ஆம்** வருடம் இங்கிலாந்து அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் இலண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஒன்றின் போது, 40 ஓட்டங்களைப் பெற்றிருந்த லெனார்ட் ஹட்ன், எல்.ஓ.ப்ளிட்வுட் - ஸ்மித் வீசிய பந்தொன்றுக்கு முகங்கொடுத்தார். இதன் போது மிக இலகுவாக ஸ்டெம்ப் செய்து ஹட்னை ஆட்டமிழக்கச் சந்தர்ப்பம் அதிகம் இருந்த போதும் விக்கெட் காப்பாளர் பீ.ஏ.பர்னாட் தவறி விட்டார்: இச் சந்தர்ப்பத்தின் பின்னர் ஆட்டமிழக்காமல் தொடர்ந்து களத்தில் நின்று விளையாடிய அவர், 364 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னரே ஆட்டமிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே நேரம் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி களின் போது ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக இருந்து 11ஆம் இலக்க வீரர் வரையில் அனைத்து வீரர்களுக்கான ஸ்தானங்களில் இருந்தும் துடுப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள இரண்டு வீரர்கள், இங்கிலாந்து அணியில் இருந்த வில்பிரட் ரோட்ஸ் மற்றும் இந்தியாவின் வினுமன் காட் ஆகியோராவர்.

*வில்பிரட் ரோட்ஸ் (இங்கிலாந்து):-*

1877, ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதி பிறந்தவர். மித வேகப் பந்துவீச்சாளர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் இருந்த சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக இவர் விளங்கினார்.

1899ஆம் வருடம் முதல் 1929-30ஆம் வருடம் வரையில் 58 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டுள்ள இவர், இதன் போது 2,325 (சராசரி: 30.19) ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார். பந்து வீச்சில் 127 (சராசரி: 26.96) விக்கெட்டுகளைக் கைப்பற்றிக் கொண்டுள்ளார்.

முதல்தரப் போட்டிகளில் ரோட்ஸ் 4,204 விக்கெட்டுகளைக் கைப்பற்றிக் கொண்டுள் ளதுடன் இது, இதுவரையில் முறியடிக்கப்படாத சாதனையாகவே உள்ளது.

*வினுமன்காட் (இந்தியா):*

1917ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி பிறந்துள்ளார். வேகப்பந்து வீச்சாளராக தனது கிரிக்கெட் வரலாற்றை ஆரம்பித்த இவர், பின்னர் சிறந்த இடது கை சுழற்பந்து வீச்சாளராக விளங்கினார். இதே நேரம் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் இவர் திகழ்ந்துள்ளார்.

1955-56களில் நியூசிலாந்து அணிக் கெதிராக மெட்ராஸில் வைத்து பன்கஜ் ரோயுடன் இணைந்து முதலாவது விக்கெட்டுக் காக 413 இணை ஓட்டங்களைப் பெற்று உலக சாதனை படைத்துள்ளார்.

1946ஆம் வருடம் முதல் 1958-59ஆம் வருடங்கள் வரை 44 டெஸ்ட் போட்டிகளில் பங்குகொண்டுள்ள வினுமன் காட் 2,109 (சராசரி: 31.47) ஓட்டங்களையும் 162 (சராசரி: 32.32) விக்கெட்டுகளையும் பெற்றுக் கொண்டுள்ளார். இங்கிலாந்து அணி சார்பில் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள ஜொனீ பிரிங்ஸ் எனும் மித வேகப் பந்து வீச்சாளர் ஒரு தினத்தில் 15 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இங்கிலாந்து அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையில் இப் போட்டி 1888-89 களில் கேப்டவுனில் வைத்து நடைபெற்றது.

இதன் போது எதிர்த்தரப்பினருக்கு 28 ஓட்டங்களை மாத்திரமே வழங்கிய ஜொனீ 15 விக்கெட்டுகளைக் கைப்பற்றிக் கொண் டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஓர் அணியில் 15 பேர் வீதம் விளையாடிய இப் போட்டியின் போது 14 வீரர்கள் பந்து விக்கெட்டில் மோதியும் ஒருவர் விக்கெட்டை மறைத்தும் ஆட்டமிழந்துள்ளனர்.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அந்தள வுக்குப் புகழ் பெற்ற வீரராக இவரது பெயர் குறிப்பிடப்படவில்லை. அதே போன்று அவர் காட்டிய திறமைகளும் கூட மறைந்து போயுள் ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்த மிகச் சிறந்த பந்து வீச்சாளராக இவரைக் குறிப்பிட இயலும்.

1862ஆம் வருடம் ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி பிறந்த ஜொனீ பிரிங்ஸ், 1884-85களில் இருந்து 1899ஆம் வருடம் வரையில் 33 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 118 விக்கெட்டுகளைக் கைப்பற்றிக் கொண்டுள்ளார். (சராசரி: 17.75 ஆகும்.) இவரது சிறந்த பந்து வீச்சு 11 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளாகும்.

லென்கெஷயர் மாநில அணிக்காக 535 முதல் தரப் போட்டிகளில் கலந்துகொண்ட இவர், இதன் போது 2, 221 விக்கெட்டுகளைக் கைப்பற்றிக் கொண்டுள்ளார். (சராசரி: 15.95). 39ஆவது வயதில் இவர் 1902, ஜனவரி மாதம் 11ஆம் திகதி அகால மரணமடைந்தமை வேதனைக்குரிய விடயமாகும்.

**- மைந்தன் -**

# ஸ்போர்ட்ஸ்

*ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்*


## லாரா இல்லை; முரளி கவலை



**நீ**ண்ட நாட்களுக்குப் பின் கிரிக்கெட் மைதானத்தில் இறங்கியுள்ள இலங்கை அணியின் நட்சத்திரப் பந்து வீச்சாளர் முரளிதரன் தற்போது மேற்கிந்திய ஏ அணிக்கெதிராக டெஸ்ட் போட்டிகளில் தனது பழைய திறமைகளை காட்டி வருகிறார். இப்போட்டிகளில் முரளிதரன் பெரிதும் எதிர்பார்த்த மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் பிரைன் லாரா பங்குபற்றாதது பெரும் கவலையைத் தனக்களித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், பிரைன் லாரா எந்த பந்துக்கும் முகம் கொடுக்க அஞ்சுவதில்லை. இதனால் எல்லா பந்துவீச்சாளர்களும் லாராவுக்குப் பந்து வீசுவதைப் பெரும் சவாலாகவே கருதுகிறார்கள். அந்த வகையில் நானும் லாராவுக்குப் பந்து வீசுவதையே பெரிதும் விரும்பினேன்.




ஆயினும் லாரா போட்டிகளில் பங்குபெறாதது பெரியதொரு ஏமாற்றமே என்றார். முரளிதரன் இறுதியாக 2004ஆம் ஆண்டே லாராவுக்கு பந்து வீசினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் சச்சின் டெண்டுல்கரை விட மூத்த விளையாட்டு வீரரான லாரா ஒருநாள் போட்டிகளில் தனது முழுத் திறமைகளை காட்டுவதற்காக டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஒதுங்கியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதேவேளை முரளிதரன் கடந்த 8 வருடங்களாக டெண்டுல்கருக்குக் கூட டெஸ்ட் போட்டிகளில் பந்து வீசவில்லை என்பதும் ஒரு தகவல். நீண்ட இடைவேளைக்குப் பின் அணியில் இடம்பெற்ற முரளிதரன் தனது துஷ்ரா



பந்துவீச்சுகளை தற்போது அதிகம் பயன்படுத்துவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.


## கங்குலி மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படுவாரா?



**பல** சர்ச்சைகளில் மாட்டிக் கொண்டு தவிக்கும் இந்திய அணிக்கு மற்றொரு பிரச்சினையாக சவ்ரவ் கங்குலி உருவெடுத்துள்ளார். பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டிகளில் குறிப்பிட்ட நேரத்திற்கு அதிகமாகப் பந்து வீச எடுத்துக்கொண்டமைக்காக சர்வதேச ஒரு நாள் போட்டிகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்த கங்குலியின் மனுவானது இன்னும் ஐ.சி.சி.யினால் பரிசீலனை செய்யப்பட்டுக்கொண்டே இருக்கிறது. இதனால் கங்குலி அண்மைக் காலமாக போட்டிகளில் பங்குபற்றுவதில்லை. ஜூலை மாதம் 30ஆம் திகதி தொடங்கவுள்ள இலங்கை, இந்தியா, மேற்கிந்திய தீவுகள் பங்குபற்றும் முக்கோண ஒரு நாள் போட்டித் தொடரில் அவருக்கு விளையாட இடம் கிடைக்கவில்லை. ஆயினும் தொடருக்காகத் தெரிவுசெய்யப்பட்ட அணியில் 14ஆவது பெயராக கங்குலியின் பெயர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் கங்குலி மீண்டும் அணிக்குள் சேர்த்துக்கொள்ளப்படுவது - சந்தேகத்துக்குரிய விடயமே.

## இந்திய அணியில் புதிய முகங்கள்

இந்திய அணியில் புதிய முகங்கள் வருவதும் போவதும் சகஜமாகி விட்டது. அந்த வகையில் முக்கோண ஒருநாள் தொடர் போட்டிக்காகத் தெரிவுசெய்யப்பட்ட அணியில் இரண்டு இளம் வீரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் சுரேஷ் ரெனியா, வேணுகோபால் ரேயோன் ஆகியவர்கள். இவர்கள் உள்ளூர் அணிகளில் தமது திறமைகளை வெளிக்காட்டியதற்காகவே சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்கள். கங்குலி இல்லாத இடத்துக்கு இவர்களைப் பயிற்றுவிக்கும் இன்னொரு உள்நோக்கமும் உள்ளதாம். ரெனியா (18 வயது) இவர் ஒரு இடது கை துடுப்பாட்ட வீரர். அது மட்டுமல்லாது சுழற் பந்துவீச்சாளரும் கூட. ரேயோன் (23 வயது) இவர் சிறந்த களத்தடுப்பாளர். இதேவேளை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரும் இப்போட்டிகளில் பங்குபற்றமாட்டாரென்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்காக அஜித்



அகர்கார், தினேஷ் மொங்கியா மற்றும் முரளி கார்த்திக் ஆகியோர் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்கள். இவ்வணியின் தலைவராக ராகுல்டிராவிட்டும், துணைத் தலைவராக வீரேந்திர ஷேவாக்கும் நியமிக்கப்பட்டுள்ளமையும் சொல்லத்தக்க ஒன்று.

## எந்தக் கிழமையில் பிறந்தீர்கள்?

**மி**ன்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு, இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப, விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக எண் அருள் ஞான ஜோதி சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலாபலன்களாகும்.

சொல்பவர் :
ஜோதிட அறிஞர், பேராசிரியர்.
**டாக்டர் பீ.கே. சாமி** J.D.G.A.N., J.P.
**(சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

## ஆதிக்கம் 9: பிறந்த கிழமை ஞாயிறு

**பி**ரகாசமும் சிறப்பும் நிறைந்த ஞாயிற்றுக்கிழமையில் பிறந்திருக்கின்றீர்கள். ஐந்து விரல்கள் ஒரு கைக்கோ, காலுக்கோ உரியன. அத்தனை விரல்களும் பெறுமதியானவை. ஒரு விரல் குறைந்தாலும் ஒரு காரியத்தை சுலபமாகச் செய்ய முடியுமா? அந்தளவிற்குச் சிறப்புப் பொருந்திய எண் 9 இல் பிறந்துள்ள நீங்கள் எப்படிப்பட்ட சிக்கலான காரியமாக இருந்தாலும் அதனை இலகுவாகத் தீர்த்து வைக்கும் வல்லமை உங்களுக்கு இருக்கிறது. நீதி செலுத்துவதிலும் சமாதானத்தை நிலை நாட்டுவதிலும் சிறப்புடையவராக இருப்பீர்கள். பிரச்சினைகளைத் தீர்த்துச் சமரசம் செய்தல், வழக்குக்குரிய காரியங்களுக்குத் தீர்ப்பு வழங்குதல் போன்ற உயர்ந்த அறிவு உங்களுக்குண்டு. பிரச்சினைகளை அணுகும் முறையும், அதனை ஆலோசித்துப் பரீட்சித்து தீர்த்து வைக்கும் குணமும் உடையவர் நீங்கள்.

நீங்கள் ஒரு தீர்ப்பு வழங்கினால், அது விமர்சனத்துக் குரியதாகாது. ஒரு சாராரை மட்டும் திருப்திப்படுத்தும் குறையை உடையதாக இருக்காது. நீங்கள் வழங்கும் தீர்ப்பை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள்.

எந்த வகையான துன்ப நிலையாக இருந்தாலும் சரி, எப்படிப்பட்ட சிக்கலாக இருந்தாலும் சரி, எப்படியான சிரமம் உடைய காரியமானாலும் சரி, சாமர்த்தியமாக அவற்றைக் கையாள்வீர்கள், வெற்றியடைவீர்கள். ஒரு பிரச்சினைக்குரிய காரியத்தைத் தீர்ப்பதில் அல்லது தீர்ப்பு வழங்குவதில் தான்தோன்றித்தனமான முடிவு எடுக்கமாட்டீர்கள். அது சம்பந்தமான அறிஞர்களின் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கேட்டுத் தெளிவு பெற்ற பின்னர்தான் தீர்ப்பு வழங்குவீர்கள்.

பெரிய தொழிற்சாலைகளுக்கு அதிபதியாகவும் அல்லது உயர் அதிகாரிகளாகவும் இருந்து செயற்படுவீர்கள். அத்தோடு உங்களுக்கென்று ஒரு மக்கள் கூட்டம் இருக்கும். அவர்களை வழி நடத்துபவராகவும், அவர்களுக்கு ஆலோசனைகளும் அறிவுரைகளும் வழங்குபவராகவும் இருப்பீர்கள். தலைவர் என்ற பொறுப்பில் இருந்து உங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யக்கூடிய திறன் வாய்ந்தவர் நீங்கள்.

நீதிபதிகளாக இருந்து மக்களுக்குச் சேவை செய்யக் கூடிய பாக்கியம் பெற்றவர் நீங்கள். உங்களுக்குக் கீழ் பல பேர்கள் வேலை செய்வார்கள். அவர்களைப் பண்போடும் அன்போடும் நடத்துவீர்கள். குற்றம் செய்பவர் எவராக இருந்தாலும் உரிய தண்டனை கொடுப்பீர்கள். அத்தோடு அவர்களுக்கு அறிவுரை கூறித் திருத்துவீர்கள். தொழி லாளர்கள் உங்கள் மீது அதிக அன்பும் மரியாதையும் வைத்திருப்பார்கள். 25 வயது ஆரம்ப காலத்தில் இருந்து தொழிலும் வருமானமும் ஆரம்பமாகும். 30 வயதிற்குள் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். 30 - 45 வயதுவரை வருமானம் தாராளமாகக் கிடைக்கும். இதனால் பல வசதிகளையும் பெற்றுச் சுகமாக வாழ்க்கை நடத்துவீர்கள். 46-55 வயதுவரை உங்கள் வருமானம் மேலும் அதிகரிக்கும். 56 வயதில் மிகக் கூடிய பணத்தொகை உங்கள் கைக்கு வரும். இதைக் கொண்டு ஆயுள்வரை எந்தக் குறையும் இல்லாமல் வாழ்வீர்கள்.

7, 27, 48 வயதுகளில் கண்டம் ஏற்படும். ஆனால் உங்கள் உயிருக்குத் தீங்கு ஏற்படாது. வாயு சம்பந்தப்பட்ட உடலை உடைய நீங்கள் வாயுத்தொல்லைகளை எதிர்நோக்க வேண்டிவரும். இது அடிக்கடி வரும். பின்னர் குணமாகும். இந்த நிலை 48 வயது வரைக்கும் தொடரும். ஆனால் உயிருக்கு எந்தவிதமான தீங்கும் நேராது. அதனால், இது பற்றிப் பயப்படத் தேவையில்லை. 30 வயதிலிருந்தே நீங்கள் வாயுவை ஏற்படுத்தாத உணவுகளைச் சாப்பிட வேண்டும். ஏலக்காய், சீரகம், சுக்கு, நெல்லிக்காய், பெருங்காயம், மிளகு, வெள்ளைப் பூண்டு, கத்தரிக்காய், முருங்கைக்காய் போன்றவற்றை நீங்கள் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் பிறந்த எண் 9 ஆக இருந்தாலும் உங்களுக்கு அதிர்ஷ்டத்தைத் தருகின்ற எண் ஒன்று. மாதத்தில் வருகின்ற 1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் முக்கியமான நல்ல காரியங்களை வைத்துக்கொள்ளுங்கள். இந்தத் தினங்கள் நீங்கள் பிறந்த ஞாயிற்றுக்கிழமைகளில் வந்தால் அதிர்ஷ்டம் பன்மடங்காகும்.

வெள்ளை நிற ஆடை அணியுங்கள். இந்த நிறந்தான் உங்களுக்கு அதிர்ஷ்டமானதும் பாதுகாப்பானதும் ஆகும். வட்டமான பச்சைக் கல் பதித்த தங்க மோதிரம் அணியுங்கள். வாழ்க்கையில் அதிகமான வெற்றியினை நீங்கள் பெறமுடியும். நீங்கள் வசிக்கின்ற வீட்டின் எண் எதுவாக இருந்தாலும் உங்களுக்கு அதிர்ஷ்டமானதே. சுகமாகவும் சந்தோசமாகவும் வாழ்வீர்கள்.

ஆகவே, ஆதிக்க எண் 9 ஐயும் ஞாயிற்றுக்கிழமை யினைப் பிறந்த தினமாகவும் கொண்டுள்ள சிறப்புக்குரிய நீங்கள், வாழ்வில் அனைத்து சுகங்களையும் அனுபவிக்க என் நல்லாசிகள்.

**நீதி செலுத்தும் யோகத்தில் ஞாயிறில் சோதிட எண் ஒன்பதில் பிறந்தீர். சாதிப்பீர். சுகபோகம் அனுபவித்தே வெற்றிகள் பெறுவீர்!**

# உலகை வியக்க வைத்தவர்கள்

# பிளேட்டோ (கி.மு. 427 - கி.மு. 347)

**சென்றவாரத் தொடர்ச்சி**

இந்த உயர் கல்வியில் வழக்கமான கல்விப் பாடங்கள் மட்டுமின்றி "தத்துவ" ஆராய்ச்சியும் சேர்க்கப்பட வேண்டும். "தத்துவ ஆராய்ச்சி" என்று பிளேட்டோ குறிப்பிட்டது உன்னத வடிவங்களில் மெய்விளக்கவியல் கோட்பாட்டினை ஆராய்வதாகும்.

35ஆம் வயதில், கோட்பாட்டுத் தத்துவங்களில் தமது புலமையைத் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தியவர்களுக்கு மேலும் 15 ஆண்டுகள் நடைமுறைச் செயல்முறை அனுபவப் பயிற்சியளிக்க வேண்டும். ஏட்டறிவை உலகியலில் பயன்படுத்தும் திறனைக் காட்டுகிறவர்கள் மட்டுமே காப்பாளர் வர்க்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். மேலும், பொதுநலத்தில் அக்கறை கொண்டவர்களெனத் திட்டவட்டமாக மெய்ப்பித்துக் காட்டுகின்றவர்கள் தாம் காப்பாளர்களாக ஆக வேண்டும்.

காப்பாளர் வர்க்கத்தில் உறுப்பினராவதை எல்லோரும் விரும்ப மாட்டார்கள். காப்பாளர் செல்வந்தர்களாக இருக்கலாகாது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு மட்டுமே சொந்தமாக சொத்து வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். அவர்கள் சொந்தமாக நிலமோ, தனி இல்லங்களோ வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட ஊதியத்தை (அது பெருந்தொகையாக இருக்காது) பெறுவார்கள். அவர்கள் (சொந்தமாகத் தங்கமோ, வெள்ளியோ வைத்துக் கொள்ளலாகாது) காப்பாளர் வர்க்கத்தின் உறுப்பினர்கள் தனியாகக் குடும்பங்கள் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் ஒருங்கிணைந்து உணவு உண்ண வேண்டும். பொதுவாக துணைவியை அல்லது துணைவரைத்தான் கொண்டிருக்க வேண்டும். இந்தத் "தத்துவ வேந்தர்"களுக்கு (Philosopher King) இழப்பீடாகக் கிடைப்பது பொருட் செல்வம் அன்று. மாறாக, பொது மக்களுக்குத் தொண்டு செய்யும் மன நிறைவேயாகும். உன்னதக் குடியரசு பற்றி பிளேட்டோவின் கருத்தின் சுருக்கம் இதுதான்:

"குடியரசு" நூல், பல நூற்றாண்டுகளாக, மிகப் பரவலாகப் படிக்கப்பட்டு வந்திருக்கிறது. எனினும், அதில் விவரிக்கப்பட்டுள்ள அரசியல் அமைப்பு முறையை, உள்ளப்படியான குடியியல் அரசுக்கான ஒரு முன்மாதிரியாக யாரும் கொள்ளவில்லை. பிளேட்டோவின் காலத்திற்கும், இப்போதைக்கும் இடைப்பட்ட இடைவெளிக் காலத்தின் பெரும்பகுதியில், பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளைப் பரம்பரை முடியாட்சிகளே ஆண்டு வந்திருக்கின்றன. அண்மை நூற்றாண்டுகளில் பல நாடுகள் மக்களாட்சி அரசு முறையை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. ஹிட்லர், முசோலினி ஆகியோருடையதைப் போன்ற இராணுவச் சரிவாதிகார ஆட்சி அல்லது கட்சிவாத கொடுங்கோல் ஆட்சிகளும் ஏற்பட்டுள்ளன. அந்த அரசு முறைகளில் - எந்த ஒரு அரசியல் கட்சியும் பிளேட்டோவின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டதில்லை. கார்ல் மார்க்சின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஓர் அரசியல் இயக்கம் தோன்றியது போல், பிளேட்டோவின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட அரசியல் இயக்கம் எதுவும் தோன்றவில்லை. அப்படியானால் பிளேட்டோவின் படைப்புகள் மதித்துப் போற்றப்பட்டாலும் நடைமுறையில் அடியோடு புறக்கணிக்கப்பட்டன என்ற முடிவுக்கு நாம் வர முடியுமா? முடியாது என்றே நான் கருதுகிறேன்.

ஐரோப்பாவிலுள்ள குடியியல் அரசு எதுவும் பிளேட்டோவின் உன்னதக் குடியரசை நேரடியாக முன் மாதிரியாகக் கொண்டிருக்கவில்லை என்பது உண்மைதான். ஆயினும், மத்திய காலத்து ஐரோப்பாவிலிருந்த கத்தோலிக்கத் திருச்சபையின் நிலைக்கும், பிளேட்டோவின் காப்பாளர் வர்க்கத்திற்கும் இடையே மிகுந்த ஒப்புமை காணப்படுவதை இங்கு கவனிக்க வேண்டும். மத்திய காலத்துத் திருச்சபை, தாமே நெடுநாள் அதிகாரத்தில் நீடிக்கும் உயர்ந்தோர் குழாமை (Elite) கொண்டிருந்தது. இதன் உறுப்பினர்கள், எப்பொழுதும் அதிகாரமுறைத் தத்துவத்தில் பயிற்சி பெற்றார்கள். கொள்கையளவில், எல்லா ஆண்களும் அவர்களின் குடும்பப் பின்னணி எதுவாக இருந்தாலும் சமய குருவாக ஆவதற்குத் தகுதியுடையவர்களாக இருந்தார்கள். (ஆனால், பெண்கள் இதிலிருந்து விலக்கப்பட்டிருந்தார்கள்). கொள்கையளவில் சமய குருவுக்குக் குடும்பம் கிடையாது. தமது சொந்த செல்வத்தைப் பெருக்குவதில் அக்கறை கொள்வதைவிட பொது மக்களின் நலனிலேயே அவர்கள் அக்கறை காட்ட வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தது.

சோவியத் ஒன்றியத்தின் பொதுவுடமைக் கட்சியும் பிளேட்டோவின் உன்னதக் குடியரசின் காப்பாளர் வர்க்கத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுவதுண்டு. பொதுவுடமைக் கட்சியிலும், தாமே ஆட்சியில் நிலைத்து நீடிக்கும் ஒரு குழாம் அதிகாரம் செலுத்துகிறது. அந்தக் குழாத்தின் உறுப்பினர்களும், அதிகார முறைத் தத்துவத்தில் பயிற்சி பெற்றவர்களாக இருக்கின்றார்கள்.

அமெரிக்க அரசின் கட்டமைப்பில் கூட பிளேட்டோவின் கொள்கைகள் செல்வாக்குப் பெற்றிருந்தன. அமெரிக்க அரசமைப்பு மாநாட்டில் பங்கு கொண்ட பல உறுப்பினர்கள், பிளேட்டோவின் அரசியல் கொள்கைகளை நன்கறிந்திருந்தார்கள். மக்களின் விருப்பத்தைக் கண்டறிந்து, அதற்குச் செயல் விளைவு அளிப்பதுதான் அமெரிக்க அரசமைப்பின் குறிக்கோளாக இருந்தது. அதே சமயம், நாட்டை ஆள்வதற்கு மிகச் சிறந்த அறிவும் திறமையும் வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதையும், அது தனது



நோக்கமாகக் கொண்டிருந்தது.

பிளேட்டோவின் செல்வாக்கு காலங்காலமாகப் பரந்துபட்டதாகவும், ஊடுருவி நிலவுவதாகவும் இருந்த போதிலும், அவருடைய செல்வாக்கு நேரடியாக அல்லாமல் மறைநுட்பமாகவே நிலவி வந்துள்ளது. அவரது அரசியல் கோட்பாடுகளுடன் சேர்ந்து அறவியல், மெய் விளக்கவியல் பற்றிய அவரது விவாதங்களும், பிற்காலத் தத்துவஞானிகள் பலர் மீது செல்வாக்குச் செலுத்தியுள்ளன. இந்தப் பட்டியலில், அரிஸ்டோட்டிலுக்கு மிகவும் பிற்பட்டு இடம் பெற்றிருக்கிறார் என்றால், அதற்கு முதன்மையான காரணம், அரிஸ்டோட்டில் ஒரு முக்கியமான விஞ்ஞானியாகவும், அதே சமயம் ஒரு தத்துவ ஞானியாகவும் திகழ்ந்தார் என்பதேயாகும். அதே நேரத்தில் ஜான் லாக், தாமஸ் ஜெ·பர்சன், வால்ட்டேர் போன்ற சிந்தனையாளர்களுக்கு முன்னதாக இவருக்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது. காரணம், அவர்களுடைய அரசியல் எழுத்துக்கள் இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகள் மட்டுமே உலகின் மீது தாக்குறவை ஏற்படுத்தின. ஆனால், பிளேட்டொவின் செல்வாக்கு 23 நூற்றாண்டுகளுக்கு மேலாக நிலைபெற்றுள்ளது.

**அடுத்தவாரம் ஜான் டால்டன் வியக்க வைப்பார்**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



> நான் சொல்வ தெல்லாம் பொய்.
> பொய்யைத் தவிர
> வேறொன்றுமில்லை
> *-காதில பூ கந்தசாமி-*

*வணக்கமுங்கோ!*

**போன** வாரம் சூப்பர் பேட்டியெண்டு போன் போட்டு வாழ்த்தின வாசகப் பெருமக்களுக்கு கா.பூ.வின் கண்ணியமான வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். வாழ்த்துக்களின் பூரிப்பில் இருக்கேக்க, வந்ததுங்கோ ஒரு போன். கேட்டுப் பாருங்கோ பிளீஸ்.

ஹலோ.....!

**கா.பூ.:** ஹலோ யார் பேசிறது?

**வ.வே.:** நீங்கதான் பேசிறீங்க.....

**கா.பூ.:** ஹலோ யார் பேசிறது?

**வ.வே.:** நீங்கதான் பேசிறீங்க......

**கா.பூ.:** யாரப்பா அது?

**வ.வே.:** என்னப்பா இது! நீங்கதான் பேசிறதுங்கறதை எத்தனை வாட்டி கேப்பீங்க....

**கா.பூ.:** பேசிறதைப் பாத்தா எங்கேயோ கேட்ட மாதிரித்தான் இருக்கு.

**வ.வே.:** ஆமாமா... அதுக்குள்ள மறந்து போச்சா.... படமே இன்னும் தியேட்டரை விட்டு எடுபடலை. அதுக்குள்ள வடிவேலுவை எப்புடி சார் மறந்தீங்க?

**கா.பூ:** அடடா.... வடிவேலுவா?

**வ.வே.:** அடடா வடிவேலு இல்லேங்க..... வைகைப் புயல் வடிவேலுங்க....

**கா.பூ.:** இந்த லொள்ளுக்கு மட்டும் குறைச்சலில்லை போங்க...

**வ.வே.:** சார் ஸ்டைல் சூப்பர் ஸ்டாருக்குக் கூடவே பொறந்தமாதிரி, லொள்ளு ஏங்கூட பொறந்தது சார்.

**கா.பூ.:** அது சரி, என்ன திடீர்னு கோல் போட்டீங்க?

**வ.வே.:** அதொண்ணுமில்ல சார்.... சந்திரமுகி பத்தி சூப்பர் ஸ்டார்கிட்ட பேட்டி கண்டீங்க. அதிலை அவரோடை சேர்ந்து கலக்கின என்னை வுட்டுப்புட்டீங்களே.... நம்மகிட்டையும் நாலு கேள்வியைக் கேட்டா, நாம் பாட்டுக்கு பதிலைச் சொல்லிட்டுப் போகமாட்டமா....

**கா.பூ.:** அதுக்கென்ன கேட்டுட்டாப் போச்சி.... கேக்கிறதில ஒண்ணுமில்லை. எங்க நாட்டுப் பொலிரிக்ஸ் பத்தியும் பேசவேண்டி வருமே....

**வ.வே.:** இப்புடி ஆரம்பத்திலேயே கண்ணைக் கட்டிற மாதிரி குண்டக்கா மண்டக்கா கேட்டீங்கன்னா.... எப்புடி?

**கா.பூ.:** அப்ப உங்களுக்கு ஒண்ணுமே தெரியாதா....

**வ.வே.:** தெரியுமே..... தெரியுமே..... தெரியுமே.....

**கா.பூ.:** அதுக்கு ஏன் சார் இத்தனை தெரியுமே.... ஏத்தமும் இறக்கமுமா....

**வ.வே.:** சாரி.... தெரியும் சார். நீங்க வேற... பார்த்திபன் கணக்கா எடக்கு மடக்கா கேக்கிறீங்க.... எகத்தாளம் கூடிப்போச்சு...

**கா.பூ.:** உங்க கூட இல்லாம.... வேற யாரோட சார்....

**வ.வே.:** ஆஹா..... வச்சிட்டாரைய்யா ஆப்பு....

**கா.பூ.:** சார் கேள்விக்குப் பதில் சொல்லுங்க....

**வ.வே.:** கௌம்பிட்டாரைய்யா கௌம்பிட்டாரைய்யா..... கேள்விக்கு பதில் சொல்லலைன்னா கனக்ஷனைக் கட் பண்ணிடுவாரு போல.....
எதுக்கு வம்பு... ஒங்க நாட்டுப் பொலிரிக்ஸ்தானே.... பொடலங்கா பொலிரிக்ஸ்... இதில தெரிஞ்சுக்க என்ன இருக்கு. எதிர்த்துப் பேசிறவனையெல்லாம் ஏகே போர்ட்டிசெவனைத் தூக்கி, பொட்டுப் பொட்டுன்னு போட்டுத்தள்ளுறதுதானே.....

**கா.பூ.:** அட பரவாயில்லையே.... இதெல்லாம் கூடத் தெரிஞ்சு வச்சிருக்கீங்களே....

**வ.வே.:** அதுதாங்க மதுரைக்காரங்க... எங்ககிட்ட மாட்டாம எதுவானாலும் இருக்க முடியுமா? என்ன சிலோனில நல்ல தமிழ் பேசிற தமிழங்க இருக்காங்கன்னு சொல்லுவாங்க. ஆனா... ஒங்க நாட்டில நடக்கிற கண்ராவியைப் பாத்தா தமிழன்னு ஒரு பயலும் மிஞ்சமாட்டீங்க போல இருக்கு... அட கொக்கா மக்கா ஏண்டா இப்புடி அடிச்சுக்கிட்டு சாவுறாங்க.... எல்லாப் பயலுகளையும் எங்க மதுரை மீனாட்சி ஆத்தாதான் காப்பாத்தணும்.....

**கா.பூ.:** சொரி வடிவேலு சார்... நீங்க எங்கமேல இவ்வளவு பாசமானவர்ன்னு தெரியாம இத்தின நாளா இருந்திட்டோம்...

**வ.வே.:** ஒங்களைச் சொல்லிக் குத்தமில்லப்பு... எவந்தான் வடிவேல வெளங்கிக் கொண்டிருக்கான். ஒரு பயலுக்கும் நம்ம மேல மட்டு மருவாதி இல்லாமப் போச்சே.....

**கா.பூ.:** சரி.... இத விட.... சிலோன் பத்தி உங்களுக்கு வேற என்ன தெரியும்....

**வ.வே.:** சாமி சத்தியமா சொல்லனும்னா..... நல்லா கலையை ரசிக்கிறவங்களும், வந்தவங்களை உபசரிக்கிறவங்களும் சிலோன்காரங்கதான்னு ஆத்தா அடிக்கடி சொல்லும்.... அப்புடியானவங்களா ஆளா ளுக்கு அடிபட்டு சாவுறாங்கன்னு நெனைக்கிறப் போதான் கவலையா இருக்கு....

**கா.பூ.:** சரி உங்களைப் பத்திச் சொல்லுங்களேன்....

**வ.வே.:** ப்பூ.... இது தெரியாமலா இம்புட்டு நாளும் இருந்திய.... சுருக்கமா சொல்லுறன் கேட்டுக்குங்க. மதுரையில இருந்து மரக்கறி லொறியில சென்னைக்கு வந்து ஏறாத இடமில்ல. சான்ஸ் கேட்டுப் போனா ஒரு பயலும் கண்டுக்க மாட்டேன்னு சொல்லிட்டாங்க... ஏ இராசாவின் மனசில இடம்புடிச்ச மவராசன் ராஜ்கிரன் வாய்ப்புத் தந்தாரு...... இன்னைக்கு போன வருசத்துக்கான சிறந்த நகைச்சுவை நடிகருங்கிற விருதை வாங்கியிருக்கேன். இதுக்கு நடுவுல எத்தனை குத்து வெட்டுக, குழப்பங்க..... அம்புட்டும் கடந்து ஜெயிக்கமுடிஞ்சிருக்கின்னா, ஒங்களமாதிரி மீடியாக் காரங்க குடுத்த சப்போர்ட்டும், வயிறு குலுங்கக் குலுங்க சிரிச்சுப் பாராட்டின ரசிகர்களும்தான் காரணம். எப்புடி இருந்த வடிவேலுவை இப்புடி ஆக்கிப்புட் டாங்க.....

**கா.பூ.:** ஓ.கே. சார்... எங்கட சிலோன் மக்களுக்கு நீங்க என்ன சொல்ல விரும்புறீங்க....

**வ.வே.:** என்னத்த நான் பெரிசா சொல்லப்போறன்... கதை, கதையா இருக்கணுமப்பு. கதைச்சுக்கிட்டு இருக்கக்குள்ளேயே கை வைக்கிறது தப்பு. அதுமட்டுமில்லாம சுட்டுத் தள்ளுறது மகா தப்பு..... யுத்தம் யுத்தம்னு ஒரே சண்டை போட்டு இருக்கிற சனத்தையும் கொன்னுபுடாதீங்கப்பா.... அதிலையும் தமிழனே தமிழனைக் கொல்லுறது நம்ம தலை விதியையே மாத்திப்புடும்....
ஆளுங்களைக் கொல்லுறதையும், அடிதடின்னு எறங்குறதையும் வுட்டுப்புட்டு, ஆகவேண்டியதைப் பாருங்கப்பா..... வடிவேலுதானே சொல்லுறான்னு வரவு வைக்காம வுட்டுப்புடாதீங்க புரியுதா....

**கா.பூ.:** தெங்க்யூ.... வடிவேலு சார். ஒரு ஜோக்கு சொல்லுங்களேன்.....

**வ.வே.:** ஐயையோ... ஐயையோ... நா சொன்னத பூரா நெசமுன்னு நெனைச்சிட்டீங்க போல..... அம்புட்டும் சும்மா.... ஐயோ.... ஐயோ....

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(21.07.2005 தொடங்கி 27.07.2005 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

கார்க்கடகம் - சூரியன், புதன், சனி, சிங்கம் - வெள்ளி, கன்னி - வியாழன், கேது. மீனம் - இராகு, மேடம் - செவ்வாய்.

சந்திரன் மகரம், கும்பம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.



**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் உயர்ச்சி, பண வரவு, உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், வெளியிட வாழ்க்கை, குடும்ப சுகம், உத்தியோகப் பேறு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வெள்ளி.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 03.




**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் பலிதம், செலவதிகம், நண்பர்கள் தொல்லை, வெளியிட வாழ்க்கை, பயனற்ற செயல், குடும்பக் கலகம், உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வியாழன்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 04.




**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் மாற்றம், செலவு மிகுதி, மனக்கலக்கம், உறவினர் உபத்திரவம், சுபகாரிய நன்மை, குடும்பப் பேறு, உத்தியோகக் கவலை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** புதன்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 05.




**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் கஷ்டம், வீண் பிரயாசம், பணச் செலவு, உயர்ந்தோர் நட்பு, கௌரவம், குடும்பப் பொறுப்பு, மனக் கலக்கம், உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி நன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** செவ்வாய்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 01.




**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் நன்மை, காரிய சித்தி, பொருள் இலாபம், பெரியோர் சகாயம், மனக்குறை நீங்கும், இனசன மகிழ்ச்சி, உத்தியோகக் குழப்பம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 02.




**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் குழப்பம், மனக் கவலை, பணவரவு குறைவு, பெரியோர் சகாயம், வெளியிட வாழ்க்கை, அன்னியர் உதவி, குடும்பப் பொறுப்பு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** புதன்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 05.




**இடபம் :** (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் மாற்றம், செலவு மிகுதி, உயர்ந்தோர் நட்பு, பிரயாண மிகுதி, மனக்குறையதிகம், குடும்பக் கஷ்டம், உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 07.




**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் பலிதம், பண வரவு, தூர இடப் பயணம், தேககக் கஷ்டம், மனக் கலக்கம், உறவினர் தொல்லை, குடும்ப நன்மை, உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:-** வெள்ளி.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 06.




**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் நன்மை, காரியானுகூலம், பண வரவு, தேககக் குறைவு, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 02.



**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி, பண வரவு, பூமி சேரல், வெளியிட வாழ்க்கை, மனக்குறையதிகம், குடும்ப நன்மை, உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வியாழன்.
**அதிர்ஷ்ட இலக்கம் :-** 04.



**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் சிறப்பு, காரிய சித்தி, பூமியால் இலாபம், உயர்ந்த நிலை, குடும்பப் பகை, உறவினர் தொல்லை, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** செவ்வாய்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 04.



**மீனம் :** (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி, உறவினர் பகை, வீண் மனஸ்தாபம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், ஊக்கமின்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வெள்ளி.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 06.

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


# இதய வீணை

தினமும்
மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்.... செய்திகளாய்... நமது காதுகளில்

| | |
|---|---|
| கிழக்கு மாகாணம் | 107.9, 104.8 |
| வட மாகாணம் | 92.2 |
| கொழும்பு | 105.6 |


நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Localization : | 13° East |
| Frequency : | 11013 MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |


# தாய்ப் பாசம்



ஏறக்குறைய 70 கோணல்மாணலான ஆனால், உறுதியான பற்களையுடைய முதலையின் பலம் அதன் வாயிலிலேயே தங்கியுள்ளது. ஒரே தடவையில் 3 டசின் முட்டைகளை இடும் பெண் முதலைகள் அவற்றைச் சருகுகள், இலைகளினால் மூடிப் பாதுகாக்கின்றன. சூரிய வெப்பத்தினால் பொரிக்கும் முட்டைகளில் இருந்து முதலைக் குட்டிகள் வெளிவரும்போது (குட்டிகள்) தப்பிப் பிழைப்பது அபூர்வம். அவ்வாறு தப்பிப் பிழைக்கும் ஓரிரண்டு குட்டிகளையும் தாய் முதலை தனது கண்காணிப்பில் மிகுந்த பாசத்துடன் பராமரிக்கும்.

மீன் குஞ்சுக்கு மாத்திரமல்ல, முதலைக் குட்டிக்கும் நீந்தச் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை. பொரித்து வந்த கையுடன் தாயுடன் ஆனந்தமாக நீரில் சவாரி செய்வது தான் ஆச்சரியமான விடயம்.



## 1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



**செல்வி ஜெ. தரிஹா / 25.07.2005**

திரு.திருமதி ஜெயகாந்தன் செல்வகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வி தரிஹா (தாரணி) தனது முதலாவது பிறந்த நாளை 25.07.2005ஆம் திகதி அன்று கொழும்பில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். தரிஹா குட்டியை அப்பா - அம்மா, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா - அப்பம்மா, பெரியம்மா மகேஸ்வரி, ராஜேஸ்வரி, மகேந்திரன் மாமா, மாமி, இத்தாலியில் இருக்கும் ஜோதி மாமா, நந்தினி மாமி, சித்தப்பா, அத்தைமார்கள், மச்சான்மார் அகிலன், சச்சின் மற்றும் அன்பு உள்ளங்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென்று வாழ்த்துகின்றார்கள்.



## அசைவமே..... வா.....

படத்தினைப் பார்த்தவுடன் உங்களுக்குக் குமட்டிக்கொண்டு வரலாம். ஆனால் பார்பகியூ(B.B.Q.) என அழைக்கப்படும் தீயில் வாட்டிய எலி, பூனைக் கறி, வறுத்த வண்டு வகைகள், நாய்க் கறி எனப் பரபரப்பாக இயங்கும் இந்த உணவகம் அமைந்துள்ள ஷென்ஷான் எனும் நகரத்தின் வரலாறுதான் சுவாரசியமானது.

தற்போது சீனாவின் வசமிருக்கும் ஹொங்கொங் பிரதேசம் பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்தபோது சீனாவிலிருந்து சட்டபூர்வமற்ற முறையில் வெளியேறி, ஹொங்கொங்கில் குடியேறப் பலர் முற்பட்டனர். சீன அரசு தனது எல்லைகளைப் பலப்படுத்தவே குடிபெயர முற்பட்ட பலர் குடியமர்ந்த இடமே தென் சீன நகரமான ஷென்ஷான் ஆகும்.

அவ்வாறு குடியமர்ந்த பலர் தமது சொந்த முயற்சி, உழைப்பினால் தேடுவாரற்று இருந்த ஷென்ஷானை, சீனாவின் முக்கிய நகரங்களுள் ஒன்றாக உருவாக்கி விட்டனர். அப்படிப்பட்ட ஒருவரின் கடும் பிரயத்தனத்தில் உருவானதே நீங்கள் காணும் நாக்கைச் சப்புக்கொட்ட வைக்கும் (சீனர்களின்) உணவகமாகும்.

## 2ஆவது பிறந்த நாள் வாழ்த்து

**வ.லவன்சியா**



**22.07.2005**

பிரான்ஸில் வசித்து வரும் வதனபாஸ்கரன் - தமிழ்ச்செல்வி தம்பதிகளின் செல்வப் புதல்வி லவன்சியா தனது இரண்டாவது பிறந்த தினத்தை 24.07.2005 ஞாயிற்றுக்கிழமை அன்று அப்பா - அம்மா, சித்தப்பா மற்றும் நண்பர்கள், உறவினர்களுடன் தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பாமார் - அப்பம்மாமார், அம்மப்பாமார், அம்மம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், தம்பிமார், மச்சான்மார், மச்சாள்மார், பாட்டிமார் அனைவரும் பல கலைகள் கற்று பல்லாண்டு காலம் வாழ விநாயகர் அருளை வேண்டி வாழ்த்துகிறார்கள்.

தகவல்: எஸ். செல்வகுமார் மாமா (டுபாய்)

## 10ஆவது பிறந்த நாள் வாழ்த்து

நவாலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த திரு.திருமதி திருநாவுக்கரசு - லிங்கேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி லட்சனி தனது 10ஆவது பிறந்த நாளை 23.07.2005 அன்று சுவிஸில் சூரிச் மாநிலத்தில் அமைந்துள்ள தமதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா - அம்மா, தங்கை தளிரினி, சுவிஸிலுள்ள சித்தப்பா - சித்தி, அண்ணாமார்கள் பிரவீன், பிரேன் யோண்சன், மஞ்சு அக்கா குடும்பம், தம்பிமார்கள் மாருதன், ஜெருசன், ராஜாமாமா குடும்பம், நகுலேஸ்வரன் மாமா குடும்பம், காந்தன் மாமா குடும்பம், ஆனந்தன் மாமா குடும்பம், செல்வா மாமா குடும்பம், சிவச்செல்வம் மாமா குடும்பம், லுவீண்சன் மாமா, நேசன் மாமா குடும்பம், தாஸ் மாமா குடும்பம், கதிரைமலை மாமா, லண்டனிலுள்ள அண்ணா வீந்தன், குகன் மாமா குடும்பத்தினர், சாந்தன் மாமா குடும்பத்தினர், ஜேர்மனி சிவாஜினி பெரியம்மா குடும்பம், திருகோணமலையைச் சேர்ந்த உதயன் மாமா குடும்பம், மட்டு. துறைநிலாவணையைச் சேர்ந்த ஆசைத்தம்பி மாமா குடும்பம், யாழ்ப்பாணத்திலுள்ள பெரியம்மாமார்கள், விக்கினேஸ்வரி, நாகேஸ்வரி குடும்பத்தினர் பெரியத்தை சின்னத்தம்பி புவனேஸ்வரி சின்னத்தை சின்னராஜா - மல்லிகாதேவி குடும்பத்தினர், அப்பப்பா மருதக்குட்டி, பேராதனையிலுள்ள கிருஷ்ணா அக்கா மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.



23.07.2005

**செல்வி தி. லட்சனி**